உ

ஜோதிமயம்.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)

ஆசிரியர் : தமிழ்ப்பூஷணம் ஸ்ரீமான் - வீ. ஆர். கேப்க்வார்.

தொகுதி 2	ருத்ரோத்காரி௵ பங்குனி௴ 1924௵ மார்ச்சு௴	பகுதி 2

கடவுள் வணக்கம்.

மறை முடி குலவிய பிரம ரசத்தினை
  மருவு அடியவர் உள மலர் வாசத்தினை
நிறை சர அசர உயிர் பூரணத்தினை
  நிமல கதிக்கு ஒரு வித்தினை முத்தைச்
சிறைமயில் உதய சட் ஆனன ரவியைத்
  தேவர்கள் தொழவரு தேவைக் கானவக்
குறைவு அறுவளம் நிறை போரூர் இறையைக்
  கூவாய் வர நீ கூவாய் குயிலே.

(இ-ள்.) வேதத்தின் சிரசினில் குலாவிவிளையாடும் பிரமத்தின் சாரத்தை திருவருள் பெற்ற அன்பர்களின் இதயத்தாமரையில் வாசம் வீசும் மணத்தை இயங்கும் இயர்பொருளும் நிலையில் பொருளுமாயுள்ள உயிரினிடம் நிறைந்திருக்கும் பரிபூரணமான ஸ்வரூபத்தை, மலரஹிதமாகிய சித்தாந்தக்கனிவிளையும் ஒப்பற்ற வித்தை, பத்தர்கள் விஷய வெப்பம் ஒழிய அணியும் முத்தரத்தை, அழகு பொருந்திய இறகுகள் நிறைந்த மயில் வாகனத்தின்மீது ஆறுதிரு முகங்களுடனும் வருகின்ற சூரியனை, இந்திரன் முதலிய தேவர்களும் வணங்கவரும் பெரிய தெய்வத்தை, ஏனையமானிடப் பிறவியினையுடையவர்களுக்கெல்லாம் குளிர்ச்சி மிகுந்ததான அருள் என்னும் நிழலைத் தருஞ் சோலையை, செல்வத்துள் சிறந்ததான அருள்

செல்வம் நிறைந்ததான திருப்போரூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிரானின்ற முருகக்கடவுளை வரும்படியாக குயிலே! நீ கூப்பிடுவாயாக.

அநுக்கிரக சத்தியொன்றையே யுடைய பராசக்தி யுக்தமாகிய பரப்பிரம்மமும், அருள் சிந்தனை வயப்பட்டவராகிய அடியார் இருதயத்திடமாக விளங்கும் சிவமும், அத்வைத இலக்ஷணத்தால் சர அசரங்களில் நிறைந்திருக்கின்ற அருளும், அவ்வருளே திருமேனியாகவரும் குருவடிவும், அவ்வருள் குறியைக்காட்டும் சங்கம வடிவும்; தேவர்கள் வேண்டு கோளுக்கு இரங்கி யருளத் திருவுருக் கொண்ட இலிங்கவடிவும், எல்லா உயிர்களுக்கும் தன் அருட்குடை நிழற்றச் சிருஷ்டியைமேற்கொண்டு காத்த கடவுளும், திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளே யென்பதனை பிரமரசத்தினை, அடியவர் உளமலர் வாசத்தினை, சர அசர உயிர்ப் புரணத்தினை, கதிக்கு ஒரு வித்தினை, முத்தை, சட் ஆனனரவியை, தேவர்கள் தேவை, காவை, போரூர் இறையை எனவித்து கூறினர். இதனால் பரப்பிரமும் சிவமும் அருளும் அவ் அருளால் கொள்ளும் குருலிங்க சங்கம வடிவுமாகிய இவ்வாறும் ஆறுமுகக் கடவுளே யெனக் கொள்ளுக. சிறைமயிலுதய சடானனரவியை என்றதானது ஆதவன் உதயமாவது நீல நிறத்தையுடைய கடலிலுள்ளதான உதயகிரியினிடமாதல் பற்றி அதுபோலவே அறுமுகச்சூரியனும் கடல் போலும் பரந்த கலாபத்தினையுடைய மயூர மலையின்மேலெழுந்தருளுவதால் கலாபத்தைக்கடலாகவும் மயூரத்தை மலையாகவும் அறுமுகனை ரவியாகவும் உருவகப்படுத்தினமை காண்க இதனை "உலகம் உவப்பவல னேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டு ஆங்கு ஓ அற இமைக்கும் சேணர் விளங்கு அவிர் ஒளி" என்றமைக்கு நச்சினார்க்கினியர் கூறிய கூறியவாற்றாலும் விளங்கும். ஓரேமுகத்தையுடைய இரவி ஊனக் கண்ணை மறைக்கும் பூத இருள் ஒன்றையே யொழிக்கவல்லது. அகவிருளை யொழிக்கக் கூடியதன்று. புறம்பே காணப்பெறாததான அகவிருள் ஆன்ம கோடிகளினுடைய ஷட்குண அறிவினும் நிறைந்துள்ளதாதலால் அதனைபழிக்கவும் ஒழிக்கவும் அவ்வாறு திருமுகங்களும் வல்லமை பொருந்திய தாயினமையின் சடானனரவியை என்று கூறினர் என்பதே மிக்க பொருத்த முடைத்து.

பத்திரிகாசிரியர்.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

சென்னை, ருத்ரோத்காரிஹூ பங்குனிமீ

1924ஹூ மார்ச்சுமீ

தேவை

ஸர்வத்திற்குங் காரண பூதரான கடவுள் உலகத்தின் நோக்கத்தையும் அதன் தேவைவையும் அவ்வச்சமயங்களுக்கு வேண்டியவாறு செய்கின்றார் என்பதை யெவரும் மறுக்கமுடியாது. எது எது எந்த எந்த காலத்தில் நடந்தே தீரவேண்டும். அது போலவே தற்கால உலகத்தில் தேவையென்னவென்பதை யநுசரித்து பலவிஷயங்கள் முன்னிற்கின்றன. இவ்விஷயங்கள் ஒன்றெனக்காணமல் பலவயப்பட்டிருக்கின்றதென்று நாம் கூறலாம். எதனாலெனின் சிலர் ஸ்வராஜ்யம் வேண்டுமென்கின்றனர். சிலர் அரசாங்கபதவி வேண்டுமென்கின்றனர். இன்னும் சிலர் எதெதுவோ விரும்புகின்றனர். முக்கியமாய் வேண்டுவதெது ? என்பதையும், எதை யநுசரித்தால் மற்றவைகள் தானேவந்து விடுமென்பதையும், தற்சமயம் நமக்குத் தேவையானது என்ன வென்பதையும் தெரிந்துக்கொள்ள வேண்டுமல்லவா ? நமக்கு வேண்டியது தான் என்னே ?

ஜீவாதாரமானதும் சகல விஷயங்களுக்கும் அடிப்படையானதும் அஸ்திவாரம் போன்றதுமானது கல்வியே யன்றோ? அதிலும் தாய்ப்பாஷையே உத்திருஷ்டமானது. தாய்ப்பாஷை யொழிந்த ஏனையகல்வியினால் பயனில்லையெனினும் சுயபாஷையைப் படித்தபின்னரே பிறபாஷைகளைக் கற்கவேண்டியது. தாய்ப் பாஷையிலிருக்கும் விசேஷங்கள் பல என்பது எவரும் அறிந்ததன்றோ? முக்கியமாய் நமது தாய்மொழியில் உள்ள விஷயங்களை ஈண்டு கூறுதும். அவை வருமாறு:—

(1) தாய்மொழிப் பயிற்சியினால் நற்குண நற்செய்கையுண்டாகும்.

(2) தாய்மொழிப் பயிற்சியினால் ஈவு, இரக்கம், ஜீவ காருண்யம் ஏற்படும்.

(3) தாய்மொழிப் பயிற்சியினால் கால் நடை விருத்தியும் விவசாயமும் விருத்தியடையும்.

(4) தாய்மொழிப்பயிற்சியினால் பெருந்தன்மையும் சாத்வீக குணமும் ஏற்படும்.

(5) தாய்மொழிப்பயிற்சியினால் வீரமும் தீரமும் ஏற்படும்.

(6) தாய்மொழிப் பயிற்சியினால் தியாகமதியும் பரோபகாரமும் ஏற்படும்.

(7) தாய்மொழிப்பயிற்சியினால் தன்னம்பிக்கையும் பூரணதைத்தொழிலும் விருத்தியெய்தும்.

(8) தாய்மொழிப்பயிற்சியினால் அடிமைத்தனம் நீங்கி விஸ்வாசம் விருத்தியடையும்

(9) தாய்மொழிப்பயிற்சியினால் ஆசார அநுஷ்டானங்கள் விருத்தி.

(10) தாய்மொழிப்பயிற்சியினால் நிதானமும் மோக்ஷமும் ஞானமும் சித்திக்கும்,

இன்னும் இதுபோல் பல விஷயங்கள் விருத்தியடையும் என்பதில் சந்தேகமுமில்லை. ஆதலால் எவரும் சுபக்கல்வியாகிய தாய்மொழியை பராமரித்து வருவதுதான் மிக்க விசேஷமானது.

நாம் விரும்பும் எவ்வித சௌகரியமும் நமக்கு சித்திக்கவேண்டுமானால் நாம் பூரண திருப்தியுடனும் நம்பிக்கையுடனும் தாய்மொழியபிவிருத்திக்கு உழைக்க வேண்டும், தாய்மொழியபிவிருத்தியடையாத வரையில் நமது விசேஷித்த புராதனமானதும் மேம்பாடானதும் உயர்தரமான துமான நாகரீகம் விருத்தி யெய்தாது. நவீன நாகரீகமோ நம்மைப்படுகுழியில் வீழ்த்துமென்பது எவரும் அறிந்த விஷயமேயாகும். ஓம் தத் ஸத். பத்திராதிபர்.

பூதவதி என்னும் புனிதவதி

அல்லது

காரைக்காலம்மையார் புராணம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடந்த பத்திரிகையில் 18-வது பாட்டிற்குப் பொருள் கூறிய சமயம், 'வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலை கண்டு, நன்றன் அடியார்' என்பது வரையுங் கூறினோம். இனி 'நாதன்றன் அடியாரைப்பசிதீர்ப்பேன்' என்பதனால் புனிதவதியாருக்கு மகேஸ்வர பூசையாலுள்ள மனவுறுதியை விளக்குவது கருதினர் போலும். சிவனடியார்களைச் சாதிகுணம் குறிக்காமல் சிவனெனவேயெண்ணிப் பக்திபுரிய வேண்டுமென்பதனை.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு வானாளத்தருவரேனும், மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம் மாதேவர்க் கேகாந்தரல்லராகில், அங்கம் எல்லாம் குறைந்து அழுகும் தொழுநோயராய் ஆவுகத்துத் தின்றுழலும் புலயரேனும், கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகில் அவரன்றோ யாம்வணங்கும் கடவுளாரே" 115 என்றும்,

"புலையரேனு மீசன் பொலன் கழலடியிற்புத்தி
நிலையரேலவர்க்குப்பூசை நிகழ்த்துதல் நெறியேயென்றுந்
தலையரே யெனினுமீசன்றமரைத் தாளினைச
மலரெனிலிபற்றும் பூசைப்பலந்தருவாரேயாமே" 116 என்றும்,

"எள்ளற்படு கீழ்மக்களேனு மிழிந்தகுலத்தோரானாலும்
வள்ளற்பரமன் றிருநீறு மணியுமணிந்தமாண்பினரை
யுள்ளத்துள்ளே யிருபோது முணர்ந்து தெருண்டு சிவனெனவே
கொள்ளத்தகைய வறிவினரே பிறவிக் கடலிற்குளியாதார்" 117 என்றும்,

"பந்தமகன்ற சிவபத்தர் பாதம் விளக்கும் புனற்குழியில்
வந்து பிறந்து மூழ்கியதில் வைகும் புழுவின் பெரும்பேறு
முந்து கங்கை முதலவா முற்றும் படிந்து தீவினைகள்
சிந்து மந்தணருமே சேரா ரென்று மறைசாற்றும்" 118 என்றும்,

"விள்ளரு நற்சிவ வேடத்தோர் பொருள்
கொள்ளைகொள் சிற்பினும் குறைகள் கூறினும்
பிள்ளைமையருப்பினும் பிழைகள் செய்யினும்
எள்ளுதலிலனெனிலீசற் கன்பனும்" 119 என்றும்,

"சங்கமந்தனக்கொரு சாதியுன்னினு
னங்கையினமர் தருமரற்கு முன்னினன்
சங்கரனொடு சரந்தமில்வேறெனு
மங்கைவனறிவரு மளற்றழுந்துவான்" 120 என்றும், கூறப்படுவதினால் சிவனடியாரின் பெருமையைப்பற்றிக்கூறி இம்மகேசுரபூசையினும். சிறந்தபுண்ணியம் வேறில்லை யென்பதைக் கூறுமிடத்து,

"படமாடக் கோயிற் பரமற் கொன்றீயி
னடமாடுங் கோயினம் பற்கங்காகா
நடமாடுங் கோயினம் பற்கொன்றீயிற்
படமாடுங் கோயிற் பரமற்கங்காமே" 121 என்றும்,

"தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்திசைத்தானே" 122, என்றும்,

"அகரமாயிர மந்தணர்க் கீயிலென்
சிகரமாயிரஞ் செய்துமுடிக்கிலென்
பரமயோகி பகலூண்பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந்தானே" 123 என்றும்,

115, தேவாரம் 116, சிவதருமோத்திரம் 117, பிரமோத்திர காண்டம் 118, 119, 120, பிரபுலிங்கலீலை. 121, 122, 123, திருமந்திரம்.

" ஆறிடு வேள்வியருமறை நூலவர்
கூறிடுமந்தணர் கோடிபேருண்பதி
னீறிடுந்தொண்டர் நினைவின் பயனிலே
பேறெனிலோர் பிடிபேறது வாகுமே" 124 என்றும்,
" மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னெட்டிட்ட பண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டங் காணாதே போதியோ பூம்பாவாய்" 125 என்றும்,
" மறமலியுலகவாழ்க்கையே வேண்டும்
வந்துநின் அன்பர்தம் பணியா மறமது கிடைக்கின்" 126 என்றும்,
" மகேச்சுர தருமத்தினுயர்ந்த தருமமில்லை" 127 என்றும்,
கூறப்பட்டிருக்கின்றமையினால் மாகேச்சுரதருமமே எல்லாதருமத்தினும் சிறந்ததெனக் கருதிய அம்மையார் 'நாதன்தன் அடியாரைப் பசி தீர்ப்பேன் என நண்ணி என்று கூறினர். அதிதி தன் வீட்டிற்கு வந்தமாத்திரத்தில் கால் கழுவ நீர் தருதல் முதலில் செய்யவேண்டிய பணியென்பதை பாதங்கள் விளக்க நீர் முன்னளித்து என்றார். அம்மையாரும் தன் கிருகத்தையடைந்த அதிதிக்கு முதல் செய்ய வேண்டிய உபகாரத்தைச்செய்து அவரையுண்பிக்கவேண்டுமென்னும் உண்மையன்பு கொண்டு அவரையுபசரித்து உட்காரவைத்து உத்தமமான இலையையிட்டு துன்பத்தை யொழிக்ககூடிய நல்ல விருந்தாக மதித்து இனிமையான உணவுபடைப்பதற் காயத்தமானார்.

(தொடரும்,)
V. R. Gaekwar.

124, திருமந்திரம் 125, தேவாரம் 126, தாயுமான சுவாமிகள் பாடல் 127, அருணாசலமான்மியம்.

ஆனந்தசுந்தரி
அல்லது
அதிர்ஷ்டத்தின் ஆர்ப்பாட்டம்.

அத்தியாயம் 7.

விடிந்ததும் பேசும் நியாயம் இதுவேயோ ?

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவர்கள் என்னை நித்திரையினின்றும் எழுப்பி விடிந்ததும் பேசலாம் என்று சொன்னார்களே அதுதான் போலும் இது வரை நடந்து வந்தது போலும் என்று கூறவே சபை சிறிப்பினால் ஆரவாரமாயிற்று. அரவமடங்க சிறிதுகாலம் சென்றதென்றே கூறவேண்டும்.

மங்கலபுரியின் மந்திரி சிறிது நேரம் யோசித்துத் தமது புத்திரியையும் அரசனது புத்திரியையும் அழைத்து வரும்படியாக்ஞாபித்தார்.

சிறிது நேரத்திற்குள் இருவரும் வந்து சேர்ந்தனர். அவ்விருவரையும் மந்திரி தனியறையில் (Chambers) அழைத்துச்சென்று விஷயங்களைக்கேட்க அவர்களிருவரும் தங்களுக்கும் வித்யாகுருவுக்கும் நடந்த சம்பாஷணையையும், அதன் பின் தாங்கள் செய்த விஷயங்களையும் தெளிவாய்க் கூறினார்கள்.

மந்திரியார் ஒரு சேவகனை விளித்து வித்தியாகுருவாகிய பிராமணனையழைத்து வரும்படி யாக்ஞாபிக்கச் சிறிது நேரத்திற்குள் அவரும் வந்து சேர்ந்தார்.

மந்திரியார் இப்பெண்கள் இருவர் முன்னிலையிலும் அவரை விசாரிக்க அவரும் விஷயம் விளங்கிப்போயிற் றென்றுணர்ந்தவராய் மௌனம் சாதிக்கலாயினர்.

மந்திரியார் உடனே அப்பிராமணனைத் தூக்கிலிட உத்தரவளித்தலும் கொலைஞர்கள் அவரைப் பற்றிச்சென்று சிறையிலிட்டனர்.

மந்திரியார் வெளியேவந்து திரிகூடசுந்தரம் பிள்ளையை நோக்கி "உமது குமாரனுக்கென்று உம்மால் நிச்சயம் செய்யப்பட்ட பிரபு பரசுராம பிள்ளையின் புதல்விக்குக் கண்ணப்பனே நாயகனென்று பிரமாவிதித்திருக்கான்போலும். ஆகையினால் நீர் உமது குமாரனுக்கு வேறுபெண்ணைத் தேடி விவாகம் செய்துவிடும் விவாகச்செலவு சமஸ்தானத்திலிருந்து கொடுக்கப்படும்'' என்று கூறிவிட்டு, பிரபுபரசுராம பிள்ளையை நோக்கி "உமது குமாரத்திக்கு நடத்தவேண்டிய சீதனம் முதலியவைகளை இப்போதே நடத்த ஏற்பாடு செய்யும் என்று கூறினர்.

பிறகு ஜனங்களை நோக்கி "பிரஜைகளே! இன்று நமது குமாரத்தியையும் அரசர் பெருமான் குமாரத்தியையும் ஸ்ரீமான் கண்ணப் பிள்ளை அவர்களுக்கு பாணிக்கிரகணம் செய்யப்படுவதால் யாவரும் விவாகமகோற்சவத்தை தரிசித்து விருந்துண்டு செல்லவேண்டுகின்றேம்'' என்று கூறி சேவகர்களையும் காரியஸ்தர்களையும் கூப்பிட்டு விவாகசாமக்கிரிகைகளையும் போஜன பதார்த்தங்களையும் தயாரிக்க ஏற்பாடு செய்தார். புரோகிதரும் வந்து சேர்ந்தார். வேத கோஷ்டமுழக்கமும் மங்களவாத்தியமுழக்கமும் எங்கனும் ஏற்பட்டது.

இராஜசமஸ்தானத்துக்காரியம் என்றால் சொல்லவேண்டுமா? எல்லாம் தடபுடல். எல்லாம் விநோதம் எல்லாம் பரபரப்பு. முகூர்த்த வேளையும் கூடிவிட்டது இராஜனும் இராணியும், மந்திரியும் அவர் பத்தினியும், காரியஸ்தர்களும், தளகர்த்தர்களும், போர் வீரர்களும் சிப்பந்திகளும் பெரிய மனிதர்களும் திரள் திரளாகக் கூடிவிட்டனர். மூன்று பெண்களுக்கிடையில் நமது இளங்காளை

யாகிய கண்ணப்பன் மிகுந்த லக்ஷணத்தோடும் விளங்கினன். புரோகிதரும் மந்திரங்களைச்சொல்லி மூவருக்கும் வரிசைகிரமமாகவே மங்கல்யம் சூட்டிவைத்தார்.

கலியாண சடங்குகளெல்லாம் ஒழுங்காய் நடை பெற்றது. விருந்துகள் வரிசைக்கிரமமாக நடந்து கொண்டிருக்கின்றன.

கண்ணப் பிள்ளையவர்களுக்கு அரசனது வசந்த வாசஸ்தல அரண்மனையும் இன்னும் அநேகமும் கொடுக்கப்பட்டன.

பிரபு பரசுராமபிள்ளையவர்களும் தன்குமாரத்திக்கு வேண்டிய சீதனப்பொருள்களும் கொடுத்தார்.

அன்றே கிரகப்பிரவேசம் செய்ய உத்தமமென்று புரோகிதர் கூறவே உடனே வசந்த வாசஸ்தல அரண்மனை செல்ல ஏற்பாடுகள் செய்து புறப்பட்டனர்.

அத்தியாயம் 8.

கிருஹப் பிரவேசமும் முடிவுரையும்.

மங்கலபுரியின் வளப்பு சாதாரண நாட்களிலேயே மிகுந்து காணப்படும் என்றால் விசேஷநாட்களில் அதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

முதலில் குதிரைப்படையும், இரண்டாவது காலாட்படையும், மூன்றாவது இரட்டை மாடுகள் பூட்டிய வண்டிகளில் சாமான்களும், பணியாளர்களும், அதன் பின்னர் பணிப்பெண்கள் கையில் பலவித வஸ்துக்களடங்கிய தாம்பாளங்களை யேந்தியவர்களாய் நடந்தும், அதன்பின்னர், யானையின்மீது அம்பாரியிட்டு மாப்பிள்ளையாகிய கண்ணப்பனும், அவன்பின் மூன்று பல்லக்குகளில் மூன்று மங்கையரும், அதன் பின்னர் குதிரை வீரரும் அவர்களின் பின்னால் இன்னும் அநேக சாமான்களும் ஆக வசந்த வாசஸ்தலபங்களாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இவ்விதம் போய்க்கொண்டிருக்கும் சமயம் கண்ணப்பன் தன் வீட்டுக்கு முன் வந்து யானையை நிறுத்திக் கீழிறங்கித் தனது மனைவியர் மூவரையும் இறங்கச்செய்து தன் வீடுநோக்கி நடந்தான்.

கண்ணப்பன் தாயாகிய ஆனந்த சுந்தரியம்மாள் தனது குமாரனுகிய கண்ணப்பன் கொள்ளுவாங்கி வருவதாக நேற்று சென்றவன் இதுவரையும் வாராமையினாலும், பசிப்பிணியோடு சுரப்பிணியும் வருத்த வருந்திக்கொண்டிருந்தவள் வீதியில்போகும் ஆரவாரத்தைக் கேட்டு வேடிக்கைப் பார்க்க வீட்டு வாசற்படியில் நின்றிருந்தவள்

தன் வீட்டின் முன்னர் யானையினின்று இறங்கியவனையும் அவனுடன் மூன்று ஸ்திரீகள் பல்லக்கினின்று மிறங்கிவருவதையும் கண்டு, தனது புத்திரனென்றெண்ணுதும் தனக்கே தெரியாமையினாலும், ஒருவித வெட்கத்தோடும் வீதியில் நிற்கமாட்டாமல் உள்ளேபோய் விட்டாள்.

இதே சமயம் கண்ணப்பனும் தன்மூன்று மனைவியருடன் வீட்டினுட்சென்று தாயையணங்கினன்—புருஷன் வணங்குவதைக் கண்ட மங்கையர் மூவரும் வீழ்ந்து வணங்கினர்.

ஆனந்தசுந்தரி தன்னை வணங்கியவனை நிமிர்ந்து பார்த்தபோது தான் தனது குமாரன் கண்ணப்பன் என்றுணர்ந்து அவனையும் மருமக்களையும் வாரியாலிங்கனம் செய்து கொண்டு திகைத்து நின்றாள்.

கண்ணப்பன் தன் தாயைநோக்கி "அம்மா! நீ கூறியபடியே ஏற்பட மூன்று சகுனங்களின் பயனாய் மூவரையும் மணந்து வந்தேன்" என்றான்.

ஆனந்தசுந்தரியும் ஆனந்த பரவச மடைந்தனள். யாவரும் வசந்த வாசஸ்தல அரண்மனையனுகி சுகமேயிருந்தனர்.

* * *

சிலகாலத்திற்குப் பிறகு அரசன்வயோத்திக பருவமடைந்ததினாலும், ஆண்சந்ததியின்மையினாலும் தனது மருமகனாகிய கண்ணப்பனுக்கு தனது ராஜ்யத்தை மகுடாபிஷேகம் செய்து வைத்தான்.

* * *

கண்ணப்பனும் மூன்று மனைவியரோடும் நான்கு ஆண்சந்ததிகளோடும் தன் தாயாரோடும் சந்தோஷமாய் மங்கலபுரியை நீதி முறை பிறழாது அரசாண்டு வந்தான். * * *

ஆனந்தசுந்தரியும் தன் பேரன்மார்களோடு குதூகலமாய் காலங் கழித்து வந்தாள். சுபம்! சுபம்!! சுபம்!!!

பொங்கு மங்களம் எங்கும் தங்குக.

முற்றிற்று.

கடிதம்,

எனது அன்பார்ந்த ரஞ்சிதனே!

நீ நின் திருநாமத்திற்கு ஒப்பனையாக திங்கள் தோறும், இதிகாசம், கதை, காவ்யம், புராணம், நவீனம் முதலிய அறிய விஷயங்களைப் புனைந்து கொண்டு வெளிவருகின்ற நின்னை நான் கண்டது, மிக பாக்கியசாலியே யன்றி வேறல்ல. ஆனால் நீ பிறந்தது முதல் ஒரு

வருடமாக நான் நின்னை பாராமலிருந்தது மிக்க விசனிக்கத் தக்கதே நின்னை நான் அருந்தமிழ ஆத்ம நண்பனென்று சகோதரவிசுவாசத்தோடு உன்னிடம் வாஞ்சையாயிருக்கிறேன். ஆனதால் நீ திங்கள் தோறும் மறவாமல் என்னிடம் வந்து ஆனந்தம், நற்போதனை, முதலியவைகளினின்று சந்தோஷப்படுத்தி நின் அறிய புத்தி, யுத்தியை ஊட்டி வருவாயென நம்புகிறேன். நின்னை நான் கண்ணுற்றதே பரமானந்தத்தைக் காட்டிலும் மேலானதாயிருக்கிறது. என்னைப்போல் உன்னை இன்னும் அநேகர் விரும்புமாறு நானும் பிரயாசைப்படுகிறேன். நீ திங்கள் தோறும் வந்து என்னை சந்தோஷப்படுத்திக் கொண்டிருக்கவேண்டுமென்றும், நீ நீ குளிகாலமாக இவ்வுலகில் சுத்தி ஆலையவேண்டுமென்றும் இறைவனை இரஞ்சுகின்றேன்.

நின் அன்பை மறவாத நண்பன்.

A. S T மஹா ராஜ,

திரவிய பட்டணம் சுரண்டை.

உருத்ராக்கம் பூணவேண்டிய தவசியமே.

(8 ம் பக்கத் தொடர்ச்சி.)

ருத்திராக்ஷத்தைப் பார்த்தால் லக்ஷம்பங்கு புண்ணியமும், தொட்டால் கோடிபங்கு புண்யமும்; தரித்தால் நூறு கோடிபங்கு புண்ணியமும் அடைகிறான் என்று சாஸ்திரங்களில் காணப்படுகிறது இன்னும் ருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொண்டு ஜெபம் செய்கிறவர்களுக்கு அதிகமானபலன் என்றும் சொல்லப்படுகிறது. ருத்ராக்ஷம் பிரமாணத்தில் மூன்றுவிதம். அவையாவன:— நெல்லிக்காய்ப் பிரமாணமுள்ளது. இலந்தைப்பழப் பிரமாணமுள்ளது, கடலைப் பிரமாண முள்ளது.

நெல்லிக்காய் பிரமாணமுள்ள ருத்திராக்ஷத்தை அணிந்தால் சகலத்துக்கும் மேலான புண்யத்தை உண்டு பண்ணுவதாயிருக்கிறது இலந்தைப்பழப் பிரமாணமுள்ள ருத்ராக்ஷத்தைத் தரிப்பது கடலைப் பிரமாண முள்ள ருத்திராட்சத்தை அணிவதின் பலனைக் காட்டிலும் பலமுவ்ளதென்று கூறுகிறது

பூமியில் பரம சிவாக்ஞையால் நல்ல ருத்திராட்சங்கள் ஜாதிபேதத்தையுடைய விருட்சங்களாயின.

வெள்ளைவர்னத்தையுடைய ருத்திராட்சங்கள் பிராமண ஜாதியென்றும், சிவப்பு நிறமுள்ளது க்ஷத்திரிய ஜாதியென்றும், பொன்னிறம் வைசியஜாதியென்றும், கருப்பு நிற சூத்திர ஜாதியென்றுஞ் சொல்லப்படுகின்றன

தாம் பிர நிறமுள்ளதும், அழகுள்ளதும், கெட்டியானதும், பருமனுனதும், முள்ளுகளோடே கூடியதுமான ருத்திராட்சங்கள் மேன்மையானவை என்றும்: புழுக்கடியுள்ளதும், வெட்டுப்பட்டதும், உடைந்ததும் முள்ளில்லாததும், நோய்கொண்டதும், உருண்டையல்லாத்துமான ஆறுவித ருத்ராட்சங்களை அணியக் கூடாதென்றும், தன்படியாய் துவாரத்தையுடைய ருத்திராட்சம் உத்தமம் என்றும் கூறுகின்றன.

ஒரே விதமாகவும், அழகாகவும், கெட்டியாகவும், நன்ருய்ப் பழுத்ததாகவும், பட்டுக்கயரோடு சேர்ந்ததாகவும், சமமான முகத்தையுடையதாகவும் இருக்கிற ருத்திராட்சங்களை விம்வகியாயுள்ளவன் சகல சரீரங்களிலும் தரிப்பான்.

உரைகல்லில் தங்கநிறமுள்ளது உத்தமமான ருத்ராட்சமென்றும், சிவ பூஜை செய்கிறவர்கள் அதைத் தரிக்க வேண்டுமென்றும், வர்ன பேதத்துடன் ருத்திராட்சங்கள் தரிகக்தக்கதெனவென்று விதிக்கப்படுகின்றன. ஆனல் அவ்வித ருத்திராட்சங்கள் கிடைப்பது அரிதாயிருப்பதால், கிடைந்தமட்டிலும் ருத்திராட்சத்தைத் தரிக்க வேண்டும்

விருட்சபதத்துக்குப் பொருத்தமான வேற்றுமையுடையதாகப் பிரயோகங்காணப் படுவதால், வெளுப்பு, சிவப்பு, பொன்னிறம், கருப்பு, இந்த நிறங்களை யுடைத்தாயிருக்குந்தன்மை விருட்சங்களுக்கே தரிக்கத்தகுந்ததாய் அங்கீகாரம் செய்யப்பட்ட அந்தமரத்திலிருந்து உண்டான பழங்களுக்கல்ல, வெண்மையான மரத்திலிருந்துண்டாயிருக்குந்தன்மையோ வென்ருல் தூரதேசஸ்தர்களான நம்மைப்போன்றவர்களுக்குக் கிடைப்பது அரிது. வருக்தத்தின் பேரில் கிடைப்பதால் அது கிரகிக்கத் தகுந்ததென்பதில ஐயமில்லை.

பொன்னிறமுள்ளதும் துவாரத்துடன் கூடியதும், அழகானதும், அன்னியர்களால் தரிக்கப்படாததும், ஆன ருத்திராட்சத்தை, உச்சி, கழுத்து, காது, கரம் இவைகளில் எதிலாவது தரித்தால்சுபம் உண்டாகும், வர்னபேதத்துடன் கிடைக்கும் ருத்திராட்சம்தரிப்பது மேலானது. அப்படிக்கிடையாத பட்சத்தில் கிடைத்தமட்டும் தூஷியாமல் தரிப்பது நலம்.

சிவபுராணத்தில் சிவதர்மத்தைச் சொல்லுகிற வாயு சம்ஹிதையில் வர்னத்துக்குத் தகுந்த ருத்திராட்சம் நியமமானது. நான்கு வர்னத்தாருக்கும் கிரமமாக வெள்ளை, சிவப்பு, பொன்னிறம், கருப்பு நிறங்கள் இந்நிற மரத்தின் ருத்திராட்சங்கள தரிக்கத் தகுந்தன கிடையாத பட்சத்தில், கிடைத்தமட்டிலும் தூஷியாமல்தரிக்கவேண்டும்.

அதிலும், மேலானது தணிந்தவர்களால் தரிக்கத்தகாது, தரியாவிட்டாலோ ரோசமும், தரித்தால் இஷ்டசித்தியும் உண்டாகிறது.

பஸ்மதாரணம் போல் எப்பொழுதும் ருத்திராட்சதாரணம் விரும்பத்தகுந்தது. நித்திய சப்தம் கொடுத்ததால், அதைத் தாரணஞ் செய்யாமலிருப்பது கொடியகுற்றம்.

ருத்திராட்சதாரணத்தைப்பற்றிய இந்த விதிகள் பலனை இவ்வளவென்று சொல்ல முடியாதென்று பரமசிவனுக்குப் பிரியமான ஸ்காந்தபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கழுத்து, தலை, பூனூல், காது, இரண்டு கரங்கள், இவைகளில் எதிலாவது நித்யம் மிகப்பக்தியுடன் ருத்திராட்சம் தரிக்கவேண்டும்.

குற்றங்களைந்து குணத்தைக் கொள்ளுதல் கற்றவர்க் குற்ற கடன்.

(தொடரும்) A. S. T. மஹாராஜ்,

திரவிய பட்டணம், சுரண்டை.

பார்த்திப சிவ பக்தி.

[அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற வரலாறு]

விநாயகர் துதி.

யம்ப்ரம்ம வேதாந்த விதோ வதந்தி
பரம் பிரதானம் புருஷம் ததாந்யே !
விச்வோத்கதேஹ காரண மீச்வரம்வா
தஸ்மை நமோ விக்னவி நாயகாயா !!

சிவஸ் துதி.

அப்ப நீ யம்மை நீ யையனு நீ அன்புடைய மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளு நீ ஒரு குலமுஞ் சுற்றமு மோரூரு நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ துணையா யென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ யிம்மணி நீ யின்முத்து நீ இறைவ நீயே றூர்ந்த செல்வ நீயே

பண்டை காலத்தில் இந்தியாவை அரசாண்ட துஷ்யந்தன் என்னும் பெயர்கொண்ட ஓர் அரசன், விஸ்வாமித்திரர் தபசை யழிக்க இந்திரனால் அனுப்பப்பட்ட மேனகாவுக்கும் விஸ்வாமித்திரருக்கும் பிறந்த சகுந்தலை என்னும் ஓர் அணங்கைமகிழ்ந்து மணந்து, பூவுலகெங்கும் புகழ்பெற்ற, சந்திரவம்சத்தை ஸ்தாபித்த, பரதன் என்பவனைப் பெற்றான் அவன் வெகுகாலம் வரையில் அரசாண்டு பரமபதம் அடைந்தான். அவனுக்குப் பிற்பாடு பதினான்காவது சந்ததியான சந்தனுமகாராஜன் கங்கையை மணந்துகொண்டு, அவளால் தேவவிருதன் என்ற புதல்வனையும், பிறகு தேவ விருதனால் தான் கலியாணம் செய்து கொள்ளுவதில்லை எனவும் (பிரும்மசரிய ஆச்சிரமத்தினின்

றும் தவறுவதில்லை என்றும் தனக்குபட்டம் வேண்டாம் என்றும், பின்னால் பிறக்கப்போகின்ற அந்த மச்சஸ்திரீயினுடைய புதல்வனுக்கு முடி சூட்டுகிறேன் எனவும். தேவர்களும, கந்தர்வர்களும், ஆகாயத்தினின்றும் புஷ்பமாரிபொழிய தன்னுடைய பிதாவால் பீஷ்மா என்றுபட்டம் பெற்றும) உறுதி செய்து தந்து சத்தியவதை என்னும் ஓர் அனவகைத் தன்பிதாவுக்கு மணஞ்செய்வித்து, அவளால் சித்திராங்கதவிசித்திர வீர்யர் என்றஇரு புதல்வர்களில் மூத்தவனான சித்ராங்கதன் மரிக்கவே, இளையவனான விசித்திர வீர்யனுக்கு மகுடாபிஷேகம் செய்விததுத் தானும் ராஜ்யபரிபாலன விஷயத்தில் உதவி புரிந்து வந்தார்.

விசித்திர வீர்யனுக்கு திருதிராஷ்டிரன் என்றும் பாண்டு என்றும் இரண்டு புதல்வர்கள் ஜனிததனர். தனது குமாரர்களது இளமைப் பருவத்திலேயே விசித்திர வீர்யன் காலகதியடையவே, மூதத குமாரனான திருதிராஷ்டரான் பிறவிக் குருடனாய் பிறந்ததினால் இளையவனான பாண்டு ராஜ்யபாரத்தை வகித்து வந்தார். திருதராஷ்டரனுக்கு நூறு புதல்வர்களும் பாண்டுவுககு ஐந்து புதல்வாகளும் பிறந்தனர். திருதிராஷ்டரனது மூத்த குமாரர் துரியோதனாதியர்களுக்கு கௌரவர்கள் என்று பெயர், பாண்டுவுக்குப் பிறந்த ஐவருக்கு (யுதிஷ்ட்ர, வீம. அர்சுன, நகுல, சகாதேவர்) பாண்டவர்கள் என்று பெயர். எவ்வகையிலும பாண்டவர்களே கௌரவர்களைக் காட்டிலும் மேம்பட்டவராய் விளங்கினர். அதைக் கண்ட துரியோதனாதியர்கள்.

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்
வழுக்கியும் கேடன்பது"

என்பதற்கிணங்க அழுக்காறுற்று பாண்டவர்களை அநேக துன்பத்திற்குள்ளாக்கி அவர்களை சூதாட்டத்தால் தோற்கடித்து, நாடு நகரங்களைக்கவர்ந்து கொண்டு, துரோபதையை மானபங்கஞ் செய்விதது, பிறகு பன்னிரெண்டு வருஷம் வனவாசமும்; ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும், செய்யும்படி ஆக்ஞாபித்து, வந்து கேட்க பின் நாடுகளைக் கொடுப்பதாகச் சொல்லியதற்கிணங்கி வனவாசம் செய்து இறுதியில் காமீய வனம் வந்து சேர்ந்தனர் பாண்டவர்கள்.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்தலைப்போல, தனது சிறிய தந்தையாகிய விதுரர், தனது பிதாவாகிய திருதராஷ்டிரனை வஞ்சித்து, பாண்டவர்கள் வசிக்கும் காமியவனத்தைபடைந்து, அவர்களுக்கு அனுசரணையாக இருக்கிறானென்பதயுணர்ந்த துரியோதனன் ஆலோசனைத்தனாய், வீஷ்ம, கிருப, துரோணாசாரி முதலியவர்களை வருவித்து, சபை கூட்டிப்பாண்டவர்களின் மேல் அனுசரணையாய் இருந்துகொண்டு, தன்னை வஞ்சிக்க நினைக்கும் தனது சிறிய தந்தைக்கு என்ன சிக்ஷை விதிக்கலாம் என்பதைப் பற்றி பேசிக்

கொண்டு இருந்தார். அவர்கள் யோஜித்துக்கொண்டிருக்குமளவில் பல தீர்த்தங்களில் நீராடி, தேவாலயங்களைத் தெரிசித்துக் கொண்டு காமியவனத்தின் வழியாய் வரும் பொழுது பாண்டவர்களைச் சந்தித்து, பாண்டவர்களை நாட்டை விட்டு ஓட்டி காட்டுக்குத் துரத்தியவன் துரியோதனன், என அறிந்து, அவனுக்கு புத்தி புகட்ட எண்ணி ரிஷிஸ்ரேஷ்டரான அயத்திரிய முனிவர் அஸ்தினபுரத்தை அடைந்து துரியோதனுதியர்களும், மற்றும் பெரியவர்களும், இருந்த சபாமண்டபத்துக் கேகினர். அதைக்கண்ட துரியோதனன் எதிர் கொண்டு சென்று அம்முனிவனை யுபசரித்து, ஆசனத்திலிருத்தி, அர்க்கியாதி முதலியவைகளால் உபசரித்து, அஞ்சலிசெய்து நமஸ்கரித்து, தாங்கள் வந்த காரணம் என்னவென்று வினவினன்.

முனிவர் துரியோதனனுக்கு-ஆசிகள் கூறி அவனைப் பார்த்து ஏ! துரியோதன மகாராஜனே! உன் சிறிய தகப்பனுராகியபாண்டுவினுடைய புத்திரர்களாகிய பாண்டவர்களையான் யாத்திரை செய்துக்கொண்டு வரும் வழியில், காமியவனத்திலே வனவாசம் செய்யக்கண்டேன், கண்டவுடனே அதற்குக்காரணம் நீ என அறிந்து, உனக்கு புத்தி மதிகள் கூற நான் இங்கு வந்தேன் சற்று கவனமாய்க்கேள். இவ்வுலகவாழ்க்கையோ அநித்தியமானது, நீ செல்வச் செருக்காலும், இவ்வுலகப்பற்றாலும் பாண்டவர்களுக்குத் துரோகம் செய்வது நன்றன்று. துரோகத்தால் வரும் கேடு பல, துரோகத்துக்கு தக்கபலன் கைமேல் கிடைக்கும். திருஷ்டாந்தமாக, ராமாவதாரத்தில் சீதாபிராட்டியாரை அபகரித்துக் கொண்டுபோன இராவணன், ராமபிரானுக்கு துரோகம் செய்ததால், தன்னுடைய நாடானது அற்பக்குரங்கால் சுற்றத்தாரை இழந்தும், நாட்டை இழந்ததுமன்றி, ஆயிரம அஸ்வமேதங்களைச்செயதும், ஐராவதம் காமதேனு கற்பக விருக்ஷம் முதலியவற்றிற்கு யஜமானனுகவும், தேவர்களுக்கு எல்லாம் ராஜனுகவும், அழகிய வஜ்ஜிராயுதத்தை ஏந்தியவனுமான இந்திரனை வென்றதால் இந்திரஜித்து எனப்பெயர் பெற்ற தன் புதல்வனையும் இழந்தான், இது துரோகத்தால் வந்தகேடு அவர்கள் யார்? நீ யார்? அவர்களைப் பகைத்துக்கொண்டால் அவர்களுடைய நல்ல ஒழுக்கம் உன்னைக் கொன்றுவிடும். அவர்களைக் கூப்பிட்டு அவர்கள் இழந்த நாடு நகரங்களைக் கொடுத்து சமாதானம் செய்துக்கொண்டு செங்கோல் செலுத்துவாயாக' என்றார்.

அம்முனிவரது வார்த்தையைக் கேட்டுசகியாதவனாய் கண்களில் தீப்பொறிபறக்க அம்முனிவனை நோக்கி துரியோதனன் " ரிஷிப்பதரே! முற்றும் துறந்த சந்நியாசியாகிய நீ உலகத்தார் கெட்டால் நமக்கு என்ன என்று இராமல் என்னையும், பாண்டவர்களையும் சமாதானம் செய்யப் பார்க்கின்றாய். நாங்கள் என்ன செய்தால் உமக்கென்ன? நீ இங்கு வந்திருப்பதை யோசிக்குமளவில், என்

சிறிய தந்தையாகிய சண்டாளனான விதுரன் பாண்டவர்களிடம் சூழ்ச்சி செய்து அச்சூழ்ச்சிக்கிணங்கி மூடர்களான பாண்டவர்கள் உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். வணங்காமுடி மன்னன் எனப்பெயர் பெற்ற நான் உனக்கு உடன்படேன் என்று சொல்லி மற்றும் உமது ஆஷாடபூதித்தனத்தை அறியாது. உமது தண்டுக மண்டலத்தைக் கண்டு மரியாதை செய்தேன் நீர் பாண்டவர்களுடையதூதுவர் என்பதை அறிந்திருந்தால் நான் இச்சபையில் மரியாதை செய்திருக்கமாட்டேன். ஆகையால் சீக்கிரம் எழுந்துபோம் என்று விரட்டினன், அதைக்கேட்ட முனிரத்னம் துரியோதனனைப் பார்த்து "நீ உன்னுடைய செல்வச்செருக்காலும் மதியீனத்தாலும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற கர்வத்தினாலும் இறுமாப்பு அடைந்து இகழ்கின்றனை என்னை, உன் செல்வமே உன்னை அழிக்கப் போகின்றது. நான் வேண்டாம் என்று தூர உதைத்த செல்வச் செருக்கால் என்னை இவ்விடத்தில் இருக்கவேண்டாம் என்று கூறினை. ஆகையினாலே நீ என்னை அவமதித்ததால் பாண்டவர்களுக்குள்மிக்க வலிமை பொருந்தியவனும், கதாயுதத்தை யுடையவனுமுள்ள, வீமசேனனால் உன்துடைமுறிந்து இறப்பாயாக" என்று சபித்து அக்கணமே அச்சபையை விட்டு அகன்றார். (தொடரும்)

B. S, வெங்கட்டராமன், கோயமுத்தூர்.

ஒரு ஆச்சரியமான சம்பவம்.

மேற்கண்ட நிகழ்ச்சியைப் பற்றி நமது நண்பர் தாம் கேள்விப் பட்டமட்டில் எம்மிடம் செப்பியபடி இங்ஙனம் வரையக் கூடாமலிருக்கக் கூடவில்லை. நமது ரஞ்சிதன் இதன் உண்மையைத் தெரிந்து தலைப்பில் கண்ட விஷயத்தை நடந்தது நடந்தபடி ஆராய்ந்தறிந்து, விஷயதானஞ்செய்யும் எமது நண்பர்களில் எவரேனும் இந்த ரஞ்சிதன் வாயிலாகவே கூறுவார்களென நம்புகின்றனம்.

ஆனால் இத்தகைய நிகழ்ச்சி கலி முதிர்ந்து வரும்படியான இக்காலத்தில் நடை பெற்றிருப்பின் உலகினர் அறிந்து கடைத்தேறுமாறு நன்மார்க்கத்தில் தம் தம் புத்தியை(மனதை)ஒரு வழிப்படுத்த இயன்ற சாதனமேயாம். உலகில் ரஞ்சிதன்போல் உலாவும் பத்திரிகைகளும் ஏற்கனவே இதைப்பற்றி முறையிட்டிருக்கலாம். அப்படியும் தெரிய வரவில்லை. ஆயினும், நாம் இப்பொழுது நண்பர் முகமாய் வெளியிட்லானதை கேட்டது கேட்டபடி ஈண்டுரைக்கலாயினம்.

ரயில்வே ஸ்டேஷன் தலைமை உத்திபோகஸ்தர் ஒருவர் பண்டரீநாதனை ஸதா தன் மனதில் த்யானஞ் செய்து கொண்டிருந்தனர். சுக்ல பக்ஷ 'ஏகாதசி' மிகவும் சிரேஷ்டமாயினும், நான்காம் வருணத்தினரே மார்கழி சுக்ல ஏகாதசியாம் வைகுண்ட ஏகாதசியை மிகவும் கொண்டாடி உபவாசமிருந்து த்வாதசியில் சூரியபகவான் வெளிக்

கிளம்புமுன் பாரணையும் செய்து வருகின்றனர். அந்த தினத்தில் பண்டரிநாதனை தரிசிக்கவேண்டி மனதை திடப்படுத்திக்கொண்டு மேற்கூறிய ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் ரஜாவுக்கெழுதினர். அந்த தினத்தன்று ஆபீஸ் பரிசோதனை (Inspection) செய்ய, மேலதிகாரியாம் மேனேட்டர் ஒருவர் திருச்சியிலிருந்து வருகிறதாயும், ரஜா கொடுக்கத்தக்கதில்லையென்றும் உத்தரவு கிடைத்தது. பண்டரிநாதன் ஸேவையைக் கருதி மன உறுதி கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் மிகவும் வருந்தினராயினும், தம்முடைய மனதை சலிக்க விடாமல் தம்முடைய கொள்கையிலேயே யிருந்து வந்தனர்.

இவ்வாறிருக்க சுக்ல ஏகாதசியும் நெருங்கியது நாலைந்து பேர்கள் ஏகாதசிக்கு பண்டரிநாதன் சேவையைக்கோரி, பண்டரிநாதனை பஜனை செய்த வண்ணம் பிரயாணசீட்டுகள் (டிக்கட்டுகள்) பெற்று வண்டியிலேறினர். அப்பொழுது ஸ்டேஷன் மாஸ்டரும் மெய் மறந்து வண்டியிலேறி அவர்களுடன் உட்கார்ந்தனர், வண்டியும் புறப்பட்டது. குறித்த ஏகாதசிக்கு முதனாளான தசமியன்று பண்டரிபுரஞ்சேர்ந்து சந்தரபாகா நதியில் நீராடி, பண்டரிபுரவாஸனை ஸேவித்தனராயினர். பிறகு அவ்விடம் தசமி, ஏகாதசி, த்வாதசி மூன்று நாட்கள் தங்கி, அந்த நதியில் நீராடி, பகவானைக் கண்டு வணங்கிப்பணிந்து ஆனந்தத்தாண்டவம் புரிந்துப் பலவாறு ஸ்துதித்துப் பூஜைதனையியற்றி, அங்கு நேர்ந்த அடியார்கட் கன்னமிட்டுத் திரும்பலாயினர் பந்தராம் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்டேஷனில் தாம் செய்யவேண்டிய கடமையைச் சிறிதும் எண்ணினரிலர். தமதிருப்பிடமும் நெருங்கிற்று. கவலைலேசமுமிலராகி ஸ்டேஷன் வந்து வண்டி நின்றதும், வண்டியை விட்டு மற்றவர்களுடன் தாமுமொருவராயிறங்கினர். தமது உணர்ச்சி பெற்றனர். கவலை மிகக் கொண்டனர்-தமது அறைக்குள் சென்றனர். நாற்காலியிலமர்ந்தனர் போர்ட்டர் ஏதோ புத்தகங்களைக் கொணர்ந்து மேஜையின் மேல் வைத்தனன். பார்த்ததில் எல்லாம் ஒழுங்காயிருக்கக் கண்டு பிரமிப்படைந்து ஏகாதசியன்று மேனேட்டதிகாரி செய்த பரிசீலனை (Inspection) யான நடவடிக்கைகளைக் கண்டனர். எவ்விதவித்தியாசமும் காணப்படவில்லை. அவரிருந்து நடவடிக்கைகள் நடத்திருந்தால் எவ்வண்ணமாயிருக்குமோ அவ்வண்ணமாகவே பொருந்தியிருக்கக் கண்டு மதிமயங்கி பிரமித்தனர். அங்குமிங்கும் மிரளமிரள விழித்தனர். ஈசுவரனுடைய அத்தியற்புதமான நடிப்பைக்கண்டாச்சரியமுற்றனர். அப்பொழுது தாம் செய்யவேண்டியவற்றை யொழுங்காய்ச்செய்து முடித்துக்கொண்டு இல்லம் நோக்கிச் சென்றனர். அங்கும் தம் மனையாட்டி, பிள்ளைகள் வழக்கப்படி ஸ்டேஷனிலிருந்து வருவரைப்போல் கருதி யொழுகினரேயன்றி, ஊரில் பத்து திவஸங்களாயில்லாதவராய்க்கருதி குசலம் விசாரித்தனரிலர்.

அப்பொழுது ஸ்டேஷன் மாஸ்டர் தம் தரும பத்தினியை நோக்கி, "அடி, நான் இவண் சில தினங்களாயில்லாமல் பண்டிரிபுரஞ்சென்று தசமி, ஏகாதசி, த்வாதசி மூன்று தினங்களிருந்து சந்த்ரபாகா நதியில் ஸ்நானம்பண்ணி, பண்டிரி நாதனைக்கண்டு பூசைதனையியற்றி, அடியார்கட்கன்ன மளித்து திரும்பி வந்திருக்க, நீவீர் நான் போய் வந்த குசலம் வினவாததேன்? என்றனர்.

பத்னி: (கேட்டு சிறுநகைபுரிந்து) "ஏன்! நேற்றிரவில் கண்ட ஸ்வப்னமோ" என,

பர்த்தா: இல்லை, இல்லை! நான் பண்டிரிபுரம்போய் வந்ததைப் பொய்யாக்குகின்றீர்களே! ஏன்!

பத்னி: என்ன, இது! பைத்யமோ! பனை! ப்ராந்திதானோ!!! வழக்கம்போல் வந்து அலுவலுக்குப் போய் வந்திருக்கிறீர்கள்; ஆனால் துரைவருவதையிட்டு ராக்காலங்களில் வரமுடியாதென்று சொல்லி நேற்றிரவு பரியந்தம் இரவில் வீடுநோக்கி வாராமல் அலுவலிலேயே நோக்காயிருந்திருக்குங்கால், ராசாப்பாடும் ஸ்டேஷனுக்கே அனுப்பிக்கொண்டிருந்ததெல்லாம் பொய்யாமோ! இன்றேன் இந்தபடி மனப்பிராந்தி! என் கனவோ! நனவுபோல் கனவில் கண்டவற்றை சொல்லுங்கள் பார்க்கலாம் பன்முறை பண்டிரிநாதன் ஸ்மரணை தங்கட்குண்டு முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் வண்ணமிருக்கின்றதே, தாங்கள் பத்து நாட்களாய் ஊரிலேயேயில்லை என்று கழறும் வார்த்தை! பண்டிரிபுரம் போக ரஜாகிடைக்கவில்லை என்று சொல்லிப் போகாமலிருந்துவிட்டீர்களே!

பர்த்தா: போடி, போ! பைத்யகாரி. நான் ஊரில்லாமல்பண்டிரி புரமேகியிருக்க, என்னைப்போல் உருவெடுத்து வந்த வேஷதாரி யாவன்? என்னை பைத்தியமாக்கி பொய்யனாய்ப்பண்ணிப் பரிகசிக்கின்றீர்களே, ஏன்!

பத்னி: தாங்கள் கண்ட கனவை நனவுபோல், சொல்லுகிறீர்கள். நான் பரிகாசஞ் செய்யவில்லை. நிஜமாய்த்தாங்கள் எங்கும் இந்த ஊரைவிட்டுப்போகவேயில்லை என்பதுதான் சதயம்,

பர்த்தா: "சரி, இந்தா, இந்த பண்டிரி நாதன் ப்ரசாதம்! முந்தாணியில் முடிந்து வைத்திருந்த துளசி (காய்ந்து சருகாயுள்ள) தளத்தையும், சோபனாக்ஷதையையும் முடிச்சையவிழ்த்தெடுத்து தம் பத்னீ குழந்தைகட்கு கொடுத்தும்; மற்றொருமுடிச்சிலிருந்த கடிதாசு பொட்டணத்திலிருந்த வாஸனைசேர்ந்த பழப்புரசீனிசர்க்கரையையும் எடுத்துக்கொடுத்து, இவைகளெல்லாம் பொய்யேயோ! என்றுவேகமே எழுந்து, தம்முடன் ஸ்டேஷனில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தரையும், பணியாட்களையும் ஒவ்வொருவராய் "நான் பண்டிரி நாதனை தரிசித்து வந்தது பொய்யேயோ!" என, அவர்களும், "ஆம், தாம்போய் வந்ததாய்ச் சொல்லுவதெல்லாம் நனவுபோல்காணும் கன

வேயல்லாமல் வேறில்லை, ஏன், இந்தவீண்மனப்பிராந்தி! என்று உத்தரங்கூறியுந்தெளியாமல், திருச்சிக்குப்போய், மேனுட்டாராம் பரிசிலனைக்கர்த்தரை பணிவுடன் கண்டு நிழ்ந்தன வற்றை யெல்லாம்செப்பி அவரை மெய்ப்பிக்க, அன்னவர் கேட்டாச்சரியமும் ஆனந்தமும் கொண்டு, ஸ்டேஷன் மாஸ்டருக்குப் பதிலாய் பகவான் கண்ணனே வந்திருந்து அவரது கடமைகளையெல்லாம் செவ்வனேயியற்றி யாதொரு வழுதலில்லாமல் செய்திருக்கின்றார் என்று மன உறுதி கொண்டு, மெய்மறந்து எழுந்து, ஏகாதசி தினத்தன்று தாம் பரிசிலனை செய்தபோது, பகவான் பண்டிரிநாதனே தம்மிடம் நின்று அன்றங்கப்போது செலுத்தவேண்டியதான ஸ்டேஷனதிகாரியின் கடமையாதிகளைச் செலுத்தியிருக்கின்றனர். நாம் கடவுளிடத்து அபசாரப்பட்டு விட்டோமென மனமிக வருந்தியழுது ஸ்டேஷன் மாஸ்டரைத் தழுவிக்கொண்டு "நீயன்றோ நிஜபக்தன்" என்று வியந்து பன்முறை கீழே விழுந்து நமஸ்கரிக்க, ஸ்டேஷன் மாஸ்டர். "ஐயோ, நான் பகவானைக்காணவில்லையே! நீவிரும், நம் ஸ்டேஷனிலுள்ளவர்களும், நம் பக்திமக்களும் அல்லவோ பகவத் பிரஸாதத்திற்குப் பாத்திரர்களாய், நேரில் தரிசித்து அடைதற்கரிய பாக்கியத்தைப்பெற்றீர்கள்! எமக்கு அந்த கபட நாடகனைக்காணக் கிடைக்கவில்லையே என்றேங்கிப் பரிதவித்தனர். பகவான் பண்டிரி நாதன் தம் ஸ்தானத்தில் நின்று செலுத்தியிருக்கும் கடமைகளைப் பார்த்து வியந்து கண்ணீர் சொரிந்தனர். பிறகு மனதிருப்பிடம் வாய்ந்தவராய் பகவத் பக்திபரராய்க் காலம் போக்கக்கருதி. அலுவலை விட்டுத் தம்பத்நி மக்கள் சகிதம் பண்டிரிபுரமே சென்று சாசுவதமாய்ப் பெறவிருக்கும் பேரின்பத்தைக்கருதி, பண்டிரிதாஸராய் அனுதினமும் பக்தி செய்து கொண்டிருக்கலாயினர். தம் பர்த்தாப்போல் வந்து நடித்த பண்டிரி நாதனுக்கு நேரில் சிச்ருஷைகள் செய்து அன்னமளித்த ஸ்டேஷன் மாஸ்டருடைய தருமபுத்திரியை மகா புநிதவதியாரெனக்கருதி அங்குறும் ஏராளமான ஜனங்கள் அவரைப்போற்றி பணிகின்றனராம்.

இந்த அற்புத நிகழ்ச்சி கொடிய இக்காலத்தில் சத்தியமேயாயின்,

"அநந்யாச்சிந்தயந்தோமாம் யேஜநாம்: பர்யுபாஸதே!
தேஷாம் நித்யாபியுக்தானும் யோக க்ஷேமம் வஹாம்யகம்"

என்ற கீதவாக்கியம் ஒவ்வொருவர் மனத்துள்ளும் புக்கி, நன்மைகடைபிடிக்குமாறு செய்யுமன்றோ! சநாதனமான பெரியோர்கள் நிகழ்த்திக்கொண்டுவந்த வழக்க சம்பிர தாயங்களை விடுத்து நாளுப்பிரகாரமாயொழுகும் கர்ம பிரஷ்டர்கட்கும் அறிவுறுத்துதலேயாகும். சுபம்!

துறையூர் மா. சுப்பாமய்யர்.

மதனசுந்தரி அல்லது மர்மக்கொலைகள்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பொழுது சுந்தரியானவள் யாரென்பதையும், சகோதரரின் சச்சரவைப்பற்றியும் விவரிப்போம்.

நீர், நிலவளங்கள் பொருந்திய நமது புல்லூர் ஜமீனுக்கு அடுத்தது சிற்றூர் ஜமீன். இதுவும் புல்லூர் ஜமீனுக்கொப்பாய் மிகுந்த ரமணீகரமாயிருந்தது இந்த ஜமீனது சொந்தக்காரர் வேதாசல முதலியார் என்பவர் இவர்குணமோ பரிசுத்தமானது ஆனால் அவருக்கு வெகுநாளாய் தமக்குபின் இச்சமீனுக்கு உடையவனாகவருவதற்கு ஒரு புத்ர சந்தானமில்லையே "புத்" என்னும் நரகத்தையடைய வேண்டுமே என்ற கவலை அவரது மனதை அடிக்கடி வருத்திக்கொண்டிருந்தது. ஆனால் அவருக்கு நாளடைவில் கடவுளின கடாக்ஷத்தால் கோடி சூரியபிரகாசமுள்ள ஓர் பெண்குழந்தை பிறந்தது. அவள்தான் நமது சுந்தரி. அவளது தாய் சுந்தரியை பிரசவித்த பின் உயிர் நீத்தாள். மேலும் நமது சுந்தரியினது துரதிஷ்டம் அவளது ஐந்தாம் பிராயத்தில் அவளது அருமைத்தந்தையும் விண்ணுலகையடைந்தனர். சுந்தரி அனாதையானாள்.

அன்றியும் அவளது மாமனாரும், புல்லூரின் ஜமீன்தாருமாகிய மூர்த்தி முதலியார் அவள் மீதிரக்கங்கொண்டு அவளை தனது ஜமீனுக்கழைத்துக்கொண்டு போய் தனதரும் புதல்விப்போல் பாவித்தாதரித்து வந்தார் இம் மூர்த்தி முதலியாருக்கு ஏற்கெனவே இரு புதலவர்களுண்டு அவர்கள் தாம் பிரதாப முதலியார் என்றும், மதன முதலியாரென்றும் முறையே பெயருட்டுள்ளார்கள். இம் மூர்த்தி முதலியார் பெத்த சுகவாசியாதலால் ஜமீனிலுள்ள சகலகாரியங்களையும் கவனிக்க இரு யௌவன குமாஸ்தாக்களை நியமித்திருக்கிறார். அவர்களுக்கு முறையே நீலமேக முதலியாரென்றும், சாமனவர்ண முதலியாரென்றும் பெயர். நீலமேக முதலியாருக்கு 30 வயதிருக்கும். சாமனவர்ணருக்கு 26 வயதிருக்கும் இருவரும் துர்க்குணத்தியடம் பழகியவர்கள். நீலமேக முதலியார், பிரதாப முதலியாரின் உயிருக்குயிரான நண்பராயும் ஆயினர்.

சுந்தரியும் 18வது ஆண்டுவரையிலும் மூர்த்தி முதலியாரின் ஆதரணையிலிருந்து சுகமாயிருந்தாள். இருந்தாலும் அஙகும் அவளது கஷ்டகாலததிற்கேற்ப அவளது 18 ம் வயதில் மூர்த்தி முதலியாரும் முக்தியடைந்தார். மூத்தகுமாரனால் சகலவித கிரியைகளும் நடந்தது பிறகு பிரதாப முதலியார் புல்லூர் ஜமீனுக்கு அதிபதியானார். அன்றையதினம் ஜமீன் முழுவதும சுதினமாக கொண்டாடபெற்றன.

சகோதரரின் சச்சரவு ஏனென்றால், நமது சுந்தரியின்மேல் சகோதரிருவரும் காதல் கொள்ளலானார்கள். சுந்தரிக்கோ உண்மை

யில் மதனன்மேல் தான் காதல். ஏனென்றால், பிரதாப முதலியார் துர்க்குணமே உருவெடுத்திருக்கும் பிறப்பு, பொல்லாத புழுகன், முழுமூடன, மூர்க்ககுணத்தினன் ஆதலால் தான் நமது சுந்தரி மிக்க துன்மார்க்கனும் முரடனுமான பிரதாபன்பேரில் வெறுப்பும், சுகுணங்களே சுரக்கப்பெற்றிருக்கும் சுமுக சுந்தரனான மதனன் பேரில் விருப்பும் கொண்டாள் எப்படியாயினும் மதனனையே மணக்கவேண்டுமென மனக்கோட்டைகட்டுவாள். மதனனும் சுந்தரியை தவிர வேறு எவரையும் மணப்பதில்லை என விரதங்கொண்டிருந்தான் பிரதாபனோ அவள் நமக்கே உறியவள், நமக்கே இசைவாள் என்று ஒரு நாள் அவளை நெருங்கி தன் விருப்பத்தை தெரிவிக்க, அதை அவள மறுத்து தான் அவனை சகோதரனென பாவிப்பதால் அவ்விதம் கேட்கலாகாதென்றாள். பிரதாபனும் நாளடைவில் இவளுக்கு நம்மேல் காதல் ஏற்படும் என்றும், அவளே நம்மை வந்து கேட்பாள என்றும் உள்ள மகிழ்ந்திருந்தான்.

அப்படிக்கில்லாமல் அவள் மதனனை காதலிப்பதையும், மதனனும் அவளைக் காதலிப்பதையும் கண்டு சினங்கொண்டு பொறாமை மேலிட்டு மதனனை சுந்தரியுடன் பேசலாகாதென்றும், சுந்தரியை மதனனுடன் பேசலாகாதென்றும் கட்டளையிட்டிருந்தான்.

ஐயோ இப்பொறாமை என்னும் நண்பன் வெகு கெட்டவன் அவனால் அநேக துன்பங்கள் நேரிடுகின்றன. என்னே ! விசித்திரம் காமம் என்னும் கடுந்துரோகியால் உற்ற சகோதரனென்றும் பாராமல் பொறாமையானவன் ஏற்பட்டதனால் உண்டான கஷ்டமும், தீங்கும்போக போகத்தெரியும். நமது காதலர்களின் கஷ்டகாலமோ, என்னமோ, அவர்கள் தற்செயலாய் தகுந்த இடத்திலிருந்துபேசிக் கொண்டிருந்ததை கண்டவுடன் தான் நமது பிரதாபன் அடக்க முடியாத கோபத்துடன் தன் சகோதரனென்றும் பாராமல் காம காமவெறியால் தன் பங்களாவிற்கு இனிமேல் வரக்கூடாதென்று ஏசி பேசி துரத்தினான், மதனனும் சாந்தமாக பதில் சொல்லிவிட்டவ்விடத்தை விட்டகன்றபின், பிரதாப முதலியார் சுந்தரியை பலவித இழிவுடன் பேசி அதட்டி அழைத்துச்சென்று அவளது அறையிற் றள்ளி பூட்டிவிட்டான்.

அவ்விடத்தை விட்டகன்ற கதாநாயகன் தன் வினையை நினைத்துக்கொண்டும், சற்றுமுன்னரே நிகழ்ந்தவற்றை ஒன்றின் பின் ஒன்றாக நினைத்து நினைத்து மனச்சங்கடத்தையும், வியாகுலத்தையும் பெருக்கிக்கொண்டேயிருந்தான் எப்படியாயினும் சுந்தரியை மணப்பதென்றும் அவளை அவனது தமையன் எவ்வித உபத்திரவத்தை கொடுக்கிறானோ என்றும் மனதில் ஒருவிஷபத்தில் துக்கமும் கொண்டான் தன் தமையன் கூறிய மொழிகள அவன் மனதை கூறிய வாளைப்போல் அறுத்தது அவனையறியாமலே அவனது கண்கள் கண்

ணீரை உதிர்த்தன. போகும்வழி இன்னதென்று தெரியாமல் விழித்தன. அவன் நடந்து செலலும்பொழுது கட்குடித்தவன் போல் தள்ளாடிக்கொண்டு செல்லுகையில் திடீரென நின்றான் பித்து பிடித்தவன்போல் மிரள மிரளவிழித்தான்.

அப்பொழுது பின்னால் ஒரு உருவம் வேகமாய் வரும் காலடிச் சத்தத்தை கேட்கவே திடுக்கிட்டு திரும்பிப்பார்த்தான். (தொடரும்.)

R. G. Rajan, Trichinopoly.

ஆன்மாவே புத்ரன்.

அல்லது

உயிரே மக்களாவர்.

(10 ம் பக்கத்தொடர்ச்சி.)

அக்காலத்தில் கடுமொழிபகர்ந்தவண்ணம் சிறிச் சினந்த லக்ஷ்மணரைத் தேற்றினார், தம்முடைய மாதா கௌஸல்யாதேவியாரை சாந்தப்படுத்தி, புத்திரனைக்காட்டிலும் பர்த்தாவே சிறந்த தெய்வம் போன்றவரென கற்பிலக் கணத்தையும் நினைப்பு மூட்டலாயினர். தர்மபத்தினியாம் சீதாபிராட்டியாரின் கற்பைச்சோதிப்பான் கருதி பரிக்ஷித்து அன்னவர் விருப்பத்தின்படி தம்முடன் கூடவே கானகம் அழைத்துச்சென்றனர்.

பொருளிலாசை சிறிதும் கொள்ளாமல் வெறுத்து பகவத்கைங்கர்யத்திலீடுபட்டவரான லக்ஷ்மணஸ்வாமியையும் தம்முடன் கானகம் அழைத்துச்சென்றனர்.

"ஆன்றபே ராசனு மிருப்பவையறு
மேன்றனன் மணிமுடி யேந்தல் வேந்த நீ
வான்றொடர் திருவினை மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளார் நின்னிற்றோன்றினார்"

"அகண்ட ராஜ்யசம்பத்தைக் கொண்ட சக்ரவர்த்தி உயிருடனிருக்கும் போதே ராமச்சந்திரன் நீ மகுடஞ்சூடுவதை யங்கீகரித்தன்ன. பரத! விண்ணுலகம் வரையிலுள்ள இந்த அரசாக்ஷியை மறுக்கின்றனை, இளம் ராஜகுமாரர்களுக்குள் நின்னைப் போன்ற உத்தமன் எவன்? நின்புகழழியாமல் என்றும் நிலைத்திருக்கக் கடவது" என்று வசிஷ்டர், சுமந்திரர் முதலாயினோர் வாழ்த்தியும், ராமபிரானை நேரே சென்று அழைத்து வருவதில் ஆக்ஷேபனை சிறிதுமில்லை யென்றும் சொல்லக்கேட்டு அவருக்கு வலுவில் கிடைத்த ராஜ்ய சாம்பிராஜ்யத்தை சிறிதளவும் கருத்தினில் கூட வைக்காமல்,

" இயன்றதென் பொருட்டெனவிவ்விடருளக் கென்ற போழ்தும்
அயின்றனெ கிழங்கு கங்காயுமமிழ்தென வரிய புல்லில்
துயின்றனெ னெனவு பாவி துறந்திலன் சுடருங்காசுங்
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ் செல்வமுங் கொள்வேன்யானே "

என்று குகன்முன் கதறிய வண்ணம் கீழேவீழ்ந்தழுதும், பிறகு பரதவாஜராச்சிரமத்தில்,

" மறையின் கேள்வற்கு மன்னிளந்தோன்றல் பின்
முறையினீங்கி முழுநிலங் கொள்கிலேன்
இறைவன் காக்கிலருமெனில் யாண்டெலாம்
உறைவன் கானத்தொருங்குடனே...................."

என்றுதான் பின்கொள்ளும் முறையினின்றும் நீங்கி உலகமுழுதும் ஆள்வதை ஏற்றுக்கொள்ளக் கூடாவொழுக்கத்தை பிரதிக்னித்தும், " இவ்வாறு நீர் செய்வதுதான் தகும், பெரியோர்களிடத்தில் வணக்கமும், நற்செய்கைகளில் மனஊக்கத்துடன் நடத்தலும், கடவுளிடத்து அன்புடன் பக்திசெய்வதும் இரகுவம்சத்தாருக்குக் கூடப்பிறந்த மூலதனமாம் " என்று பரத்வாஜ முனிவருடைய ஆசிகளை மிகப்பெற்றும், தம்மிடம் வந்து பெருஞ் சுமையாம் ராஜ்யபாரத்தை மீண்டும் பெற்று அரசாளும்படியாக அயோத்திமாநகர் நோக்கி வருமாறு பிரார்த்தியானின்ற பரமபாகவதோத்மனும் பரதனை, " தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" யாகலின்' தந்தையின் மொழியை சத்திய மொழியாக்க தம்முடைய வனவாச பிரதிஞ்ஞையை ஈரேழு வருஷங்கள் நிறைவேற்றிய பின்னே, தாம் நகர் நோக்கி வருவதாகவும்.

" தனையராயினர் தந்தை தாயாரை
வினையினல்லதோ ரிசையை வேய்தலோ
நினையவோ விடா நெடியவன் பழி
புனைதலோவய்ய புதல்வர்தருமை "

பரத! புத்திரராய்ப் பிறந்தோர் தாய் தந்தையர்க்குத் தீவினையினின்று நீங்கிய புகழ்மாலையைச் சூட்டுதற்காகவன்றோ! நீங்காத பழிச் சொல்மாலையைச் சூட்டுதற்கல்லவாகலின். பிதாவின் கட்டளைக்கு மாறாக நடக்கத்தக்கதில்லை என்று தம்மைப் போலவே தாம் திரும்பிவரும் காலபரியந்தம் செங்கோ லோச்சவேண்டுமென்றும், அவர் மாதாவான கைகேயிதேவியாரை எந்த காரணத்தாலும் கடிந்துரைக்கலாகாதென்றும் ஞானப்பாலூட்டித் தம்முடைய பாதுகையைத்தந்து, தர்ம ராஜ்யமாளுமாறு பணித்தனுப்பினர். ஸ்திரீவிய மோஹத்தினால இவ்வளவு அனர்த்தங்களும் சம்பவிக்கலாயினவென்றும் பிதாவை வெறுத்தனரோ! சிறிதளவுமில்லை. தாமுமில்லாமல் மற்றதம்பியருமில்லாமல் தனியே விடப்பட்ட பிதாவை செவ்வனே பாதுகாக்குமாரன்றோ பணித்தனர். பிதாவானுலகு சென்ற

தைக் கேட்டதும் மரணத்துக்குச் சமானமான மூர்ச்சையும் துன்பமுமன்றோ அடைந்தனர்! பிறகு தெளிந்து உத்ரகிரியைகளை நடத்தினர்.

பொருளை திருணமாய் நினைத்து வெறுப்படைந்த புத்திர ரத்னங்கள் நால்வருமில்லாதிருக்குஞ் சமயத்திலன்றோ தசரதர் தம் மாவிதுறந்து வானேகினராயினர். அன்னவரன்றோ நிஜ பிதா. அந்த பிதாவின் வாக்கிய பரிபாலனம் பண்ணின தநயர்களன்றோ நல்லகுல மணிகளாஞ் செல்வர்களாவர். இப்படியே புத்ரர்கள் நால்வரும்பொருளை வெறுத்துத்தள்ளியும் அவரவர்களுடைய கொள்கைகளிலேயே மனதையூன்றிச் செலுத்தலானதையும் தன்னுடைய எண்ணம் பலியாமல் போனதையும் கண்ட கைகேயிதேவியார் வெட்கிச்சாம்பினர். ஆயினும் இத்தகைய பெயருங் கீர்த்தியும் தம் சிற்றன்னையரான கைகேயிதேவியாரின் நன்முயற்சியாலேயே நிகழ்ந்தன வென மிகவும் கொண்டாடி சுவரை கௌரவபடுத்தினர். மாற்றாந்தாயான சுருசியையேனும், அவர்வயப்பட்டிருந்த தம்முடைய பிதா வுத்தானபாதனையேனும் சினந்து வெறுத்தன ரோதுருவர் இல்லை. தாம் என்றும் அழியாப்பதவியுற தம் சிற்றன்னையே காரணமென மகிழ்ந்து போற்றினர். கைகேயிதேவியார் கொடியவான்று; தம் புத்ரன் பரதனைக் காட்டிலும் ராமனையே புகழ்ந்து கொண்டாடி ப்ரேமையுடன் அன்பார்ந்து வந்தனர். உலக நன்மையை வேண்டி கைகேயிதேவியார் காரணமாயேற்படலாயினர். தம் சக்களத்தியின் மகன் ஸ்ரீ ராமச்சந்திரனுடன் தம் மகனான லக்ஷ்மணனைக் கான்புக் விடுத்தது மல்லாமல், தசரதரைப்போல் ராமனையும், தம்மைப்போல் சீதாதேவியாரையும், அயோத்தியைப்போல் கானகத்தையும் மதித்தொழுகுமாறு பணித்து அனுப்பினர் சுமித்திராதேவியார். குல மணிகளாம் பெண்மணிகட்குள் இதுவே சிறந்த குண விசேஷமாகுமன்றோ! அந்த தேவியாரின் க்ஷமையைப்பாருங்கள்! எந்தையர், மைந்தராம் துணைவர்கட்குள் இத்தகைய அன்பின் பெருக்கேயன்றோ, இன்பரஸமாய்ப் பெருகியோடும். தசரதருடைய குடும்பத்தில் உள்ள ஸ்திரீ புருஷர்கள், தநயர்கள், அவர்கள் பத்நிமார்கள், ஒருவரையொருவர் குறைகூறுவதற்கில்லாமல் நற்குண சீலர்களாய் பொருளைச் சிறிதும் கருத்தினில் வைக்காமல் உயிரையே பெரிதென வெண்ணிநேசிக்கலாயினர்.

இக்கலி முதிர்ச்சி பெற்ற காலத்திலும், மாதா, பிதாக்களும், பிள்ளைகளும், குலமணிகளாம் பெண்மணிகளும் ஸ்ரீமத் ராமாயண கதா புருஷர்களைப்போல் நன்னடையில் பயின்றொழுகுவரேல், மேலான கீர்த்தியையும் புகழையும் படைத்து மகிழ்வார்களே!

அவ்வாறின்றி நம்முடைய அநுபவத்தில் வந்திருக்கிற மட்டில் இரண்டொரு விஷயங்களை நமது ரஞ்சிதன் வாயிலாய்க் கூறுமலிருக்

கக் கூடவில்லை. ரஞ்சிதனும் தன் மழைவீசி அறியாப்பேதையினும் பேதையர்களான துர்க்குணம்படைத்த மக்களுக்கு நன்மதியூட்டு வானாக.

(தொடரும்,)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

மாந்தரைக் கெடுப்பது மதுவே

சகோதரரே!

தற்காலம் *மதுவென்னும் ஒருவித பானம் இராணுவத்தின் முன்னணியில் நிற்கின்றது நம்மில் அநேகர் 1கும்பி கூழுக்கழுகிறது கொண்டை பூவுக்கழுகிறது என்பது போற், தனது வீட்டில் இராத்திரிக்கு சமையலுக்கு ஒன்றும் இல்லாமற் போனாலும் போகட்டும், வீட்டிலிருப்போர் எவ்விதமலைந்தாலும் அலையட்டும் நமக்கு இரண்டு படி [இதை மொந்தை, சொப்பு அல்லது சீசா வென்று சொல்லு வார்கள்] கள் குடிப்பதற்கு பணம் கிடைத்தால் போதும் அவ்வித முதவுபவர்களுக்கு நாள் முழுதும் கால் பிடிக்கச்சொல்லினும் மனங் கோணாது செய்வோம் என அலைந்து திரிகிறார்கள். இந்த மதுவினால் இம்மையில் விளையும் தீங்கையும், மறுமையில் அடையும் நரகையும் இவர்கள் அறியாமற்போனது வியக்கத்தக்கதே. நாம் சிற்சில நண்பர்களை நோக்கி மதுபானத்தை நீக்கும்படி [மதுபானஞ் செய்யும் பழக்கத்தை அற ஒட்டிவிடவேண்டி] வேண்டிக்கொண்டதில் அவர்களில் ஒருவர் பின்வருமாறு சொல்லுகிறார் நான 2குடிகுடிக்கும் வழக்கத்தை தவிர்த்தல் கூடாத காரியம். என்னுடைய எஜமானர், அல்லது சிநேகிதருடன், ஒரு கூட்டத்திற்கு சென்றால் அவ்விடம் எல்லோரோடும் குடித்துச் சந்தோஷத்தை யனுபவித்தலே ஆனந்தம் இன்றேல் நாமவிடம் செல்லாதிருத்தல் வேண்டும் அவ்விடம்சென்று குடியாதிருந்தாலும், அல்லது செல்லாதிருந்தாலும், கௌரவக்குறைவு மேலும் எனது எஜமானர் எவ்வளவு பெரிய கூட்டங்களுக்கு செல்லினும் என்னையன்றி செல்பவரல்லர். ஆனதால் நம்முடைய மதுபான வழக்கம் ஒழிக்கதக்கதல்லை என்கிறார். இதைப்போலவே நமது தமிழ் தேசத்திலும், இன்னும் இதரதேசங்களிலுமுள்ள தமிழ் சகோதரரில் அநேகர் நடத்தலையும், இதேவிதம் சொல்லுதலையும், நாம் கண்டிருக்கிறோம். சகோதரரே! இது என்ன பேதமை பன்றியோடே சேர்ந்த பசுவும் மலம் தின்னுமா.

---

* மது (தேனல்ல) குடித்த உடன் மூளையைக்கெடுத்து இரத்த ஓட்டத்தை தடுத்து நரம்பிற் தள்ளும் ஓர்வித விஷத்தார் செய்தது காலணைப் போன்றது. (1) கும்பி-வயறு. (2) குடி-இந்த விஷபானத்தையே அனேக இடங்களில் குடி என சொல்லுவார்கள்.

முக்கியமாய் அனேக நல்விமான்களும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், இவ்வித கௌரவப் பித்தம் பிடித்து அழிகிறார்கள் இவர்களுடைய செய்கைகளை இவ்விதமிருக்குமாயின், மற்றய ஏழைகளையும், இது எங்கள் குடும்ப வழக்கம் என்று சொல்லும் குடியர்களையும், இக்கொடிய பாபத்தினின்று இவர்கள் நீக்குவதெங்ஙனம். இவைகளை எல்லாம் யோசித்துப் பார்த்தால் மேல நாட்டு நாகரீகம் நமது நாட்டில் புகுந்து செய்யும் வேலையே இவர்களை, கூட்டத்திற்கிழுப்பது. நமது நாட்டிற் புகுந்த ஆங்கிலேய நாகரீகம் நமது சகோதரின் இருதயத்திலுள்ளுமா புகுந்து விட்டது? இவர்கள் தங்களுடைய முன்னோர்களின் பாதையில் செவ்வையாய் நடந்தால் மற்றய நாட்டு பழக்க வழக்கங்கள் நமமை என் செய்யக்கூடும். "தன்னாலே தான்கெட்டால் அண்ணாவி என் செய்வான்" என்பது போல நாமாகவே கெடுத்துக்கொண்டால் மேல் நாட்டார் என்ன செய்வார்கள் ஆனால் அவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களை விடாது செவ்வையாய் நடந்து கொள்ளுகிறார்கள இதை பார்த்தேனும் நாம் நமது பாதைக்கு திரும்பவேண்டாமோ? ஏழைதனவந்தனை ஆசிக்கிறான். முனிஸீப் ஸப்ஜட்ஜாவதற்கும், ஸப் ஜட்ஜ் டிஸ்டிரிக்ட் ஜட்ஜாகுவதற்கும், ஆசிக்கிறார்கள் கண்டக்டர் ஏட் கண்டக்டராகவும், ஏட்கண்டக்டர் அசிஸ்டெண்ட் சுப்பெரின்டென்டென்ட்டாகவும், அஸ்ட் சுப்பெரின்டென்டனட் மானேஜராகவும், ஆசிக்கிறார்கள். இவற்றையெல்லாம் யோசித்தால் கீழ் உத்தியோகஸ்தர்மேல் உத்தியோகத்திற்கு போக ஆசிக்கிறார்களே யல்லாமல் மேல் உத்தியோகஸ்தர் கீழ் உத்தியோகத்தை விரும்பார்கள் மனேஜராக இருந்த ஒருவர் கண்டக்டர் உத்தியோகத்திற்கு போவதென்றால் அது அவருக்கு விருப்பமாயிருக்குமோ? இராது அப்படியாயின் தமிழராகிய இவர்கள் ஆங்கிலேயராக வேண்டுமென ஆசிப்பதைப் பார்த்தால் நாகரீகமும், தெய்வபக்தியும், நன்னெறி நற்போதனையும், அற்ற நாட்டில் பிறந்து விட்டோமே" இனிமேலாயினும் மேற்கூறிய சிறப்புகளனைத்தும் பொருந்தியதனை மேல் நாட்டின் நடத்தைகளை பின்பற்றுவோமென நினைத்தார்கள் போலும் இவ்விதமும்.நம தமிழ் நாட்டை பழிப்புக்கிடமாக்கலாமா? இவ்விதமும் மானமும், லச்சையும், கெட்டு நூற்றைக்கெடுக்குமாம் குறுணி' என்பது போல் ஒரு பரமஞானிக்கு பொருந்த வேண்டிய எல்லாவித சற்குணங்களும் பொருந்தியதான தமிழ் நாட்டையும் அவற்றின் பிள்ளைகளாகிய பெரியோர்களையும் மத ஆச்சாரம்தவரிய ஈனர்களென்றும், முன்னோர்களின் வார்த்தைக்கு அடங்கி நடவாத வீணர்களென்றும் அன்னிய மதத்தார் செல்வத்திற்கும் ஏதுவாக்கி வைக்கலாமா? இவர்களைப் போலும் மாதா, பிதா, குருத்துரோகிகளுண்டோ? சிற்க இன்னும் அனேக ¼ பகிரங்கமாய் கள் சாராயகடைகளுக்குச் சென்று அவற்

ரை பானஞ்செய்வதால், பந்தர்களும் ஊராரும் எக்காரியத்திற்கும் தன்னை புறக்கணிப்பதோடு, ஒருவரும் மதியார்களென நினைத்து ரகசியமாய் சென்று குடிக்கிறார்கள். இதைக் கவனித்தால் இந்த ஞானசிகாமணிகள் தன்னையொத்த மனிதரிடம் வைத்த ஐயமும் (பயமும்) கடவுளிடம் வைக்கவில்லை என்பது புலப்படுகின்றதல்லவா? இவர்கள் மதுவுண்டு செய்த பாபத்தோடே இப்பாதகத்தையுமா சேர்த்துக்கொள்ளவேண்டும்? "வெளிக்குவராத ரகசியமுமில்லை அறியப்படாத மறை பொருளுமில்லை" என்பது போல, பிறர் காணாவிட்டாலும் கடவுள் காண்பாரே, அதற்குத்தக்க தண்டனை விதிப்பாரே, என்பது இவர்களுக்குத் தெரியாமற் போனதென்ன? மற்றொரு வகுப்பார் மது பானத்தால் விளையும் தீங்கை தாங்களே அறிந்திருந்தும் தங்களின் ஏழை குழந்தைகளுக்கும் அவற்றை கொடுக்கிறார்கள், என்ன பரிதாபம்! தாங்கள் கெட்டதுமல்லாமல் தங்கள் அருமை சிசுக்களையும் கெடுத்துவிடுகிறார்களே!! கள் குடிப்பதனால் அனேகவித துன்பங்கள் நேர்வதோடு மறு உலகத்திலும் பெரு நரகை அடைய வேண்டுவது திண்ணம், உதாரணமாக இரண்டொரு விஷயங்களை அடியிற் குறிக்கி வறைவாம். (இன்னும் வரும்).

P S வரதராஜுலு, மாப்பிட்டிகாமா. அவ்சாவிளை இலங்கை

---

3 குடும்பவழக்கம் எங்கள முன்னோர்கள் காலமுதல் மாடனுக்கு கள்வைத்தேதான் படைப்பது அதை நாங்களேதான் குடிக்க வேண்டும் வேறு ஒன்றும் செய்யப்படாது அது எங்கள் வழக்கம் என்பது இவ்விதம் சொல்பவர்கள் பெரும்பாலோரை நமது நாட்டில் காணலாம். 4 பகிரங்கமாய் எல்லோரும் அறியும்படியாய்,

நற்சாட்சி பத்திரம்.

அன்பார்ந்த ஐயா!

கீழ்காணும் வியாசத்தை நம் இரஞ்சிதனில் பிரசுரிக்க இடம் தரும்படி வேண்டுகிறேன்.

தாங்கள் ரஞ்சிதனின் மலர் 2 பகுதி-1-வது சஞ்சிகையை வி.பி. மூலியமனுப்பினது வரப்பெற்ற அளவிலா மகிழ் வெய்தினேன். நம் தமிழ் நாட்டின் கண் உலாவிவரும் மாதாந்த சஞ்சிகையில் நம் ரஞ்சிதனைப்போல் காலத்திற்கேற்ற அற்புதமான பல அரிய விஷயங்களுடன் புராணம், இதிகாசம், நாவல் இவைகளுடன் வெளிவரும் சஞ்சிகை ளிலிருந்தால் அவற்றுள் நம் ரஞ்சிதனே முதன்மையானவன் என்று சந்தேகமறச் சாற்றலாம்.

ஆயினும் நம் ரஞ்சிதத்தை போஷித்து மேலும் மேலும் ஓங்கி வளரச்செய்ய போதிய சந்தாதாரர்களில்லாது ஓர் பெருங்குறை என்று வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். இப்பெருங்குறையை தீர்க்க எல்லாம்வல்ல பரம்பொருள் கிருபை செய்வாராக.

இதைக்கண்ணுறும் ஒவ்வொரு சந்தாதாரச்சகோதர சகோதரிகளும் மற்ற தமிழ்மக்களும் தம் தம்மாலியன்ற வரை முயற்சியெடுத்து ஆளுக்கொரு புதிய சந்தாவைச் சேர்த்து அனுப்பினால் இன்னும் அனேக அறிய, நவசர, அதியற்புத, அலங்காரமான விஷயங்களுடன் ரஞ்சிதன் வெளிவந்து நம ஒவ்வொருவரையும் ஆநந்தக்கச்செய்வான் என்பதில் ஐயமில்லை. இத்துடன் நான் சந்தா தாரர்களைச் சேர்த்து அனுப்பியிருக்கிறேன். அவர்களுக்கு நமது சஞ்சிகையை அனுப்பிவைக்கவும். இங்ஙனம்: தங்கள் உண்மையுள்ள,

ப. ச. கோவிந்தசாமி.

நானு ஓயா தோட்டம் தலவாக்கொல்லை இலங்கை.

சங்குபாலகன்

(17 ம் பக்கத்தொடர்ச்சி)

அதியாயம் 2.

அரசன் வேடன் மகளைச் சலந்தாபுரிக்கு அழைத்து வந்துமணமுடித்து நாட்கள் பல சென்றன. வேடன்மகளும் கெர்ப்பமாயினள் ஒவ்வொரு திங்களாகக் காலமுங்கடந்து கொண்டிருந்தது. இவ்விதமிருக்கையில் அரசாங்கவிவகாரங்களைப் பார்த்து வருவதற்காக மன்னன் எண்ணிதன் மூத்தமனைவியர்களை யழைத்து, " யான் வெளியூருக்குச் செல்லவேண்டியிருப்பதால் சென்று வருகிறேன். உங்கள் தங்கையாகிய இவ்விளையாளைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். அவளுக்குப் பேறுகாலம் கிட்டிவிட்டகால் குழந்தை பிறந்தவுடன் யான் அறிந்துக்கொள்ளும் பொருட்டு நமது அரமனை வாயிலில் கட்டியிருக்கும் ஆலாச்சிமணியை யசைத்திடுவீர்களானால் அம்மணியோசை கேட்டவுடனே யான் குழந்தையைப் பார்க்க மீண்டுமே சுருக்கில் வந்து விடுகிறேன்." என்று அவர்களுக்குக் கூறி வேடன் மகளிடமும் " சென்று வருகிறேனெனக்கூறிச் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்று விட்டான்.

அரசனுடைய மூத்தமனைவியர்களுக்கு வேடன் மகளின் மீது பொறாமையுண்டு. அவ்விதம் பொறாமை கொண்டிருந்ததற்கு காரணம், அரசன் அவள்மீது அதிக அன்புகொண்டிருந்ததே. இவர்கள் பொறாமை இவ்விதமிருக்க அரசன் சென்று சிறிது நாட்களுக்குள் வேடப்பெண் பிரசவவேதனை கொண்டாள். அப்பொழுது அம்மூத்தாளனைவரும் இவள் படும் பிரசவவேதனையை யறிந்து மருத்துவச்சிகளையுமழையாமல் இவளுக்குத் துன்பம் உண்டுபண்ணவேண்டுமென்று நினைத்து அவளுடைய கண்களைக் கட்டித்தரையில் முள்ளைப்பரப்பி அதன்மேலே நடக்கச் செய்தனர். " கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது " என்பது இவர்களிடமே அறியக்கிடக்கிறதல்லவா?

"கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோரறியார் வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகுவாளோ நுவல்.
(நீதி வெண்பா)

என்றபடி பிள்ளையைப் பெற்று அதனால் துன்பமடைந்தவருக்கன்றி இந்த மலடிகளுக்குத் தெரியுமா பிள்ளைப் பேற்றின் வருத்தம். தீப்பட்டபுண்ணில் கோலிட்டது போல் செய்து விட்டனர் இம்மலடிகள். என்ன செய்வாள் வேடன் மகள் அச்சமயத்தில் யார் அவளுக்குத் துணை! ஒருவருமில்லை, சிங்கங்களுக்கிடையில் அகப்பட்ட மானைப்போல நொந்தழுதாள் கடவுளைத் தொழுதாள். அப்பொழுது முள்ளின்மேல் நடப்பது மல்லிகைமலரின் மேல் நடப்பதுபோலிருந்தது அவளுக்கு ஆ! கடவுளை நம்பினோர் கைவிடப் படுவரா? ஒருபோதும் கைவிடப்படார் சற்று நேரத்தில் வருத்தமின்றி ஒரு ஆண்மகவைப் பெற்றாள். குழந்தையின் மேனியோ மன்மதனென்னும் மாரனைப்போன்ற அழகுள்ளதாயிருந்தது. அதன் ஒளியோ களங்கமில்லாத சுத்தமனதையுடைய அறிவாளிகளின் மனதைப் போல் பிரகாசித்து விளங்கியது அழகே உருவெடுத்தார் போலிருந்த அக்குழந்தையைக்கண்ட அரசனின் மூத்தமனைவியர்கள் திடுக்குற்றனர். "இக்குழந்தையை உயிரோடு வைத்திருந்தால் எப்படியும் தப்பாமல் நமக்குத்துன்பம் வரும் இவனுக்கு அரசுகிடைத்தால் நம்மை சற்றேனும் பாரான். அதனால் இப்பொழுதே இக்குழந்தையை ஊருக்கப்புறமிருக்கும் பிள்ளையார் கோவிலருகிலுள்ள பெருச்சாளிவளையினுள்ளே திணித்துவிட்டு வந்துவிடலாம். அப்பெருச்சாளிகள் கடித்து இதனைக் கொன்றிடட்டும்" என்று நினைத்து அவ்விதமே செய்து விட்டனர். பின்னர் ஒருவரால் மீனின் கன்றைக் கொணர்ந்து வேடப்பெண்ணின் முன்பு போட்டு இதைத்தான் நீ பெற்றாயென்று அவளை ஏசி அவளுடைய கண் கட்டுகளை அவிழ்த்து விட்டனர். நம் வேடன் மகளும் இதுவும் நம் விதியா? என ஏங்கியிருந்தாள். அரசனையழைப்பதற்காக மணியும் அசைக்கப்பட்டது.

இச்சமயத்தில் அரசன் சலங்காபுரியாகிய தன் பட்டணத்திற்குத் திரும்பிவந்துக் கொண்டிருக்கிறான் மணியோசை கேட்டவுடனே பிள்ளை பிறந்துவிட்டதெனக்களிப்படைந்து வெகு வேகமாகப் புரவியை நடத்தினன் சற்ற நேரத்தில் அரமனை வந்தடைந்தான். குழந்தையை பார்க்க வேண்டுமென்னும் ஆவலதிகமாய் உள்ளே சென்றான். அப்பொழுது அவனுடைய மூத்தமனைவியர்கள் ஓடிவந்து "நாதா! இளையவள் வரால் மீனைப் பெற்றிருக்கிறாள்" என்றனர்.

"என்ன! என்ன! வரால் மீனா? எங்கே!" என்று சொல்லிக் கொண்டே பிரசவித்த இடத்தருகிற சென்று பார்த்தான். உடனே அளவற்ற துக்கமடைந்தான். "இதற்காகவா இவளை இங்கு கொண்டு வந்தேன் சீ! இவள் நாயாபேயா பெண்ணா? இதோ இவளைக் கொன்றுவிடுகிறேன். இப்படிப்பட்டவள் இருந்தென்ன போயென்ன" என்று மெத்த முனிவுடன் வாளை உருவி ஓங்கினான்.

(தொடரும்).

அ. ச. அருணாசல ஈஸ்வரர்

திருச்செந்தில் வளர் சிவன் போற்றிப்பதிகம்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி.)

12. முத்து நவரத்ன முடிசடையுந் தோளும்
முருவமோடு கனிவாயும், முகஙகளாறும்
அததிருமா! வள்ளி வலம இடமாய் வந்த
அயில் சேவல் கொடியிலங்க, அன்பு கூர்ந்து
எத்தேசமெக்காலு நின்றருள் போற்ற
எளியேன் முன தோன்றி நின்று, எனை நீ காக்க
சித்திடையில் சிலம்பு கொஞ்ச ஐயா! வா!! வா!!.
சிவசிவா செந்தில வளர் சிவனே போற்றி!!

13. விரிவுற்ற தோகைமயில்மீதிலேறி
வீரபாகு தம்பியோர் லட்சந்தொட்டு
அறிவுற்ற படை சூழ்ந்து, மேலத் தண்டு
அயில் சேவக் கொடியிலஙக, அன்னை கோயில்
மறைவுற்ற வள்ளி யன்னை தாய் தெய்வானை
வலமிடமாய் எழுந்தருளி, மனது கூர்ந்து
தெரிசித்து, யான போற்ற ஐயா! வா! வா!!!
சிவ சிவா! செந்தில் வளர் சிவனே போற்றி!!!

14. மெய்யுற்ற பரஞ்சுடரே! கருணைமூர்த்தி!
வேதாந்த மெய்ப் பொருளே! அமரர்நாதா!
மையுற்ற கூர் விழியாள் பெண் வள்ளியம்மாள்
வசிகரசிகாமணியே! வா! வா!! யென்முன்
கையுற்ற வேலிலங்க, இடைதள்ளாட
கனகபதச் சிலம்பு கலீர் கலீரென்றாட
செய்யுற்ற தெய்வ செழுஙகனியே! வா! வா!!
சிவ சிவா! செந்தில்வளர் சிவனே போற்றி!!

15. பழம்பொருளே ! மனோன்மணியாளீன்றெடுத்த
பாக்கியமே ! மெய்ஞ்ஞான பவுஷே ! வேதம்
தொழும்பொருளே ! இடையிங்கலை நேர்ச்சுழியில்
துலங்கி நடம் புரிந்தருளும் சுவாமி நாதா !
எழும்பொருளே ! வள்ளி யெனம்மாள் தெய்வானை
இன்பசுக நாயகனே ! யெளியேன் உள்ளச்
செழும் பொருளே ! என் குருவே ! சித்தே ! வா ! வா !
சிவசிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

16. சருவதேவ நாயகனே ! அஞ்செழுத்தே ! மூலத்
தவக்கொழுந்தே ! மெய்ஞ்ஞானத்தாயே ! வள்ளி
மருவு கிருபா கரனே ! வைகையாற்றில்
வந்தருளும் பால சுப்பிரமணியதேவா !
அருணகிரி நீகைண்ட நாதர்கண்டு
அருள் புரியும் கண்மணியே ! அழகே ஞானத்
திரவியமே ! என்குருவே ! சித்தே வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

17. மந்திரம் சேர் மெய்ப்பொருளே ! ஞானமூர்த்தி !
வாலாம்பாளீன்றெடுத்த மவுனசித்த
தந்திமுகன் பின் துணைவா ! சாமிநாதா !
சகல சித்தர் பாடுகின்ற குருவே ! மோன
சுந்தரமே ! வள்ளியம்மாள் தாய் தெய்வானை
தோள்சேரும் சவுந்தரமே ! துலங்கு மென்றன்
சிங்கைகுடி கொண்டருளும் ஐயா ! வா ! வா !!
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

18. அழியாத யோகவெளி வீதியாகி
அகண்டபரிபூரணமாய் வாசியோகம்
சுழியாத சுழிமுனையில் சூக்ஷமாகி
துலங்கிநின்ற விந்துவுடன் நாதமாகி
ஒழிவாகி, பரஞ்சுடராய், உருவமாகி
ஒன்றிரண்டாய், மூன்ருகி யுலக மெங்கும்
செழிவாகி விளையாடும் ஐயா ! வா வா !
சிவசிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

19. கை கொடுக்க மெள்ள மெள்ள வா வா வென்று
கால் தூக்கி நடக்க, நடைகாட்ட வென்ன
பையலுக்கு நடை வருமோ—யெட்ட நின்றால்
படுக்குமுனை தூக்கனுமோ—பரனேயுனறன்

மெய்யருளும் வினைகாட்டி, ஞானம்காட்டி
விந்தைமலர் உள்காட்டி, யெனையாட்கொள்ள
செப்வகற்த ஒரு சமபம்-ஐபாவா! வா!
சிவ சிரா செந்தில்வளர் சிவனே போற்றி!!
(தொடரும்), லால்குடி சே. கந்தசாமி ஐயர்.

நித்திரை.

இவ்வுலகில் ஜனித்துள்ள சகலசீவ பிராணிகளுக்கும் அவைகள் உயிருடனிருப்பதற்காக காற்றும், நீறும், உணவும் எவ்வளவு முக்கியமானவையோ. அவ்வளவு முக்கியம் நித்திரை என்பதும் இந்த நித்திரை எல்லாருக்கும் தெரிந்த விஷயம். யாவருக்கும் தெரிந்த விஷயத்தைப்பற்றி ஒருவன் எழுதவேண்டும் என்று சிலர் அலக்ஷியமாக எண்ணுவார்கள் அப்படி யெண்ணக்கூடாது. இன்னும் சிலர்க்கு இதை படிக்கும்போதே நித்திரையுண்டாகும். எப்படியானாலும் நித்திரையைப் பற்றி அநேக விஷயங்களிருக்கின்றன. அவைகளை கொஞ்சம் சுருக்கமாக எடுத்தெழுத நம் ரஞ்சிதன் இடங்கொடுப்பான் என்று மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நித்திரை எப்பொழுதுண்டாயிற்று? என்ற கேள்வி சிலருக்கு பிறக்கலாம். பிரபஞ்சம் எப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டதோ மனிதன், பக்ஷி முதலிய பிராணிகள் எப்பொழுது உண்டாக்கப்பட்டனவோ அப்பொழுது முதல் இதுவும் உண்டாயிருக்கிறது. நாம் நித்திரையை நித்தியம் அனுபவிப்பதனால் வெறுப்படைகிறோம். ஒருநாள் தூங்காவிட்டால் படுகிறபாடு சொல்லமுடியாது இந்தநித்திரை சகல பிராணிகளுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கிறது.

மனிதர்களும் பிராணிகளும் உதரபோஷணார்த்தம் எவ்வளவோ வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே பகல் வேளைகளில் சரீரத்தைச் செருப்பாக பாவித்து கஷ்டப்பட வேண்டியதாகவிருக்கிறது. கடவுள் வேலைசெய்வதற்கு பகலென்றும், அதனால் வரும் சிரமத்தை தீர்த்துக்கொள்வதற்கு இரவென்றும் உண்டாக்கி இருக்கிறார். இரவில் கால்நீட்டித் தூங்கும்விதம் யாருக்குத்தான் தெரியாது. அவ்விதமாய் மெய்மறந்து கண் மூடுவதில் என்ன ஆனந்தம் மத்தியானமுழுவதும் பரபரப்புடனும் ஆவலுடனும் நெற்றிவியர்வை நிலத்தில் விழ வேலைசெய்து மாலையானதும்போது மெய்சோர்ந்து கை கால்கள் களைத்துப்போக இரவில் நித்திரை என்ற மந்திரமில்லாவிடில் யார்தான் வாழ்வை இனிமையாக எண்ணுவார்கள் அந்த மந்திரத்தில் எத்தனைபேர் மனப்பூர்வமாக மனசந்தோஷத்துடன் சிக்கிக்கொண்டு சுகமனுபவிக்கிறார்கள்.

பிராணிகளின் உயிருக்கு உறுதிகொடுக்கும் ஊட்ட நித்திரையே அதுவே தான் கை, கால், கீல்கள் இவைகளுக்குப் பலத்தைக் கொடுத்துக் கெட்டுப்போகாமலே ஆடிக்கொண்டிருக்க மைபோல் உதவுகிறது பகலில் வேலைசெய்து அயர்ந்தவனை மறுநாள வேலைசெய்ய போக்கியனாகச் செய்யும் வைத்தியமும் அந்த நித்திரையே.

இனி உட்காரமுடியாது கொஞ்சம் சாய்ந்துக்கொள்ளுகிறேன் தூக்கம்வந்துவிட்டது பாக்கிக்கதையை நாளைக்கி சொல் என்று எத்தினைபெயர் சொன்னதில்லை தூக்கம் வரும்போது புத்திகொஞ்சம் கொஞ்சமாய்த் தேகத்தைவிட்டு நீங்கிவிடுகிறது கைமேல் தலையை வைத்துத் தூங்கும் குழந்தையைவிட்டு மெதுவாய் ஒருதாய் தனகையை எடுப்பதுபோல தூங்குமுடலைவிட்டு அறிவு கொஞ்சம் கொஞ்சமாய் அகன்றுவிடுகிறது.

நித்திரை ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானது என்பதைப் பற்றி ஒரு வைத்தியர் பின்வரும் விதம் அபிப்பிராயப்பட்டிருக்கிறார் காலைமுதல் மாலைவரை ஒவ்வொரு மனிதன்படும் அவஸ்த்தை நாழிகை ஏற ஏற அதிகரித்து வருகிறது. ஹிருதயம் நாழிகையாக ஆக அதிகமாக அடிக்கிறது இராத்திரி தூங்குமுன் அடிப்பது வெகுஅதிகம். நித்திரை மாத்திரம் அந்த வேகத்தை குறைத்து மறுநாள் காலை சரியான நிலைமையில் கொண்டுவைக்காமற்போகுமாயின் அம்மனிதன் இந்நிலவுலகை நீத்து வானுலகை அடையவேண்டுவதுதான். அவன் பிழைத்திருப்பதே வெகு கஷ்டமாகமுடியும் காலையில் நித்திரை நீத்து எழுந்திருக்கும்பொழுது ஹிருதயம் நிதானமாக அடிக்கும் மனம் நிம்மதியாகவிருக்கும். தேகம் சிரமமற்று வேலை செய்யத்தகுந்ததாகயிருக்கும். இக்காரணத்தைக்கொண்டுதான் நம் நாட்டுவைத்தியர்கள் காலையில் நாடி பார்க்கவேண்டுமென்கிறார்கள் இக்காரணத்தையறியாதார் அநேகரிருக்கின்றனர்.

கூண்டைவிட்டு வெகுதூரஞ்சென்ற பக்ஷிகளெல்லாம் இனிமையான குரலுடன் மீண்டும் இரவைக்கழிக்க கூண்டில் வந்தடைகின்றன ஏழையும்பணக்காரனும் ஒரேமனதாய் நித்திரையை விரும்புகிறார்கள் சிலர் ஈசுவரன் கொடுத்திருக்கும் இந்தநித்திரையை செய்யவேண்டிய காலத்தில் சரியாகச் சிலவிடுகிறதில்லை சிலர் குறைத்துத் தூங்குகிறார்கள். சிலர் அதிகமாக தூங்குகிறார்கள். சிலர். இரவெல்லாம் விழித்துப் படிப்பதோ எழுதுவதோ வழக்கமாகயிருக்கிறது அப்படிச் செய்வதால் அதிக காரியங்களை முடிப்பதாக எண்ணுகிறார்கள் இரவெல்லாம் விழித்திருப்பார்களேயானால் பகலெல்லாம் தூங்குமுகமாகவே இருப்பார்கள். இரவும்கெட்டு பகலும்கெட்டு ஒரு காரியமும் நிறைவேறாமல் முடிகிறது.

தூக்கத்தில் எவ்வளவுகாலம் சரியாகச் சிலவிடுகிறமோ அவ்வளவும் ஆயுள்விர்த்தி. தூக்கத்திற்கு வேண்டிய காலத்தைக் குறைத்தவ

ஒருவனும் இதுவரை உறுப்பட்டதில்லை. எல்லாப் பிராணிகளும் அறுபது நாழிகைக்கு ஒருதடவை தூங்கியே தீரவேண்டும். பகல் 30 நாழிகை விழித்திருக்கலாம் இரவு 30நாழிகையும் விழித்திருந்தாலு மிருக்கலாம். பிறகு ஒருவன் தூங்கியே தீரவேண்டுமல்லாது சுகத்துடன் தூங்காமலிருக்கமுடியாது. அவன் என்ன வேலைக்காரனுத்தானிருக்கட்டும், எவ்வளவு பலவானுகத்தானிருக்கட்டும் வண்டியோட்டுகிறவனும் ஏற்கால் மீதிலுட்கார்ந்துக்கொண்டே தூங்குகிறான். குதிரையின்பேரில் விடாமல் 60 நாழிகை சவாரிசெய்தால் அதற்குமேல் அவன் குதிரையின்மேலிருந்தால் சேணத்தின்மேலேயே தூங்கிவிடுவான். யுத்தகளத்தில் இடைவிடாமல் சண்டைசெய்கிற போர்வீரர்கள் 60 நாழிகைக்குப்பிறகு சண்டை மத்தியிலேயே தூங்கிவிடுவதாக சரித்திரம் எழுதுகிறவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு திடமான சித்தமிருந்தபோதிலும் 60 நாழிகைக்குமேல் தூக்கத்தைத் தடுக்க ஒருவராலும் முடியாது. ப, ழ, ச. கருப்பஞ்செட்டியார்.

P. அளகாபுரி கீழ்ச்சாவல்பட்டி.

மார்க்கண்டன்

(38 ம் பக்கத்தொடர்ச்சி.)

சி. முடியாது ! முடியாது !!

மா. [மெதுவாக ஈனகுரலுடன் புலம்புகிறான்.]

ஐயனே ஓ ஐயனே
ஆதரித்திடாவிட்டால்
ஐயனே மடிவேனே
அத்தனே ! ஆ ! முத்தனே

ய. பேய் ! என்னதான் புலம்பினாலும் உன்னைவிடப்போகிறதில்லை

(பாசக்கயிற்றை எடுத்து)

[பாட்டு.]

[ஆறுமுக வடி வேலவனே மெட்டு.]

எந்தன் நாடுவர ஏனடா தாமதம்
ஏ மிருகண்டு மகனே !—நான்
உந்தன் ஆவியுடன் உலகரசனையும்
உவந்து இழுக்கிறேன் பார் ! (தூக்கி எறிந்து சிவனையும் மார்க்கண்டனையும் சேர்த்துக்கட்டி இழுக்கிறான்).

திடீரென்று ஒரு சப்தம் உண்டாகிறது. லிங்கத்தின் தலை வெடிக்கிறது அந்த வெடிப்பிலிருந்து புகைப்படலங்கள் கிளம்புகின்றன- யமன் திக்பிரமை கொள்ளுகிறான்.

பரமசிவன் ப்ரத்யக்ஷமாகிறார்.

பரமசிவன் (மிகுந்த கோபத்துடன்)-பழிக்குப்பழி கொடடா-மெட்டு

கார்வண்ண கால நீலா !-நீ (குதித்து)
ஆர் கண்டு என்ன செய்தாய் ?
பன்னக பூஷணன் நான்—ஆ
என்பதை மறந்தாயோடா ?

பூசை செய்யும் பாலனை ஓ (பல்லை கடிக்க)
பாசம் விட்ட பாபியே !

அடா !— (பற்களைக்கடித்துக் குதித்து)
காலால் உதைத்தேன் காலா ! (உதைத்துத்தள்ள யமன் மூர்ச்சித்து கீழே விழுகிறான்) ஏ.

பாலா ! பயம் விடுவாய்.

மா. (எழுந்து, கடவுளை நமஸ்கரித்து கைகளால் தாளம் போட்டுக் கொண்டே; ஆநந்தத்துடன், குதித்துக் குதித்து, ஆடி ஆடி, பாடிப் பாடி, நாத்தழும்பேற ஸ்துதிக்கிறான்]

நாமாவளி.

காமனை கண்ணால் எரித்தவனே !
காலனைக் காலால் உதைத்தவனே !
பாமரர் போற்றும் பாம்பணியே !
பரமனே வேலனை பெற்றவனே !
பன்னக பூஷண பரமசிவா !
பார்வதி ரமண சதாசிவா !
அன்னைபோல் உன்னையே அண்டினேனே
அருள் செய்தன்பனைக் காத்திட்டவா !

[தலைவிரி கோலமாய் "பூமாதேவி" ஓடிவந்து பரமசிவன் காலில் விழுகிறாள்]

ஓ கங்காதரா ! சாத்வீகாயா ! பூபதே ! விருபாக்ஷா' க்ஷணத்திற்கு க்ஷணம் பூபாரம் அதிகரிக்கின்றதே! தாங்கள் இன்னும் அரை நிமிஷம் தாமதிப்பீர்களேயானால் பூமியின் பாரம் தாங்கமுடியாதது ஆக ஆகிவிடும். ஆகையினால் தாங்கள் தயவுசெய்து கிருபை செய்ய வேண்டும்.

பரமசிவன்:— பேஷ்! காலனே ! நின்னுடைய அதிகாரம் எம்மட்டும் என்பதை அறியாமல் பரம பக்தனும் பாலனை பயமுறுத்தினாய் மேலும் காலகாலனுயுள்ள நீலகண்டனாகிய நம்மையும் நின் பாசத்தினால் கட்டியிழுத்தாய். ஆகையினால் நீ அன்றுடன் நாசம். [பூமாதேவியை நோக்கி.]

* * *

ஏ பூதலேவி! இம்மிருத்யு தன்னுடைய பலத்தை அறியாமல் கர்வங்கொண்டு, நம்மையும், பக்திப் பழமாகிய நம் மார்க்கண்டனை யும் பாசத்தினல் பலித்து இழுத்தான். அவன் இப்பாலகன் என் றும் பதினறு வயது என்பதையும், சிரஞ்சீவிப் பட்டத்தைப் பெற்ற வன் என்பதையும் மறந்தான் போலும்—ஆயினும் உன்னுடைய பிரார்த்தனையின் நிமித்தமாக, இதோ! இவனை எழுப்புகிறேன். [காலனை விளித்து] ஏ தென்னூர் மன்ன! எழுந்திருப்பாய். (யமன் மெதுவாக எழுந்திருக்கிருன்.) இம்மார்க்கண்டனுடைய பக்திக்கு மெச்சி, இவனுக்கு என்றும்பதினறண்டு ஈந்ததோடுகூட நமக்குச் சமமான பீடத்தையும கொடுத்தோம்' என்பதை மறந்தாய் போலும் ஆயினும் ஒரு விஷடம் கூறுகிறேன் கேள்—"இனி நீயாவது அல்லது நின் தூதர்களாவது நாம் வீற்றிருக்கும் இடங்களுக்கு வருதல் ஆகாது—அல்லும் பகலும் நம்மையே நம்பி நம்மைப் பூசிப்பவர்களிடத்தில், நீயும் நின் தூதர்களும் உங்கள் சாமார்த்தியங்களைக் காட்டுவதும் கூடாது" என்னும் இவ்விஷயத்தை மனத்தில் நன்ருய்ப் பதிபபாய் ⁂ ⁂ [மார்க்கண்டனைப் பார்த்து].

மார்க்கண்டா! உன் பக்திக்கு யாம் மெச்சினேம். உன் பெற்ரேர்கள் மனம் என்றும் குளிர்ந்திருக்கும்படியான வரத்தையும் தந்தோம் மேலும் இம் மண்ணுலகம் உள்ளவரையில் உன்மகிமையும் சரித்திரமும் மங்காப்புகழுடன் வாழக்கடவது.

⁂ ⁂ கூட, நின் சரித்திரத்தைச் சொன்னவர்களும், கேட்டவர்களும் இகலோகத்தில் 'தர்மம்-அர்த்தம்-காமம்-மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களை அடைவதுடன் 'பிறந்து இறக்கும்' பிணியினின்றும் நீக்கப்படுவார்கள்.

ய. கடவுளே! நீலகண்டா! ஆலாலமுண்ட கனிவாயனே! நேயனே! அடியேன் தெரியாமல செய்த பிழையை மன்னித்தருள வேண்டுமாய்ப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். ⁂ ⁂

[மார்க்கண்டனை நோக்கி]

சிரஞ்சீவி பட்டத்தைப்பெற்ற என் அருமைச் செல்வனே! ஆயுட் பிரமாணத்தை அறியாமல் அடியேன் செய்த அபராதத்தை மன்னிக்க வேண்டும.

மா. 'என் பெற்ரேர் செய்த ஆசிர்வாதத்தின் பலனை நான் இன்றே கண்டேன்.' ஐயனே கடவுளை நம்பினேர் கைவிடப்படார்' என்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!!

பூ. எம்பெருமானே! அடியேன்மேல் கிருபை கூர்ந்து தாம்செய்த நன்றிக்கு யான் செய்யும் கைம்மாறும் என்னே! நாத்தழும்பேற நினைப் பஜிப்பதன்றி, யாது செய்ய வல்லேன் யான்.

(பாடுகிருன்).

(பரமசிவன் கொஞ்சங்கொஞ்சமாய் மறைந்துகொண்டே வருகிறார்.

['மாற்றறியாத செழும் பசும் பொன்னே'-மெட்டு]

பல்லவி.

பிள்ளைக் கறியை உண்ட பித்தனே ! சுத்தனே !
அல்லலெலா மகற்றும் அத்தனே ! முத்தனே !

அநுபல்லவி.

அல்லாத காலனை அன்றே அடர்த்தவனே !
பொல்லாத பிறவியைப் போக்கத்தக்க மருந்தே ! (பிள்)

சரணம்.

கல்லாத பேராளுலும் காக்கும் அகண்டனே !
காட்டில் திரியும் ஆல காலம் உண்டவனே !
சொல்லாமல் வழிபட்டான் சீக்கிரம் காத்தவனே!
தனிபுகழ் பெற்றவா கந்-தன் பணிபாதனே
[பிள்ளைக்]

மா. கடவுளே ! உம்மை நம்பினவர்கள் ஒருகாலும் கைவிடப்பட மாட்டார். சுபம். சுபம்.

முற்றிற்று. லா. கந்தசாமி ஐயர்.

மிருகாவதி

(35 ம் பக்கத்தொடர்ச்சி)

கஞ்சுகியும் அரசனுடைய கட்டளையை சிரசில் வகித்து ஓடோடியும் அந்தப்புறஞ்சென்று லலிதா தேவியாருக்கு விஷய மின்னதென அறியப்படுத்தி அவருடைய கட்டளையையும் பெற்று கன்னிகா மாடஞ்சென்று நோக்குங்கால், கண்மணிகளான பெண்மணிகள் நால்வரையுங்காணாது வருந்தி, அங்குமிங்குந் தேடித்திரிந்தும், நந்தவனத்தில் போய்த் தேடிப்பார்த்தும் காணாமல் திகைத்து, வியர்த்து பெருமூச்சுவிட்டுக் கொண்டு, அந்தப்புரம் புக்கி பெருமாட்டியாம் லலிதாதேவியாருக்கிதைச் சொல்லி, அரச சமுகத்திலும் வந்து பெண்களை அங்கு, மிங்கு மெங்குந் தேடியும் காணவில்லை என்று துயரமிகுந்து கூறினள்.

அரசனும், அமைச்சனும் கேட்டு திடுக்கிட்டு; மதிகலங்கலாயினர். நாலா பக்கங்களிலும் போய்த்தேடும்படி தூதர்களை யனுப்பலாயினர். இதென்ன விபரீதமோ வென்று பயந்து துன்பப்படலாயினர். அன்று முழுதும் ராஜகுமாரிகளை எங்குந்தேடியும் காணாமல் அரண்மனை முழுதுங் குழம்பலாயினர். மிருகாவதியின் பெற்றோர்கள், மற்றமூன்று கன்னிகாமணிகளின் பெற்றோர்கள் மனம் வருந்தி துடிப்பதை யாற்றமாட்டாதவராய் சூரிய பகவானும் தம்கதிர்களை யொடுக்கிக்கொண்டு மேல் சமுத்திரத்தில் மூழ்கலாயினர்.

VII

"நாமெங்கிருந்தோம்! இங்கு வந்ததென்ன மாயமோ தெரியவில்லையே இதுயாருடைய நந்தவனமோ நம்முடைய சிருங்காரத் தோட்டத்தைக் காட்டிலும் ஆயிரமடங்கு உன்னதமாயும், விசித்திரமாயும், கண்கட்டு மனோரம்யமாயும், ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் பெருகக்கூடியதாயும் இருக்கின்றதே" என்றாள் மிருகாவதி.

"நமக்கென்றேற்பட்டிருக்கும் உபவனத்தில் பூக்கொய்துகொண்டிருந்தோம். அழகிய பிலத்தைக்கண்டோம். வியப்புற்று அதற்குள் நுழைந்தோம்? நுழைந்தது தான் தாமதம், இங்குற்றோம், ஆச்சரியமாகத்தானிருக்கிறது" என்றாள் கலாவதி.

"இது எவருடைய பூந்தோட்டமோ தெரியவில்லையே, இந்த அழகிய நந்தவனம் கண்காட்சியேதான். வழக்கம் போல் நமதிருப்பிடம் போய்சேராவிட்டால் நமது தந்தையர் வருந்துவார்களே" என்றாள் ரூபாவதி. கமலாட்சியோ, மற்ற மூவரையும் நோக்கி, தோழியர்காள் இதோ பாருங்கள் தேவபாரிஜாதமலர் ஏராளமாய் புஷ்பித்து கீழே உதிர்ந்து கிடக்கின்றன. இந்த மரங்கள் பங்க்தி பங்க்தியாய் ஏராளமாய்ப் பயிரிடப் பட்டிருக்கும் விந்தையைக் கண்டீர்களோ மத்தியில் செவ்வசோக விருக்ஷங்களும் நிறைந்து பூத்து காணப்படுகின்றனவே உய்த்துணருங்கால், நாம் எளிதில் காணக்கூடாத பற்பலதேவ விருட்சங்களமைந்த இந்த அழகிய உத்தியானத்தை தேவேந்தர மகாராஜாவின் 'நந்தவனம் என்று சொல்லப்பட்ட உபவனமாயிருக்கலாமென்றே தீர்மானிக்கிறேன்" என,

மிருகாவதி: தோழி, கமலா அங்ஙனமே யாகட்டுமே ஆபின் நமக்கினி நலலகாலமே தான். தெய்வச் செயலாலன்றி நாமிங்கு வந்து சேர்வதுந் துர்லபமாகலின், ஈஸ்வரகிருபையால் தான் நம்மையிங்கு கொணர்ந்து சேர்ப்பிவிக்கப்பட்டிருப்பதாய் நானுமெண்ணுகின்றேன் நஞ்செபலாவதொன்று மில்லையே" என்றாள்.

கலாவதி: இதோ சந்தன விருக்ஷங்களின் வரிசையைப் பாருங்கள். என்ன நேர்த்தி ஒவ்வொரு சந்தன விருட்சங்களினிடையில் தேவ பாரிஜாதமும், அசோகு, மல்லிகை முல்லை படர்ந்த இளமா மரங்களினமைப்பும். அவ்விள மாமரத்தை மல்லிகை, முல்லை கலந்த இரண்டு கொடிகள் அடர்ந்து படர்ந்து, சுற்றிக் கொண்டிருத்தலை நோக்குங்கால், நல்ல தீரோதாத்த புருஷனை யுவதிகளான இரண்டு நங்கையர்கள் தங்கள் கைகளினால கட்டி அணைந்திருந்தலைபோலவும், அந்த ஸ்திரீ புருஷர்கள் நறுமணங்கமழ்ந்த புஷ்பங்களைத் தங்கள் சிரஸில் சூடிக்கொண்டிருத்தலை போலவும் காணப்படுவதும், அம்மரத்தைச்சுற்றிலும் சற்று எட்டி மூன்று கஜ தூரத்துக் கப்பால் சம்பங்கி கொடிகள் மாத்தின் கிளைகளைப்பற்றி படர்ந்து பூத்து காணப்

படுவதும் அழகிய ஸ்தாகிரகஞ் சமைக்கப்பட்டிருப்பதாகவே நினைக்கக்கூடியதாயிருக்கிறது. (தொடரும்,)

துறையூர். மா. சுப்பராமய்யர்.

சுலோசனை

(33 ம் பக்கத் தொடர்ச்சி.)

மே: விண்மணிக்கொப்பான என் நன் மணி அப்படியே என்ன சொல்லவருகிறாய் ?

சு: (கொஞ்சியபடி, முகத்துடன் முகஞ்சேர்த்து) இன்னுயிர்காதல போர்முனைக்கே போகவேண்டாமே (கையெடுத்து கும்பிடுதல்) ஜானகியின்மேல் தூராசைகொண்டிருக்கும் நும் பிதா (கடிந்து) எக்கோலமானாலென்ன ? (கையைச் சொருக்குதல்) நாமிருவரும் (நயந்து) ஒருங்கு கூடி ஸ்ரீராமன் தாளிணைபணிந்து நற்கெதி பெறுவோம்மே அதுவே யன்றோ பேரின்பம். இந்த நிலையில்லாத வாழ்க்கை வேண்டாமே ; எவர் பூஷித்தால் என்ன, எவர் தூஷித்தால் என்ன ? நமக்காவதென்ன விருக்கின்றது ? நம்முடைய பாந்தவர் தீர்க்காலோசனை செய்தன்றோ ராமசரணம் போயடைந்தனர். வீணில் தயங்கி மயங்கவேண்டாமே இப் பிராந்தியை விட்டொழித்தால் பரமசுகமாய் கைவல்யம் உடனே கைகண்ட பலன் பெரியமனது பண்ணுங்களேன்; இதில் குற்றமொன்றுமேயில்லை. (மன்றாடுதல்.)

மே: அடி, என் குணமணி எல்லா மறிந்தும் அறியாதவள் போல் வசனிக்கின்றனை (பராக்ரமத்துடன்) அறிவிலி ! சமர் முனையில் சாவேனேல் வீரசுவர்க்கம் கைமேல் கண்டபலமே அறியாயோ போருக்குப்பயந்து பின்னிடைதல் நரகஹேதுவா மென்றறியாயோ! மேலும் சூரியசந்திரருள்ளவரையில் இழிச்சொல்லொன்றே எஞ்சி நிற்கும். ஆகலின் சுத்த வீரனும் நான் செல்ல வேண்டியதேயாம். இனி நீ மறுதளிக்காமல் மகிழ்ந்து விடைகொடு.

சு: (சற்றுயோசித்து, கண்ணீர் சிந்தியபடி) நாசகாலங் கிட்டியது போலும், தத்வஞ்செவியில் ஏறவில்லை: சரி நீருண்ட மேகம் போலிருண்ட இக்கல்லிருளிலேயே போகத்தான் வேண்டுமோ, சற்றிருந்து தெளிந்து போகலாகாதோ ?—ஐயோ, நின் பிரிவை நினைக்கவும் மனம் பதைக்கின்றதே. என் செய்வேன் (பெருமூச்சுவிடுதல்.)

மே: இப்பொழுது இரவு மூன்று ஜாமமுங் கழித்து நான்காவது ஜாமம். யான் சென்று, எந்தையரைக்கண்டு, சிறிது பேசி, நவீன கவசம்பூண்டு, கூரிய சில ஆயுதங்களையும் அஸ்தாங்களையும எடுத்துக்

கொண்டு, நல்ல ஜாதி அசுவங்கள் நான்று பூட்டிய ரதத்தில் சாரதியுடன் சூரியன் உதயமாவதற்குள் போர்முனை செல்லுகின்றேன். அன்புடன் விடைகொடு பயங்காதே

சு. விதியைத்தள்ள எவராலுமாகாதே (சற்று மௌனம்) நான் சொன்னபடி செய்யுங்கள். நல்லவழி ஏற்படும் போய் வாருங்கள்

(மேகநாதன் தந்தை வீடு நோக்கி செல்லுகின்றான்).

(தொடரும்),

துறையூர் மா. சுப்பராமய்யர்.

விநோத விஷயங்கள்

(39 ம் பக்கத் தொடர்ச்சி)

மகன்: அம்மா! அம்மா!! என்னை ஏன் உதைக்கிறாய்.

தாய், சீ சீ உன் உபாத்தியாயர் "நீ பாடமே படிக்கிறதில்லை" என்று சொல்லி அனுப்பியிருக்கிறார் அதனால் தான் அடிக்கிறேன் படிக்கும் பிள்ளைகளுக்கு "புஸ்தகம் அஸ்த பூஷணம்" என்றல்லவா கூறப்பட்டிருக்கிறது.

மகன். ஓ ஹோ! சரி சரி தெரிந்துகொண்டேன் ஹஸ்தத்தில் 'புஸ்தகத்தை எப்பொழுதும் வைத்துக்கொண்டு திரிகிறேன். அப்பொழுது படிப்புவரும்.

7. வகுப்பில் இரண்டாவது

தகப்பன்: அடேய் ராமா' நீ உங்கள் வகுப்பில் எத்தனாவதுபையன்

ராமன்: இரண்டாவது

தகப்பன்: மொத்தம் எவ்வளவுபேர்.

ராமன்: இரண்டேபேர்.

தகப்பன்: பேஷ் பலே.

8. வேடிக்கை பாஷை.

ஒரு கோயில் பரிசாரகன் ஒரு அமீனாவைக்கண்டு, "திருப்பூனை திருமடப்பள்ளியில் திருப்புகுந்து திருச்சட்டியில் திரு இருக்கும் திருப்பாலை திருக்குடித்தது. திரு அதைத்திரு கண்டு திரு அடி திரு எடுத்து திருச்சாத்தினேன் திரு அது திருமியாமியா திரு என்றது" என்று கூறினான்.

இந்த பஷையை கொஞ்சமேனும் அறியாமல் திகைக்கப் பக்கத்திலிருந்தோர் "பூனை சமையல் கட்டில் நுழைந்து பாலைக்குடித்ததும் தடியாலடித்தானும். அது மியா மியா வென்று கத்திற்றாம் என்று கூறினாகை.

(தொடரும்,)

V. கிருஷணசாமி.

RAJA RAJESWARY AND CO.

Snuff Emporium, Rayapuram Post, Madras

நன்பர்களே! எங்களின் உயர்தரமான பட்டணம் பொடியை ஒருவிசை தருவித்து உபயோகித்துப் பாருங்கள். இது நல்ல மாதிரியான புகையிலையைக் கொண்டு முதல்தரமான நெய்யின் உபயோகத்தினுல் செய்து வீ.பி. மூல்யமாய் அனேகருக்கு அனுப்பி வருகிறோம் தயவுசெய்து ஒருதரம் சுவல்ப ஆர்டர்கொடுத்து வரவழைத்துப் பார்த்து இதன குணத்தை அறிந்து சம்மதமாயின் மறு ஆர்டர் தேவையான அளவுக்கு கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

பாக்கிங் வி. பி. சார்ஜி உள்பட		வீசை 1-க்கு	கிரயம்	ரூ.	4-5-0
,,	,,	,,	அறைக்கு	,,	2-3-0
,,	,,	,,	காலுக்கு	,,	1-2-0
,,	,,	,,	சேர் 1-க்கு	,,	1-0-0

ரயில்வே சார்ஜ் நீங்கலாக வீசை 1-க்கு கிரையம் ரூபா 3-10-0

ஜே. ஆர். நறுமண மூக்குத்தூள்.

புட்டி 1-க்கு விலை அணு 4 டஜன் 1-க்கு கிரையம் ரூபா 2-4-0

ராஜ ராஜேஸ்வரி அண்டு கம்பெனி,

பொடி வியாபாரி இராயபுரம்போஸ்டு, மதராஸ்.

பத்திராதிபரின் அறிவிப்பு.

நம் இரஞ்சிதனுக்காக பினங்கிலும், அதைச்சார்ந்த போரிட்பந்தர், தைப்பிங், மாலாய் நாடுகளில் பரோபகாரார்த்தமாய் உழைக்கும் நம் நன்பர் சிவநேச சுப்பிரமணியம் அவர்களுக்கு எம்மனமார வந்தனம் செலுத்துகிறோம். இன்னும் ரஞ்சிதன் பேரில் ஊக்கமெடுத்து பல சந்தாதாரர்களை சேர்த்து அனுப்புவாரென்று கோருகிறோம்.

பத்திராதிபர்.

பொன்நிப்புபோட்ட அழகிய பவுன்டன் பேனு.

இப்பேனு அழகிய பொன் நிப்புபோட்டது நீண்ட நாள் யாதொரு கெடுதலில்லாமல் எழுதக்கூடியதும் பார்வைக்கு வெகு அழகுள்ளதாயுமிருக்கின்றன இப்பேனு ஒன்று வாங்குபவர்களுக்கு அழகிய பட்டு குட்டை 1-ம், செண்டுபாட்டல் 1-ம், நிக்கல் கிளிப்பு 1-ம் இனும்.

இங்கிறப்பும் பிஸ்ட்டருடன் விலை ரூபா 1-12-0

விலாசம்:- எம். எஸ். பாதர் அண்டு கம்பெனி,

நெ. 9. ஆருமுகம் தெருவு ஜி டி. மதராஸ்.

M. S. GOPAUL & Co.

SEENU MUDALI STREET, MADRAS.

நூதன அமெரிகன் பாக்கெட் வாச்

.நூதனமான அமரிகன் பாக் கெட் வாச்—12 வித இனம் சாமான்களுடன் விலே ரூபா. 5 0-0 5 வருஷம் உத்திரவாதம்.

இக் கெடியாரம் அமெரிகா தேசத்தில் பேர் பெற்ற கம்பனியாரால் உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்டதும் 5 கெம்புகளைகள் வைக்கப் பட்டதும், எவ்வளவு முரட்டுவேலே செய்தாலும் கெடுகாள் நிற்காமல் போகக்கூடியதும், கவர்ன்மெண்டுகுண்டுக்கு வித்தியாசமில்லாமல்காலத்தைக் காட்டக்கூடியதும் 12 விதஇனம் சாமான்கள் கிடைக்க கூடிய இக் கெடியாரத்தின் விலே ரூபா. 5 தான்.

12 வித சாமான்களின் விபரம்,—

உயர்ந்த கெடியார கொலுசு—1, அழகிய பவுண்டன் பேனு-1. கிளிப்பு-1, இமிடேஷன் ஷர்ட்பட்டன்-4, அழகான கைகுட்டை-1. முகம்பார்க்கும் தந்தகண்ணுடி சீப்புடன்-1, சென்டு புட்டி-1, எலக்டிரிக் சாமந்திபில்லே-1, இமிடேஷன் கல்பதித்த மோதிரம்-1 சோப்பு-1

கையில்கட்டும் ரேடியம்ரி டு வாச்

இராத்திரி காலத்தில் விளக்கு வெளிச்சமன்னியில் மணிபார்க்க கூடியதும் இதை கையில் தரித்துக்கொண்டால் வெகு அழகுள்ளதாகவும் காணப்படுகிறது இதன் விலே மிகவும் சரசம். ரூபா 5-8-0.

ரேடியமில்லாத சாதா ரிஸ்டு வாச்சு சங்கிலியுடன் ரூ. 5



ரெயில்வே ராஸ்கோப் கெடியாரம்.

2 வருஷம் உத்திரவாதம்.

இந்த கெடியாரம் உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்ட தென்றும் கெடுநாள் உழைக்கக்கூடியதென்பதும் உலகமறிந்த விஷயம் கெடியாரம் விலே ரூபா 3—8—0. நீங்கள் விரும்பினது இக் கெடியாரம்தான்

இமிடேஷன் பொன் கில்ட் பிரேஸ்லெட் வாச்.

இவ்வழகிய புதுமாதிரி கெடியாரங்கள் நல்ல உறுதியான சாமான்களால் வெகு அழகான சித்திர வேலைகளுடன் தயார்செய்து வரவழைக்கப்பட்டது இதின் அழகும் வேலையின் நேர்த்தியும், பளபளப்பான பொன்னைப் போன்ற சோதியும், சரியான காலத்தை காண்பிக்கக்கூடியது. கெடியாரம் முதல் பிரேஸ்லெட்வரைக்கும் எல்லாபாகமும் பார்வைக்கு அசல் பொன் கெடியாரம்போல் இருக்கும். இதற்கு சமத்காரமான ஸ்பிரிங்கு பிரேஸ்லெட்செயின் அமைக்கப் பட்டிருப்பதால், குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரையில் கையில் அணிந்துக்கொள்ளலாம். ஒவ்வொரு கெடியாரமும் அழகான பட்டுபெட்டியில் கியாரண்டியுடன் அமைக்கப்பட்டிருக்கும். இன்றே வாங்கி ஆனந்தமடையுங்கள். பொன் கில்ட் கெடியாரம் பிரேஸ்லெட் செயினுடன் விலை ரூ. 8

இதன் விலை சகாயம். 8-மூலை கெடியாரம் குணமதிகம்.

இந்த கெடியாரம் ராத்திரி காலத்தில் பணி காண்பிக்கக் கூடியது இச்சமயம் இக் கெடியாரத்தைதான் தான் அனேகஜனங்கள் ஆவலுடன் அணிந்துக்கொள்ளுகிறார்கள் சங்கிலியுடன் விலை ரூபா 8

நாலுமூலை ரேடியம்வாச் விலை ரூ 7-8

ஜெண்டில்மென் பாக்கெட் வாச்

இந்தியன் கவர்ன் மெண்டு குண்டுக்கு சரியான காலத்தை காட்டக்கூடியதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் அதி சிறிதும் பெரிதுமில்லாமல் நடுத்தர அளவுள்ளதும் உயர்ந்த ஜெர்மன் வெள்ளியினால் செய்ததும் பின்பக்கம் பூ வேலை செய்ததுமான கெடியாரம் விலை ரூபா. 5

நிக்கல் ஹண்டிங் கெடியாரம்

இக்கெடியாரம் இரண்டு பக்கம் மூடியுள்ளதும் அழகான பூ வேலைகள் இரண்டு பக்கம் செய்யப்பட்டதும் நீண்ட நாள் உழைக்கக்கூடியதும் வெகு அழகுள்ளதுமான கெடியாரம் விலை ரூபா. 8-8-0

உயர்ந்த அலாரம் டைம் பீஸ்கள்,

இந்த அலாரம் டைம்பீஸ்களை இப்பொழுதுதான் நம்முடைய ஆர்டரின் பேரில் புதியதாக வரவழைக்கப்பட்டது பழைய மாதிரிட்டம்பீஸ்கள்கேஸ்கள் போலவிகாரமானதகடைற்செய்கல்ல நல்ல மாதிரி வேலை செய்து பார்வைக்கு அலங்காரமாயும் சோபிதமாயும் கச்சிதமாயுமிருக்கும் இதன் கேஸ்கள் அதாவது மேல் மூடிகள் வெண்மையான நிக்கல் கில்ட்டு போட்டிருப்பதால் கேஸ்கள் வெகு நாளைக்கு பளபளப்பு மாறுமலிருக்கும் இதன சாமான்களும் வெகுநாளைக்குழைக்கூடியவை சரியானடைம் காட்டக்கூடியது வெகு நல்லவைஜெர்மன் அலாரம் டைம்பீஸ் விலை ரூ. **5**

எலக்டிரிக் சிகரேட் லைட்



இதனுல் பீடி, சிகரெட், சுருட்டு வெகு சுலபமாகபற்றவைத்துக்கொள்ளலாம். இதன் மேலிருக்கும் சக்கரத்தை கையினுல் திருப்பினுல் உடனே எலக்டிரிக் விளக்குபோல்பற்றிக்கொள்ளும்.

இதன் விலை ரூபா **1.**

ஓரே தடவை 3 விளக்கு வாங்கினுல் ஒரு பட்டு குட்டை இனும்.

பவுண்டன்பேனு எலக்டிரிக் லைட்



இதில் ஒரு பக்கம்பேனுஒரு பக்கம் பென்சலும் மறுபக்கம்படத்தில் கண்ட படி எலக்டிரிக் லைட் அமைத்திருக்கிறது தீப்பெட்டிக்கு பதில் இந்த பேனு ஒன்று கையில் இருந்தால் எப்போதும தீபபெட்டியாகவும், எழுதுவதற்கு பேனுவாவும் பென்சலும் அடங்கியிருப்பது மன்றி பார்வைக்கு பவுண்டன் பேனுபோல் செய்திருக்கிறது. அழகான நிக்கல் கிளிப்பும் அமைக்கப்பட்டிருக்கிறது. பேனு 1-க்கு விலை ரூபா **1-8-0.**

ஓரே தடவை 2 லைட் வாங்கினுல் ஒரு பட்டு குட்டை இனும்.

கடுக்கன்



இங்கிலீஷ் ரோல்டு கோள்டில் செய்யப்பட்டு உயர்ந்தபாலீஷ் கொடுக்கப்பட்டதும் அழகான இமிடேஷன் கல்பதிப்பிக்கப்பட்டதும் ஜனங்கள் ரூபா 50-க்கு மதிப்பிடக்கூடியதுமான சிறந்த கடுக்கன் ஜதை 1-க்குவிலை ரூ **1-4-0** 7-கல்வைத்த கடுக்கன் விலை ரூ **3**

7 கல் பொட்டகிராப் மோதிரம்.

இந்த மோதிரமானது எலக்ட்ரிக் தங்கத்தினால் செய்து பார்வைக்கு வெகு அழகாய் 7-கற்கள் வைத்து பொன் மோதிரம்போல் கட்டியிருக்கிறது கற்கள் பளபளப்பாயிருக்கும் இந்த மோதிரத்தின் பக்கத்தில் கடுகு அளவு சிறிய துவாரம் செய்து பொட்டகிராப் படம்வைத்து பூதக் கண்ணாடியை அமைத்திருக்கும் இதைப்பார்த்தால் பெரிய உருவங்களாய் லேடிகள் சுவாமிகள் கட்டடங்கள் முதலியன வேடிக்கையாய்த் தெரியும். இது வெகு ஆச்சரியமானது 7 கல் ரூ **1** பெரிய ஒற்றக்கல் மோதிரம் விலை ரூபா **1**

இராஜஸ் க்ஷவரக்கத்தி

இதைவைத்துக்கொண்டுக்ஷவரக்காலத்தில் நாவிதனிடம் கொடுத்து க்ஷவரஞ்செய்துக்கொள்வதால் அன்னியர்களுடைய சொறி சிரங்கு புண் சுண்டு முதலியவை வராமல் தலை எரிச்சலில்லாமல் சுகமாயிருக்கும் சீமைமேக்கர் நல்லமாதிரி கத்தி ரூ. **2.** மட்டம் க்ஷவரக்கத்தி 1க்கு விலை ரூபா **1-8-.**

இமிடேஷன் தந்த ஸ்பிரிங்சுழலும் விசிறி

படத்தில் இருப்பதுபோன்றது சீமையில் செய்யப்பட்டது.

எலக்டிரிக் விசிரிபோன்ற இவ்விசிரியை படத்திற் காட்டியபடி கையில் வைத்துக்கொண்டு பெருவிரலால் ஓர் அழுத்து அழுத்த அதினுள் ஓர் வித விசைக்கருவியிருப்பதால் 100 சுற்றுகளுக்குமேல்சுழலும் இதை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கையில்வைத்து சுகமாக விசிரிக்கொள்ளலாம். இதன் விலை ரூபா **3.**

சான்டோ ஆயில்

நபும்சகம் ஆண்தன்மையிழந்த மானிடர்களுக்கு இத்தைலம் ஓர் ஊன்றுகோலாய் ஆதரிக்கிறது அநேக கனவான்கள் இத்தைலத்தை உபயோகித்து நல்ல ஆச்சரியமும் ஆனந்த மடைந்திருக்கிறார் புட்டி 1க்கு விலை ரூபா **1.**

பலகலவா என்னும் கம்பிளி டொப்பி.

இந்த டொப்பிகள் முறுக்கேற்றிய அசல் கம்பிளி நூலினால் பின்னப்பட்டது மழை பனி முதலிய காலங்களில் உபயோகிக்கில் மிகவும் அனுகூலமானது.

நெ 1 கம்பிளிடொப்பி விலை ரூ **1-4-0** ஒரேதடவையில் 3 கம்பிளி டொப்பி வாங்கினால் ரூ. **3-4-0.**

உயர்ந்த பாக்கெட் சினஸ்கோப்



இவைகள் ஜெர்மன் தேசத்திலிருந்து நூதனமாய் வரவழைக்கப்பட்டது பயாஸ்கோப் படங்களைப்போல் தயாரித்து சிறு படங்களை இத்துடன் அனுப்பும் படியான் சினஸ்கோப்பில வைத்துப் பார்த்தால பயாஸ்கோப் கொட்டகையில பார்த்துவரும் படங்களைப்போல் தெரியவரும். இதில் யுத்தம், நாடகம், அதிசயம் இன்னும் பலவிதமாக மனதிற்கு இன்பத்தைத்தரும் படங்களைப்பார்த்து ஆனந்திக்கலாம். சினஸ்கோப் கண்ணுடியும் 40 பலவிதமான படங்களுடன் சேர்ந்த செட் 1-க்கு விலை ரூ. **1-2-0.**

காந்த சக்தியின் எந்திரம்

பலவிதமான மனுஷர், பாம்பு, மீன், வாத்து முதலியது காந்தத்தில் போவது வெகு ஆச்சரியம். பெட்டி 1-க்கு விலை அணு **12**

மணியடிக்கும் அலாரம் பூட்டு

இந்த பூட்டுகள் கனத்த எழுகு தகட்டினல் செய்து பாலிஷ் செய்யப்பட்டது. இதை திறக்கும் போதும் மூடும்போதும் கெடியாரங்களில் அலாரம் வாசிப்பதைப் போல் சப்திக்கும் இதனல் வேறு மனிதர்கள் கள்ளத்தனமாய் திறப்பதை அறிந்து கொள்ளலாம் (இப்பூட்டுகள் பெரிதாய் 3 அங்குலம் சைஸ் அகலமுள்ளது).

பூட்டு 1க்கு விலை அணு **12**

3-பூட்டுக்கு விலை ரூபா **2.**

சுகானந்தன் என்னும் இரகசிய பை

இந்தப்பை அநேக இங்லீஷ் டாக்டர்களால் பரிசைக்ஷ செய்து அனுப்பப்பட்டிருக்கிறது இதை புருஷர்கள் அணிந்துக்கொண்டு ஸ்திரீ சுகம் செய்வாராகில் எவ்விதமான மேகவியாதிகள் அணுகவொட்டாமல் தடுத்து வெகு நேரம் இன்பத்தை தருகின்றன மிகவும் உபயோகமுள்ளது.

சுகாநந்தன் 1க்கு விலை ரூ. **1**

ஓரேதடவையில் 3 வாங்கினல் விலை ரூ. **2**

அழகிய பட்டு துப்பட்டாக்கள்

இவைகள் மிக நேர்த்தியான பளபளப்புள்ள பட்டினால் செய்தது இவைகளை ஆண் பிள்ளைகள் மேல் போடும் துப்பட்டாகளாகவும் ஸ்ரீகள்மேலாக்காகவும் சிறு பிள்ளைகள் தாவணியாகவும்உபயோகிக்கலாம், இதில் ரோஸ், பச்சை, சிகப்பு நீளம் மஞ்சள் வெள்ளை மேகவர்னம், வெங்காயப் புரைவர்னம் முதலிய அனேக வர்னங்கள் உண்டு 6 முழம் நிகளமும் 3 முழம் அகலமும் உள்ள பட்டு துப்பட்டா அழகிய கரையுடன் கிடைக்கும் பட்டு அங்கவஸ்திரம் 1க்கு

விலை ரூபா 3-10-0

மகாத்மா காந்தி போட்டோ மோதிரம்.

மோதிரம் 1க்கு விலை ரூபா 1 ஒரே தடவையில் 3 மோதிரம் வாங்கினால் ரூ. 1-12-0 இந்த மோதிரம் உயர்ந்த பளபளப்பான கனடியன் கோல்டினால் மிக அழகாகபிராஞ்சு தேசத்தில்தயார் செய்யப்பட்டது ஒவ்வொருவரும் சீல் மோதிரமென்றே சொலலுவார்கள். இந்த மோ

திரத்தின் மத்தியில் கடுகளவு பிரமாணம் துவாரம் செய்து பூதக்கண்ணாடி அமைக்கப்பட்டிருக்கிறது அச்சிறு துவாரத்தில் பார்த்தால் மகாத்மாகாந்தி திலகர், லோகமாதா, அலி சகோதரர்கள் இன்னும் அனேக தேசாபிமானிகளின் உருவங்கள் தெரியும் இதன் விலை மிகவும் சரசம்.

N.B —வியாபாரிகளுக்கு டஜன் 1-க்கு ரூ. 5 வீதம் அனுப்பப்படும். (இதனால் மகாத்மாவை பிரதிதினம் நேரில் சேவிக்கலாம்.)

நரை மயிர் கருக்குந் தைலம்

தற்காலத்தில் பல கம்பெனிகளில் செய்து மயிர்களை கருக்கச் செய்யாமல் விகாரப்படுத்தி விடுகிறது நமது தைலமோ நரைத்தமயிர்களுக்குபூசின 5 நிமிஷத்தில கருமை நிரமாக்கி வருவது மன்றி மறுபடியும் முளைக்கும் நரைத்தமயிர்களெல்லாம் கருமையாகவே முளைக்கும் நமது தைலத்தை டாக்டர்களும் வியாபாரிகளும் மொத்தமாக வரவழைத்து விற்கிறார்கள் ஒரு தரம் நமது தைலத்தை உபயோகித்தபின் பிறகு தாங்களே அநேகருக்கு இதன் குணத்தை தெரியப்படுத்துவீர்களென்று நம்புகிறேன்.

புருஷ் உள்பட புட்டி 1-க்கு விலை ரூபா 1-8-0

இங்லீஷ்ரப்பர் எழுத்துகள்

இந்த ரப்பர் எழுத்துப்பெட்டிகள் ஒவ்வொருவரிடம் அவசியமாயிருக்க வேண்டியது ஏனெனில் அச்சடிக்கமுடியாத சில்லரை வேலைகள் இதனுல்முடிக்கலாம் அதுவுமில்லாமல் கார்ட்டுகளிலும் கவர் பேரிலும் கடிதங்கள் பேரிலும் அச்சடிக்கவும் இன்னும் அநேக வேலைகளுக்கும் வெகு அனுகூலமானது 1 A B C என்ற இம்மாதிரியான எழுத்துகள் ஒவ்வொரு எழுத்திலும் மும்மூன்று எழுத்தும நெம்பர் உள்பட மொத்தம் 110 எழுத்துகள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ **1-4**

2 A B C D என்று இம்மாதிரியான ஒவ்வொரு எழுத்திலும் 7 பெரிய எழுத்துகள் அடங்கிய 3-விதமான பார்டர்கள் அடங்கிய துமான பெரிய பெட்டி 1-க்கு விலை ரூபா **3.**

இமிடேஷன் டைமெண்ட் வைரமோதிரம்.

இந்த மோதிரங்கள் கன்னடியன் கோன்டினுல் செய்து இமிடேஷன் டைமன்ட் வைர கற்கள் பதித்து தற்கால நாகரீகத்திற்கேற்றபடி தயார் செய்து சீமையிலிருந்துவரவழைத்திருக்கிறோம் இதிலிருக்கும் கற்கள் சூரிய பிரகாசத்திற்கொப்பான பளபளப்பும்ஜொலிஜொலிப்பும் அசல்வைர மோதிரங்களைப்போலிருக்கும் இக்கற்களில் நிறம் எப்பொழுதும் மாறுவது கிடையாது இவை அநேக தனவந்தர்கள் முதல் உபயோகப்படுத்தி வருகிருர்கள் இவை ஒன்று அணிந்துக் கொண்டால் மிக்க மதிப்பை தரும். இதன் விலை ரூபா **1.**

எலக்டிரிக்பொன் கில்ட் மங்களூர் கைவளையல்

இதை பளபளப்பான இமிடேஷன் பொன் கில்ட் கொடுத்த பலமாதிரி பூ இலை, கொடிகள்ஒன்ருடொன்று பின்னியது போல வெகு அழகாயும் வேலைத் தரமாயும் செய்யப்பட்டு நேர்ததியாய் வந்திருக்கிறது இதை பார்ப்பவர்கள் சவரன்பொன்னினுள் செய்த கைவளையல் என்றே எண்ணுவார்கள் எப்போதும் கருக்காமலே பளபளப்பாகவே இருக்கும் இதை அணிந்துக்கொண்டால் ஸ்திரீகளுக்கு வேறே ஆபரணங்கள் கைக்கு வேண்டியதில்லை இது எல்லா மதஸ்தர்களும் போட்டுக்கொள்ளலாம் சிறியவர் பெரியவர்களுக்கு ஜதை 2 க்கு ரூபா **2.**

லினல் நம் இறைவன் வரக்கூடியதான வடதிசையிதுவல்ல, இயமன் வாழ்த்திக்கு என்பதை திக்கு எய்தல் எனவும், நீ சோலையைச் சென்றடைதல் உன் செய்கையாகின்றமையினல் அது சோலையன்று பறவைகள் உலவாததான அடவியென்பதைக் காடு அணுகேல் என்வும் நீ காற்றைக்கண்டு மேகம் எழுதலையூகிக்கும் யூகமுடைய ஆதலால் இது காற்று அன்று இதனை மாயாவாதம் என்பதை வாதமெனவும் கூறினர். இதனல் இனம் என்று எண்ணியது காக்கைகள் என்றும் மேகங்கள் என்றது அலகை விரும்பும் பொருள்களென்றும், சோலையென்று பார்த்து காடென்றம், காற்றென யூகித்து வாதமென்றும் காட்டினேன் ஆதலால் குயிலே! நீ உன்னைமயக்கிய அவைகள் என்னைமயக்காவண்ணம் அவற்றின் நிலைகலங்க அறிவுறுத்திபொழித்தருளிய அருள் மேகத்தைக்கண்டு கூவுகயென்றதாம்.

இவண் குயிலென்றது மனம் ஆதலால் அம்மனத்தை நோக்கி மனமே! நீ எனக்குத்துணையாயிருக்கின்றனை. நான் ஒரு பேரின்பத்தை விரும்பி உனக்குத் தெரிவித்தேன். அதனை நீ அளிக்க வேண்டி அவ்வின்பத்தைத் தருவோர் அறிவையர் என்று எண்ணினை அம்மங்கையார் எத்தகையோர் எனின் உயிர் நீங்கிய உடலை (பிணத்தை) உணவு எனக் கொத்தித்தின்னக்கூடிய காக்கையை யொத்தவர் அம்மங்கையர் என்னை ஒரு சமயமேயன்றிப் பலசமயத்துவாதிக்கின்றமையினல் காகத்திரள்களை யொப்பர். செல்வமும் மக்களுமோ எனின் பேய்பிடிக்கப்பட்டவன் சுய அறிவுமாறி பித்தனய் துன்பப்படக்காண்கின்ரும். அது போலும் செல்வம் என்பது பெண் பேய்மக்கள் என்பது ஆண்பேய் இவ்விரண்டு பேய்களின் வசப்படுவேனல் அறிவுகெட்டுத் துன்பம் அடைவேன் ஆதலால் செல்வமும் மக்களும் அலகைகளொக்கும். அன்றியும் செல்வமும் மக்களும் இயமன் என்னைப்பற்றி வரும்படி விடுத்த தூதாதலால் அவைகளின் கண்களுக்குப் புலப்படுவேனயின், என்னை விடாது துன்பப்படுத்தும், அவ்விரண்டும் நரகம் காணப்படும் திசைகளாம் இவைகளை யொழித்து சமயங்கள் தெய்வங்களைநோக்கி வழி படுதலால் அச்சமயங்களை நாடுவாயாயின் அவை நான் கருதிய தெய்வத்தையடையச்செய்யும் மார்க்கங்களன்று சிறுசிறு தெய்வங்களையடையச் செய்யும் மார்க்கமும், அத்தகையச்சிறுதெய்வங்களோ சில காலத்திற்குள் சிதையக்கூடியதாகும், ஆதலால் அவைகள் என்றும் அழியாததான பேரின்பம் தருவன வென்று அன்றியும் சூரபத்மன் முதலிய அசுரர்களால் கவலைபட்டுத் திவலையைப்போலும் கண்களினின்றும் நீரைச்சொரிகின்றன, அதனல் எனது பிறவி வெப்பம் ஒழிக்கும் அருட் செறிந்த சைவசமயமாகிய சோலையன்று தெய்வங்கள் கூடிக்குலாவும் இருளடைந்த புறச்சமயங்களாகிய காடாகும். ஆயினும் பல சமயங்களைக் கடந்து பிரமவிசாரஞ் செய்வோரை நோக்குதையேல் அவர்கள் பிரமத்தையே அனவரதமும் எடுத்துக் கூறுவா

ரைப்போல் பிரம்மம் பிரம்மமெனவாயால் சொல்லிக் கரணத்திலழியும்தம்மையும் கரணவிச யோகத்தாலழியும் தமது சிற்றறிவையுமே அநுபவத்தில்உரம்பெற நிலைநாட்டுவர். ஆதலால் தற்போதம்உரத்து எழுவாதமாம். இப்புறச்சமய நெறிகளெல்லாம் பறந்து ஓட ஆன்ம அறிவு செல்லும் இடமெல்லாம் கழித்து அறிவு செல்லாத இடத்தில் தோன்றும் முருகக்கடவுள் கண்ணுக்குப் புலனாகத் தோன்ற திருஞான சம்மந்தன் என்னும் திருநாமங்கொண்டு சீர்காழியில் வந்தருளினான் ஆதலினால் அக்குருபரனையே வரும்படியாகக் கூவுவாய் என்று கூறியது. அன்றியும நீ அழைப்பதற்கு இறங்கி வந்தருளினால் என்னைச் சூழ்ந்தடித்தார்க்கும் மாயாவாத மொழிந்து திருவடி பேறு எய்துவேன் என்றும் தமது திரு உள்ளத்தை வெளியிட்டவாறும் ஆகும். பத்திராதிபர்.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

சென்னை, ரக்தாக்ஷிஸு சித்திரைமீ

1924ஸு ஏப்பிரல்மீ

நமக்கு வேண்டியதென்ன.

தற்கால நிலைமையில் நமக்கு வேண்டியது முயற்சியே யன்றோ? முயற்சியிருக்குமாயின் நாம் மனத்துடன் வாழ்வாகும். இன்றேல நமக்கு மானம் என்பது உலகவழக்கில் வழங்கும் மரணமாகிய வான மேலாகிவிடும். முயற்சியென்பது உண்டாக வேண்டுமாயின் நம் நாட்டு மொழியில் நமக்குப் பூரண அறிவு வேண்டும். நமது சந்ததியார்களுக்கு நாம் செய்யவேண்டிய உபகாரம் தாய்மொழிப் புகட்டுவதே அனறியும் பர்மா இந்தியா இலங்கை தேசம் முழுவதும் தமிழ் பேசும் ஜனங்கள் சுமார் 5 கோடிகளுக்கு மேல் அதிகமிருந்தும் எழுத்து வாசனை அறியாதவர்கள் அரைவாசிக்கு அதிகமாகவே யிருக்கு மென்பதில் சந்தேகமில்லை அந்தோ! என்னபரிதாபம். நமது தாய் நாட்டில் தமிழ் என்னும் நம் சுயபாஷையை ஒவ்வொருவரும் அறியாதது என்ன விசனகரமேயாகும். மேல்நாட்டில் அன்று சாப்பாட்டுக்கு வழியில்லாவிட்டாலும் அரையணா கொடுத்து ஒரு பத்திரிகையை வாங்கி வாசித்து அதிலுள்ள விஷயங்களை கிரஹிக்காமலிருக்க மாட்டார்களென்றால் நம் பாரத நாடு க்ஷீணித்துப் போனதற்கு இதுவே காரணமாகும். இனிமேலாகிலும் நம் தாய்நாடு

க்ஷேமமடையவேண்டுமானல் ஒவ்வொரு கிராமங்களிலுள்ளவர்களும் தாய்ப்பாஷையை நன்றாய் கற்றுணரவேண்டும். இத்தகைய விஷயத்தில் ஊக்கம் அல்லது முயற்சி அவஸ்யம் அஃதின்றேல் நம்மவர்கள் நல்வழியடைதல் எங்ஙனங்கூடும்?

ஆதலினால் முயற்சியே ஒருவனை உயர்பதவிக்கு உயர்த்துவது முயற்ச்சியே ஒருவனை மேதாவியாக்குவது. இதனையே நாயனாரும்,

"முயற்சியே திருவினையாக்கும் முயற்சி இன்மை
இன்மை புகுத்தி விடும்'' என்றும்

"மடி உளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாள் உளாள் தாமரையினாள்''

என்றதில் மடி என்பது சோம்பல் என்றும் முகடி என்பது மூதேவியென்றும் கூறியிருக்கின்றார்.

முயற்சியானது கஷ்டத்திற்குத் தகுந்த பலனைக் கொடுக்குமென்னும் உண்மையே:—

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக்கூலிதரும்'' என்றும்,

"ஊழையும் முப்பக்கம் காண்பார் உலைவு இன்றி
தாழாது உஞற்றுபவர்''

என்றும் கூறியருளினாரெனின், முயற்சியென்பது முயற்சித்தார்க்குப் பலனையளிக்கக்கூடிய தென்பதைக் கூறவேண்டுவதின்றெனினும் நமது ஸ்திதிமேன்மையடைவதற்கும், நமது நாடு க்ஷேமப்படுவதற்கும், நமது நாடு பிரகாசமெய்துவதற்கும், நமது நாடு செழிப்புற்று விளங்குவதற்கும், நமது நாடு புராதனமான நிலைமையையெய்தி புண்ணிய பூமியாய்—கற்றோர் விளங்கும் கவின் நிலமாய் துறக்கநாடாய்—மோக்ஷ சாதனத்துக் குரியதாய் விளங்குவதற்கு முயற்ச்சியே பிரதானமாகும்.

முயற்சியினால் முடியாதகாரிய முண்டோ வெனின் இல்லையென்றே விடையிறுக்கப்படும். முயற்சியினாலேயே சகலகாரியங்களையும் சாதித்துக்கொள்ளலாம் அஃறிணை ஜீவராசிகளும் முயற்சிக்கின்றன வென்பதை ஆச்சாரக்கோவையில்,

"நந்தெறும்பு தூக்கணம்புள் காக்கை யென்றிவைபோல்
தம்கருமம் நல்லகடைப்பிடித்துத் தம் கருமம்
அப்பெற்றியாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றியானும் படும்'' என்றும்,

"இசையாது எனினும் இயற்றியோர் ஆற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை—இறையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கால் நலம் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாளே மற்று''

என்றும் காணப்படுகின்றமையினால் நாமும் முயற்சிப்போமாயின் நமக்கேற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்கிவிடும் என்பதில் தடையில்லை. முக்கியமாய் நாம் ஒரு உறுதியைக் கையாளவேண்டும். அதாவது: தன்கையே தனக்கு உதவி' என்பதைக் கடைப்பிடித்து இனிவரும் நமது சந்ததியார்கள் மேன்மையும் சுகமும் மானமும் பொருந்தி வாழ்வதற்கான விஷயங்களை முயற்சித்து வருவதோடு அதை நிலைபெறச் செய்யவேண்டிய முயற்சியும் புரியவேண்டும். முயற்சியினால் மேன்மையே யெய்தலாகுமென்னும் மேலோர் மொழியில் ஔவைப்பிராட்டியும் முயற்சி உடையார் இகழ்ச்சியடையார் என்று கூறினர்.

இன்னும் முயற்ச்சியானது விரும்புவதை கைகூட்டுவிக்கும் என்பதை கந்தபுராணத்திலும்.

"நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவது ஒன்றை
இடைவிடாமலே முயன்று பெற்றிடுகின்றது இயற்கை"

என்றும்,

"விடாது தனுவில்செயும் முயற்சி மென்மேல் பொருளை மிக வளர்க்கும்.
கெடாது சுற்ற நட்பினர் தம் கிளையும் தாங்கும்யாவர்க்கும்
தடாத உபகாரமும் புரியும் உடம் காமரையாளையும் சேர்க்கும்
படாத ஊழ்வந்திடுகோறும்பயனே விளைக்கும் பழியின்றும்

என்று விநாயக புராணத்திலும் காணப்படுவதினாலும், நாலடியாரிலும்:

"உலையாமுயற்சிக்காணு ஊழின்
வலிசிந்தும் வன்மையுமுண்டே—உலகு அறிய
பின்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையேபோலுங்கரி" என்பதனாலும்,

நமக்கு தற்காலம் க்ஷேமத்திற்குரித்தான முயற்சியே வேண்டும் நாம்முயற்சிப்பதானது நமது சந்ததிகளின் முன்னேற்றத்திற்குரிய தான—சகல விஷய விளக்கமும் உண்டுபண்ணக் கூடியதான தாய்மொழி யபிவிருத்திசெய்வதில் முயற்சி வேண்டும்.

நண்பர்காள்! இதை முனைந்து செய்ய முன் வருவீர்களாயின் நமது நாடு மிகுந்த க்ஷேமத்தையும் பெருமையையும் அடையும்.

ஓம்தத்ஸத்,
பத்திரிகாசிரியர்

பூதவதி அல்லது புனிதவதி

என்னும்

காரைக்காலம்மையார் புராணம்.

46 ம் பக்கத் தொடர்ச்சி.

19. கறியமுதங்குதவாதே திருவமுதுகைகூட
வெறிமலர் மேற்றிருவனையார் விடையவன் றனடியாரே
பெறலரிய விருந்தானாற் பேறிதன்மேலில்லையெனும்
அறிவினராயவரமுது செய்வதனுக்கு ஆதரிப்பார்.

(இ-ள்.) அடியார்க்கு அமுதுபடைப்பதற்காகவேண்டி சமைய லிடத்தில் கறிவகைகள் சித்தஞ் செய்யப்படாமலும் அன்னம்மட் டும் தயாராயிருத்தலையுங் கண்ட வாசனை மலரினில் வீற்றிருக்கும் லக்ஷ்மியை நிகர்த்த அம்மையார் இவிடத்தில் வெறி என்றுகூறினது வாசனையையேயாகும்: வாசனைக்கு மயக்குஞ் சக்தியிருக்கின்றமை யினால் ஆசிரியர் வெறிமலர் என்று கூறினார். திரு அனையார் என் றது லக்ஷ்மிக்கு நிகரானவள் என்றதே யொழிய வேறன்று. லக்ஷ்மி யானவள் ஊழின்பயனுக்கு தக்கவாறு செல்வத்தை நல்குவளே யொ ழிய வேறு விதமாகச் செய்ய அஸக்தியற்றவளாகின்றாள். அம்மை யாரே அங்ஙனமின்றி பசிப்பிணியென்று வருபவர்க்கும் மற்றெது வேண்டிவருபவர்க்கும் கொடுப்பவரென்பதை அம்மையார் சரித்தி ரத்தில் 15-வது செய்யுளில் ' நம்பரடியாரணைந்தால் நல்ல திருவமு தளித்தும், செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான தம்பரிவினாலவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்து,—'' என்றும் காணப்படுகின்றமையினாலே 'திரு அனையார் என்றார்) விடையவன் தன் அடியாரே என்பதற்கு நந்திவாகனனான பரமனின் அன்பரே யென்னும் பொருள் காணப் படினும் ஆசிரியர் இவ்விடத்தில் விடை யவன் என்று பிரயோகித்ததானது கவனிக்கற்பாலதாகின்றமையின் விடை அவன் விடையவன் என மருவிய தன்பொருள் என்னையெ னின், உலகத்தில் ஜீவர்கள் புரியும் புண்ணியத்திற்குத் தகுந்த பல னாகவே யவரவர்களுக்குக் காட்சியும் பதவியும் தருபவனாதலால் விடை அவன் என்றார். புண்ணியம் என்னும் வினாவுக்கு விடையா னவன் அவன் என்றார்; அவன் என்றதனாலேயே தலைவன் எனப் பொருள் காணப்படாமலில்லை. " அகரமுதலெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றேயுலகு '' என்பதனாலேயும். " அவனன்றி யோரணு வும் அசையாதெனும் '' என்னும் தாயுமான ஸ்வாமிகளின் திருவாக் காலும் அறியப்படும். " அடியாரே பெறலரிய விருந்தானால் பேறு இதன் மேலே இல்லை யெனும் அறிவினராய் '' என்றதை அம்மையா ருக்குச் சங்கமபத்தியிலுள்ள ஊற்றத்தை விளக்கினர். அவ்வூற்றத் திற்குக் காரணமான அந்தபத்தியின் மாக்ஷிமையை,

"கற்றவர் கடவுள் ஞானம் சேர்ந்தவர்க்கு அனை கண்ணில்லார்
அற்றவர் அந்தணாளர் அன்றியும் அனையநீரார்க்கு
உற்றதோர் இடுக்கண் வந்தால் உதவுதற்கு உரித்து அன்று ஆயின்
பெற்ற இல் உடம்பு தன்னால் பெறுபயன் இல்லை மன்னோ" 128 என்று
"அங்கவரைக் காணப் பெறுகிற் பிற்கங்கை நீராடற் பேறு
மங்கவர்பாற் பேசப் பெறினகில தீர்த்தமுந் தோய்ந்தோராவ
ரங்கவர்க்குச் செய் பூசை யண்டருக்கு மூவருக்குமாகுங்கண்டா
யங்கவர்க்கே தானமளிப்பரவர்தபாலேற்பர் நல்லோர் 129 என்றும்,
"தேவர் கடேவனங்கோர் சீர் கெழு மறையோன் போலாய்
மேவிய காலையம்மை விரைந்தெதிரேகிமற்றென்
காவலர் தம்பாலன்பரிலரெனக் கருதி யன்னான்
பூவடி வணங்கி வேண்டும் பூசனைபுரிந்து நின்றாள்" 130 என்றும்,
"அதிக நல்லற நிற்ப தென்றறிந்தனையறத்து
ளதிகமாஞ் சிவ புண்ணியஞ் சிவாரச்சனையவற்று
ளதிகமாஞ்சிவபூசையு ளடியவர் பூசை
யதிகமென்றறிந்தனபரையருச்சனை செப்வாய்" 131 என்றும்,
"வீட்டு நன்மை விளைநில மாமியோர்
நீட்டுதல் கரமென்று நினைத்தருண்
மாட்டுவித்தென வந்திரப் போர்கரத்
நீட்டுவான் பொருளெண்ணிலதாமரே" என்றும்,

காணப்படுகின்றமையால் அம்மையாரும் சிவனடியவராய் தம் வீடு சார்ந்த அடியவரை உபசரிக்கக் கருதியவராய் அவர் அமுது செய்தருளுமாறு அதற்குத்தக்க முயற்சியுடன் வேண்டுவன புரிந்து இலையில் சாதம் பரிமாறியதற்குடன்பெப்துண்ணுமாறு வேண்டுவன வாகிய தெதுவோ அதனையுந்தயாரித்து அவரையுபசரிக்கலாயினர்.

128 சூளாமணி, 129 காஞ்சி புராணம், 130 கந்த புராணம், 131 திருவிளையாடற் புராணம், 131 தேம்பாவணி. (தொடரும்).

வா. ஆர். கேய்க்வார்

உத்திராக்கம் பூணவேண்டிய தவசியமே.

(52 ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்நானம், தானம், ஜபம், ஹோமம், வைசுவதேவம், தேவபூஜை பிராயச்சித்தம், சிரார்த்தம், விசேஷமாக தீக்ஷகாலம், இவைகளில் ருத்திராக்ஷம் தரியாமல் ஏதேனும் வைதிககாரியம் செய்கிற எந்த மனிதனும் நரகத்திற்கு ஆளாவானென்று சாஸ்திரங்களில் காணப் படுகின்றன.

விரல், சங்குமணி, புத்திர ஜீவமணி, தாமரைமணி, ஸ்படிகமணி தர்ப்பை முடிச்சு இவைகளில் ஏதாவதொன்றினுல் வித்வானுனவர்கள் ஜபிப்பார்கள். ருத்திராக்ஷத்தினுலேயே ஒவ்வொரு நாளும் சோம்பலில்லாமல் மந்திரத்தைச் செபிக்கவேண்டும். ருத்திராட்சத்தினுலேயே ஜெபிக்கிறவர்கள் எம்பெருமானுக்குச் சமானமானவர்கள்.

விரலால் ஜெபித்தால் ஒரு குணம், விரலிரையால் ஜெபித்தால் எட்டுக்குணம், சங்குமணியால நூற்றெட்டுக்குணம்: புத்திரதீபத்தால் முன்னூறுகுணம். தாமரைமணியால் ஆயிரங்குணம், ஸ்படிகமணியால் முப்பதினுயிரங்குணம், தர்பை முடிச்சினுல் கோடி கோடி குணம், ருத்திராக்ஷத்தால் ஜெபித்தால் உண்டாகுங்குணம் இவ்வளவென்று சொல்லமுடியாது. எப்பொழுது ருத்திராக்ஷங்களினுலேயே ஜெபிக்கவேண்டும். ருத்திராட்சதாரியை ஒருவனுலும் கொல்ல முடியாது. உலகத்தில் எம்பெருமானைப் போல் சஞ்சரிப்பான். அப்படியே அவன் மனிதர்களால் எப்பொழுதும் நமஸ்காரஞ் செய்யத் தகுந்தவன்.

எச்சிலுடையவனுயிருந்தாலும், கெட்டதொழிலிருப்பவனுயிருந்தாலும் ருத்திராக்ஷ தாரணத்தால் சர்வபாவங்களிலு மிருந்து விடுவிக்கப்படுவானென்று சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

ஜெபம் தியானம் இவைகளில்லாதிருந்தாலும்ருத்திராட்சத்தைத் தரிப்பதினுல் சகலபாபங்களிலுமிருந்து விடுவிக்கப்பட்டவனுகி மேலானகதியைபடைவான். எவர்கள் கண்டத்தில் ருத்திராக்ஷத்தை தரிக்கிருர்களோ அவர்கள் வீட்டில் சுகமுண்டாகும், பாவகர்மங்களைச் செய்தவர்களாயிருந்தாலும், அவர்கள் மேலானகதியை அடைகிருர்கள். ருத்திராட்சதாரணஞ் செய்தவனுக்கு அன்னங்கொடுப்பவன் இருபத்தொரு குலத்தையுங்கடத் திருத்ரலோகத்தை யடைவான். எவனெற்றியில் விபூதி இல்லையோ, சரீரத்தில் ருத்திராட்சதாரணமில்லையோ, எவனுடைய கிரகத்தில் சிவ பூஜையில்லையோ, அந்தமனிதன மிருகஜாதியினுங் கேவலமானவனென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மாமிஷத்தைப்பட்சிக்கிறவனுயிருந்தாலும், மதுபானம் அருந்துகிறவனுயிருந்தாலும், நீசஸ்திரீயைச் சேர்கிறவனுயிருந்தாலும், ருத்திராட்சம் தலையிலிருக்குமாயின் பாவங்களிலிருந்து விடுபடுவான்.

நான்கு வேதங்களைப்படித்தாலும், புராணங்களைப்படித்தாலும் தீர்த்தயாத்திரை செய்தாலும், சகலவித்தைகளை அறிந்தாலும், உண்டாகிற சகல புண்ணியத்தையும் ருத்திராட்சம் தரித்தால் அடைகிருன். ஒருவன் மரணகாலத்தில் ருத்திராட்சத்தைத்தரிப்பிவித்துக் கொண்டு சாவானுனல் ருத்திரத்வத்தை அவன் அடைகிருன். மருஜெனனமில்லை.

ஒவ்வொரு மனிதனும் ருத்திராட்சத்தைச் சிரசில் தரித்தால் கோடிபங்கு புண்ணியம், காதுகளில் தரித்தால் பத்துக்கோடி, கண்டத்தில் கட்டப்பட்டால் நூறுகோடி, உச்சியில் ஆயிரங்கோடி, உபவிதத்தில் தரித்தால் பதினாயிரங்கோடி, புஜங்களில் லட்சங்கோடி, மணிக்கட்டில் தரித்தால் கணக்கில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ருத்திராட்சம் மோட்சத்துக்குச் சாதனமானது.

(கந்தர்) எம்பெருமானை நோக்கி பரமேசுரர் கழுதையானது எந்தகாரணத்தால் ருத்திராட்சத்தைச்சுமந்தது? கிடைங்கை எப்படி அடைந்தது? என்று கேழ்குங்கால் எம் பெருமான் சொன்னதாவது விந்திபபருவதத்தில் ருத்திராட்ச சுமையுடைய ஒரு கழுதை வழியில் ஒருவனல் நடத்தப்பட்டு, அதிக சிரமமடைந்து, அந்தப் பாரத்தை சுமக்க சக்தியற்றதாய் பூமியில் விழுந்து இறந்து போய் விட்டது. அது அச்சமயம் சூலபாணியான மஹேஸ்வர ரூபத்தையடைந்தது. என்னுடைய அனுக்ரகத்தால் என் சமீபம் அடைந்தது ஆனல் சுமக்கப்பட்ட ருத்ராட்சங்களின் முகங்களின் கணக்கெவ்வளவோ அவ்வளவாயிர வருஷகாலம் அந்தக்கழுதை சிவலோகத்தில் மேன்மையாயிருந்தது. என்று கூறினர். என்று சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

ருத்திராட்சதாரணத்தில் வெட்கமுள்ளவர்களுக்கு கோடி ஜனனமானாலும் சம்சாரத்திலிருந்து மோட்சமானது கிடையாது. ருத்திராட்சதாரியைப்பார்த்து பரிகாசஞ்செய்கிறவன் உற்பத்தியை வித்வான் கலப்பானதென்று அறியவேண்டியது. என்றும், மேலான குலத்திலுண்டானவனாயிருந்தாலும், விபூதி ருத்திராட்சம் இவைகளைத்தரித்தவனைப்பார்த்து உயர்ந்த ஆசனத்திலிருப்பானனல் பாழ் நரகத்தை அடைகிறுன் என்றும் ருத்திராடசதாரிக்குப் பக்தியுடன் வஸ்திரமாவது, வேறு எதையாவது கொடுத்தால், சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாய்ச் சிவலோகத்தை அடைகிறுன் என்றும் ஷியானின் பாதங்களை அலம்பி அந்த தீர்த்தத்தைக் குடிக்கிறவன் சகலபாவங்களிலிருந்தும் விடுபட்டவனாகி சிவலோகத்தில் மேன்மையாக இருப்பானென்றும் சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

இவ்வுலகத்தில் ருத்ராட்சதாரணத்தைக் காட்டிலும் சிரேஷ்டமானது வேறொன்று மில்லை. மந்திரமில்லாமலுண்டாகிற குணங்களே சொல்லப்பட்டன. (தொடரும்),

A. S. T. மஹாராஜ்.

திரவியபட்டணம், சரண்டை.

பார்த்திபசிவபக்தி.

(55-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே துரியோதனன் இன்னசெய்வது என்று தோன்றாமல் குன்றி திகைத்து சபையோர்களைப் பார்த்து, பஞ்சபாண்டவர்களை நாட்டை விட்டுக் காட்டுக்கு துரத்தியும் அவர்கள் அவர்களுடைய துர்க்குணங்களை விட்டாரில்லை. அவர்கள் தான் இம்முனிவனை என்னிடம் அனுப்பித்து என்னை இச்சாபத்துக்குள்ளாக்கினார்கள். ஆகையால் நான் அவர்களைக்கொல்லத்துணிந்துவிட்டேன். என்னைத் தடுக்கலாகாது என்று சொல்லி கர்ணனையும் சகுனியையும் படைத்தலைவராக நியமனம் செய்து, பாண்டவர்களை துவம்ஸம் பண்ண காமிய வனத்தை நோக்கிப் புறப்பட்டபின் வேதங்களை சிக்கு அறுத்த முனிவரை வழியில்கண்ட துரியோதனன் இரதத்தை விட்டுக்கீழே இறங்கி எதிர்கொண்டு அழைக்க, வியாச முனிவர் அவனுக்கு ஆசிகள் கூறி, பாண்டவர்களின் மேல்படை எடுத்துச் செல்கின்றான் என்பதை அறிந்து துரியோதனனைப்பார்த்து ஏ கௌரவர்களுக்கு தலைவனான துரியோதன மகாராஜனே! ஒரு மஹா ராஜாவானவன் எப்படி ஒரு பரம ஏழைமேல் படை எடுத்துச் செல்வானோ அதே மாதிரியாக நாட்டைத்துறந்து காட்டில் வாசம் செய்து கொண்டிருக்கிற, பேதைகளாகிய பாண்டவர்களின் மேல் படையெடுத்துச் செல்வது அநீதி ஒரு அரசனானவன் அதருமத்தை நீக்கி தருமத்தை காக்க வேண்டும். கொடுங்கோலை அகற்றி செங்கோலை நிலை நிறுத்த வேண்டும். பாபச்செய்கைகளை அறவே நீக்கி புண்ணியத்தை சம்பாதித்தல் வேண்டும். குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டும். ஒரு குற்றமும் செய்யாதவனை மரணதண்டனை விதிப்பது கொடுமையன்றோ, திருஷ்டாந்தமாக சிலப்பதிகாரத்தில் பாண்டிய ராஜன் நிராதிபதியான கோவிலனை வஞ்சிப்பத்தன் சொல்லைக்கேட்டு, கோவிலன், தான் நிராதிபதி என்று பல அருமையான திருஷ்டாந்தங்களால் நிரூபித்துங்கூட அவன் தான் திருடன் என்று அநியாயமாக தீர்ப்புசெய்ததாலன்றோ அவனும் அவனுடைய குடிகளும் மடிந்தது மன்றியில் நாடும் அழிவுற்றது! ஆகையினாலே பேதையர்களாகிய பாண்டவர்கள் ஒரு குற்றமும் உங்களுக்கு செய்யாமலிருக்கும் பொழுது அவர்களைக் கொல்ல படை எடுப்பது உசிதமன்று என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதைக்கேட்ட துரியோதனன் இவரிடத்திலும் கோபித்துக் கொண்டோமாயின் அயத்தீரிய முனிவருடைய சாபம் போதாதன்றி இவருடைய சாபத்திற்கு ஆளாகவேண்டும் என நினைத்து தன்னுடைய பரிவாரங்களுடன் வந்தவழி பார்த்துக்கொண்டு அஸ்தினாபுரத்தை யடைந்தான்.

பிறகு வியாசமுனிவர் காமியவனத்தை அடைந்து பாண்டவர்களைச் சந்தித்து அவர்களால் பூஜை செய்யப்பெற்று நின்றார்.

அப்படி நிற்பதைப் பார்த்து பாண்டவர்களின் மூத்தவனான தரும னந்தனர் துரியோதனன் என்னை அநியாயமாக சகுனியுடன் சூதாடச்செய்து, என்னுடைய ஆபரணங்கள், ரதகஜ துரக பதாதிகள், நாடுகள் முதலியவற்றை பிடிங்கிக்கொண்டும், எனது அன்பரான தம்பிமார்களை அடிமைகளாக வைத்தும், என்னுடைய சொந்த மனைவியாகிய துரோபதையை ஈடாகவைத்தும், அக்கொடும்பாதகனாகிய துர்சாதனன் அவளை மானபங்கம்செய்ததுமன்றியில் பன்னிரெண்டு வருஷம் வனவாசம் செய்து பிறகு ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் செய்துவைந்தால் நாடுகொடுப்பேன் என்று சொன்னதிற்கிணங்கி நாட்டை விட்டுக் காட்டிற்கு வந்தேன் என் பொருட்டு என் தம்பிமார்களும் கஷ்டப்படுகிறார்கள. என்று வருந்தி நிற்பவரைப் பார்த்த வியாச முனிவரானவர், நீங்கள் பன்னிரண்டு வருஷம் பூர்த்தியாய் வனவாசம் செய்தும், 1 வருஷம் அஞ்ஞாதவாசம்செய்து வந்தால் கூட உங்களுக்கு நாடுகொடான். போர் செய்து தன் உயிரை இழப்பான் அவனுக்குப்பக்க பலன்கள் இருக்கிறது அவனை அவன் பொறாமையினால் மமதை கொண்டிருக்கிறான் அவனை நீங்கள் சாமானியன் என்று எண்ணிவிடலாகாது உங்கள் கைபலத்தால் தான் ஆகவேண்டும், ஆகையினாலே அப்படி நீங்கள் உங்களுடைய விரோதிகளுடன் போர் செய்து ஜெயிக்க வேண்டுமானால், கைலாசகிரியில் வசிப்பவரும், பார்வதி காந்தராயும், பாற்கடலில் மந்தறை என்னும் பருவத்தை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பை கயிராகவும், தேவர்கள் ஒரு புரமும் ராட்சதர்கள் ஒரு புறமும் சிலுப்ப அதிலிருந்து கடைசியில் ஜெனித்த ஆலகால விஷத்தைக் கண்டு தேவாசுரர்கள் பிரம்மன், விஷ்ணு முதலானவர்கள் பயந்தோட அவர்களுக்கு அபயஸ்தம் கொடுத்து 'அஞ்சேல்' எனத்தேற்றி அக்கொடிய விஷத்தைத் தன்கண்டத்தில் அடக்கிக்கொண்டதினால் "திரு நீலகண்டம்" என்று பெயர் பெற்றவராயும், முக்கண்ணராயும், பகீரதன் தன் முன்னோர்களாகிய சாகரர்களை நல்லகதியடையும் பொருட்டு, வானுலகத்திலிருந்து கங்கையை கொண்டு வரும்பொருட்டு தவம் செய்து, அதிக உக்கிரத்தோடு வந்த கங்கையினுடைய கர்வத்தை அடக்கியவராயுமுள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் வசத்திலிருக்கிற பாசுபதாஸ்திரத்தைப்பெறவேண்டும் அதைப்பெற்றால் நீங்கள் துரியோதனனுடைய செறுக்கை அடக்கி நீங்களும் வெற்றிபெறலாம் அதைப் பெறத்தக்கவன் அர்ச்சுனனே அவன் ஒருவனே அதை அடையத்தக்க ஒப்பிலா மாணிக்கம். ஆகையால் அருச்சுனன் பாசுபதாஸ்திரத்தின் பொருட்டு சிவபிரானை குறித்து தபசுபுரிந்து அதை பெறட்டும் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிறகு வேதவியாசர், அர்ச்சுனனை தவக்கோலத்துடன் வரச்செய்து, ஆசீர்வதித்து மந்திரோபதேசம் செய்து வெள்ளிமலைச் சார

யில் தபசுசெய்ய உத்திரவு செய்து விட்டு, தருமராசன் முதலானவர்களுக்கு ஆசி கூறி அவ்விடத்தை விட்டேகினார். வேதவியாசர் கூறியபடி அருச்சுனன் காண்டீபம் என்னும் வில்லை எடுத்துக்கொண்டு அம்புறாத்துணியையும் எடுத்துக்கொண்டு ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில் தருமஸ்ரூபியான தருமனந்தரை வணங்கி ஆசிர்வாதம் பெற்று தனது தம்பிமார்களுக்கு ஆசி கூறி, காமியவனத்தை விட்டுப் புறப்பட்டு அநேக காடுகளையும் மலைகளையும் கடந்து வெள்ளிமலைச் சாரலை அடைந்தார்.

அவ்விடத்தில் சிலர் அக்கினிகுண்டம் வளர்த்தி அதின் நடுவில் நின்று தபசு செய்துகொண்டும், சிலர் ஒரு காலில நின்று கொண்டும், சிலர் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டும் மற்றும் சிலர் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டும் தவம்புரிவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு தானும் ஒரு நல்ல நதியில் ஸ்தானம் செய்து, நித்திய கர்மானுஷ்டானங்களை செவ்வனே செய்து பத்மாசனம் போட்டுக்கொண்டு சிவபிரானிடத்தில் தன்னுடைய கவனம் முழுவதையும் வைத்து தவம் புரியலானார். அவர் செய்த தவமானது வானுலகத்தில் வசிக்கும் தேவர்களையும், மும்மூர்த்திகளையும் தகிக்கத்தொடங்கியது தேவர்கள் தங்களுடைய அரசனாகிய ஆயிரம் அசுவமேகம்செய்த இந்திரனிடத்தில் போய்முறையிட, இநதிரன் அவர்களுக்குச் சமாதானம் கூறி அர்ச்சுனனுடைய தபோபலத்தை சோதிக்க விருப்பங்கொண்டு தன்னுடைய அரண்மனையில் நடனங்கள் புரிபவரும், பார்த்தமாத்திரத்தில் ஆடவருடைய மனதை கவரச்செய்யும் அழகு வாய்ந்தவர்களுமாகிய ரம்பை, மேனகை, ஊர்வசி திலோர்தமை முதலானவர்களை வரச்செய்து அவர்களுக்கு பின் வருமாறு கட்டளை இட்டார். "ஓ மங்கையர்க்கரசிகளே! நீங்கள் இது பரியந்தம் எத்தனையோ தபசிகளுடைய நிஷ்டைகளை பங்கம்பண்ணி யிருக்கிறீர்கள் இப்போது சந்திரகுல வம்ஸத்தில் உதித்த அருச்சுனன் வெள்ளியங்கிரியில் உக்கிரமாக கடுமையான தபசு செய்து வருகிறான். அவனுடைய தபசை நீங்கள் கெடுக்கவேண்டும்" என்று கட்டளை இட்டான். அவர்கள் உடனே பூலோகத்தில், மனதைக் கவரும்படி பிரயத்தனப்பட்டும், ஆசைமொழிகளால் அவன் அருச்சுனன் இருக்குமிடத்திற்கு வந்து, அவன் முன்னிலையில் நடனங்கள் செய்தும் அருச்சுனன் ஒன்றுக்கு மிசையாதது கண்டு வெட்கி தேவலோகம் அடைந்தனர்.

தேவேந்திரனிடத்தில் அத்தேவதாஸ்திரீகள் போய் முறையிட, தன்னுடைய உபாயங்கள் பயனடையாதது கண்டு ஒரு தபசிபோல் வேடம்பூண்டு, அர்ச்சுனனிடத்திற் சென்றார். அவரைக்கண்ட அர்ச்சுனன் தனது பக்திமுழுவதையும் சிவபிரானிடத்தில் வைத்து அவருக்கு மரியாதை செய்தான். பிறகு இந்திரன் அர்சுனனைப் பார்த்து நீ எதற்காக கடும்தவம் புரிகின்றனை என்றார். (தொடரும்),

T. S வெங்கட்டராமன், கோயம்பத்தூர்

ஆன்மாவேபுத்திரன்

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

I

மைந்தர்கள் எந்தையர்கட்கு கீழ்ப்படிந்து ஒழுகவேண்டிய மா திரியிலில்லாமல், பழமையான வழக்க ஒழுக்கங்களினின்றும் விலகி நவீன நாகரீகமெனக்கொள்ளும் ஒழுங்கீனமான மாதிரியில் பயின்று நல்லமேன்மையான குடும்பங்களை சீர்கேடுறச் செய்கின்றனரென சாதாரணமாய் எங்கு நோக்கினும் அவச்சொல் கிளம்பலாயிற்று. பெற்றோர், சுற்றத்தினர் முதலான பெரியோர்களை முனிந்து வார்த்தை யாடாமலும், பின்னொன்றும் முன்னொன்றுமாய்ப்பேசி அவமதிக்காமலும், உண்மையில் நிகழ்ந்திராதவைகளை உண்டெனக்கூறி மதிப் பற்றனவும் அவமானமுறும்படியானவுமான வீண்பழிச் சொற்களை வாய்கொண்டமட்டும் அங்குமிங்கு மெங்குங் கண்டவிடமெல்லாஞ் சொல்லி தூற்றிக்கொண்டு பேமானியாய் திரியாமலும், ஒருவரைக் களிப்புறச் செய்யுமாறு பொய்யான வசைச்சொற்களை நிஜம்போல் சொல்லியும் பின்னால் அவையின்கண் ஊமையைப்போல் விழிக்காமலும், உட்பகையாளிகள் வஞ்சனையாய் வெளிக்கு நண்பர் போல் நடித்து தம்வாய்ச்சொற்களைப் பிடுங்கக்கருதி கபடமாய்ப்பேசவருங்கால், தம்குலம் கோத்திரம் குட்டுகளையெல்லாம் பல்லையிளித்துக் கொண்டு பிறர்நகைக்கக்கூறாமலும், சற்றும் பொருமையில்லாதவர்களிடம் சண்டை செய்யாமலும், மனோதைரியமிருந்தாலும், தம்மைத் தாமே புகழ்ந்து பேசிக்கொள்ளாமலும் சாவதானமாயிருந்து, நம்பத் தகுந்தவர்களிடம் நம்பிக்கைவைத்தும், நம்பத்தகாத கொடிய வஞ்சகரை நம்பாமல் அகற்றியும், தந்தையர், பெரியோர், குரு, தெய்வத்தினிடத்தில் பயபக்தி விசுவாசமும், அடக்கமும், தமக்கு கீழ்ப்பட்டவரிடத்தில் அன்புள்ள வார்த்தையும், கேவலம் கீழ்மக்களைத் தெரிந்து சகவாசஞ்செய்யாமலும், நண்பரையும் அன்பரையும் உயிரென நேசித்தும், தத்தம் குலாச்சார மதாச்சார, தொன்றுதொட்டு வழங்கி வரும் வழக்க வொழுக்கங்களினின்றுஞ் சிறிதும் நழுவாமலும், பிறருக்கு (அங்யராஞ் சத்ருக்களுக்கு) எள்ளளவும் இடந்தராமலும் நன்மையையே கருதியொழுகும், குலதீபம் போல் விளங்கும் பிள்ளைகளன்றோ நல்லபிள்ளைகள். மேற்கூறியவைகட்கு மாறுபாடாய் நடப்பவர்கள் அணிப்பிள்ளைகளேதான் தென்னம்பிள்ளைகட் கொப்பிடுவோமென்றாலோ, அவைகள் பல விதமான உபயோகத்திற்கு உதவுகின்றனவே!

மேற்கூறியவாறே பெண்மக்களும் நடைபெற வேண்டும், குலமணிகளாம் பெண்மணிகளோ கண்மணிகட்கொப்பாவார்கள். வழக்க

வொழுக்கங்கள் மட்டு மரியாதைகள், பயபக்தி விசுவாசம், நாண்
மடம் அச்சம் பயிர்ப்பென்னுங் குணங்களைப் பெரிதும் பாராட்டுந்
தன்மை குலாச்சார மதாச்சார தர்மங்கள், கைப்பிடித்த கொழு
நனையேதெய்வமெனப் பேணுதலாகி நற்குணம்படைத்த சீலவதிகளே
குணமணிகளாவார் ! வந்தகுலம் போந்தகுலம் இவ்விருகுலங்களையும்
விளங்கவைக்கும் புனிதமணிகளாவர். யெப்படி யெனில், பெண்
மணிகள் தம் கன்னிப்பருவம் நீங்கும் வரையில் தந்தையர்களைப்
போற்றிப்பணிந்தும், யெளவன தெசையில் கொண்ட கணவனையே
தெய்வமெனக்கருதி யொழுகியும் உலகு புகழ்ந்து கொண்டாட சீருஞ்
சிறப்புமாய் இக்குலமணியைக்காட்டிலும் நன்மணியாம் மடவாலைக்
கண்டதுமில்லை கேட்டதுமில்லையென்று வாழ்த்துமாறு நடைபெற
வேண்டும். அப்படி நடைபெற்ற நாரீமணிகளுள் மகா உத்தம
குணம் பொருந்திய ரமணீவணியாம் “ சுலோசனை ” தேவியார் அன்
னவரது திவ்ய கதையையே இந்த ரஞ்சிதன் வாயிலாய் நாடக நடை
யில், வெளியிடலாயினம். ஆயினும், ரஞ்சிதன் மாதந்தவறாது ஒவ்
வொருகாட்சிக்கு குறைவுபடாமலேனும் தன் மழலையால் எங்கும்
வீசுவானேயானால், எந்தப்புண்ணிய சீலராயினும் முன்வந்து அந்த
நாடகத்தைப் புத்தகரூபமாக்கி, வெளியில் உலாவச்செய்து, ஆதிசே
ஷனுடைய நற்புதல்வியாம் சுலோசனை தேவியாரின் கற்பின் மகி
மையை பிரகிருத பெண்மணிகள் படித்துத்தெரிந்து, அந்நடையில்
பழகி யொழுகப்போதிய பேருதவியாகுமன்றோ ! தன்னை வளர்க்கும்
போஷகமணியாம் முதலியாரவர்களையும் சுலோசனையை உருவாக்கி
வெளியிட ரஞ்சிதனும் தூண்டுதல்தருமே ! “ மத்திமே மத்மே பானீ
யஞ்சமர்ப்பயாமி ” என்று எடுத்துக் கொண்ட விஷயத்திலிருந்துஞ்
சிறிது நழுவி மனங்கவலை பாய்கின்றதென்று இதனை வாசிப்போர்
நினைக்கமாட்டீர்களென்று நம்புகிறோம். ஆண்மக்களைப்பற்றி சொல்லி
வருங்கால் பெண்மக்களைப் பற்றியும் சிறிது புகல்வது நீயாயமா
மன்றோ நமது கேள்விக்குவந்ததா யொரு விஷயத்தை இனி கூறு
வாம். (தொடரும்.)

துறையூர் சுப்பராமப்பர்

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.



நம் ரஞ்சிதன் அபிவிர்த்தியை முன்னிட்டு நமது எடிட
ரான ஸ்ரீமான் வாசுதேவராவ் கேய்க்வார் அவர்கள் தர்சம
யம் சந்தாதாரர்களை சேர்க்க தென்னாட்டுபக்கம் வந்திருக்
கிறபடியால் ஒவ்வொரு சந்தா நேயர்களும் அவரை அன்பு
டன் ஆதரித்து ரஞ்சிதன் விஷயத்தில் ஊக்கமெடுத்து பல
சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்க கோருகிறேன்.

எம். சம்மந்த முதலியார், பத்திராதிபர்.

மதனசுந்தரி அல்லது மர்மக்கொலைகள்.

(61 ம் பக்கத் தொடர்ச்சி.)

அப்போதும் அவனது இருவிழிகளினின்றும் வெள்ளம்போல் பெருகிக்கொண்டேயிருக்கும் கண்ணீரானது தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் உருவத்தை இன்னாரென்று தெரிந்துக்கொள்ளமாட்டாமல் இடரச்செய்தது. அந்தகாரமும் அடிக்கடி கண்களை யிருளச்செய்தது. வானத்தில் ஒரு நட்சத்திர மேனுமில்லை. அமாவாசையாதலால் ஆதித்தன் தனதரிய நண்பனாகிய சந்திரனை வெளி வராமல் தடுத்து ஒளித்துக்கொள்ளும்படி செய்தான் ஆகாயத்தை அளாவிய வாயுபகவான் வீசும் சுகந்தரும் காற்றானது சுவாலைப்போற் றோன்றியது.

இப்படியிருந்தும் அவ்வுருவம் அதி விரைவாய் தன்னையே நோக்கி வந்துக்கொண்டிருக்கிறது. காரிருள் மதனனின் கண்களை கண்ணீரால் கலங்கச்செய்துக்கொண்டேயிருக்கிறது. புத்திதடுமாறுகிறது. மதுபானம் செய்தவன் தனதாருயிர் அறிவையிழந்து தள்ளாடி தட்டு தடுமாறிக்கொண்டுப்போவது அறிவையிழந்த ஆநந்த நடனம் செய்துகொண்டே சென்றான். அவன் புத்திசபலமடைந்தவன் போல் தோன்றினான்

அவனது மனமோ அனலிலிட்ட புழுவைப்போல் துடிக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் அவ்வுருவம் யாரோ, எவரோ, எனத் திடுக்குண்டுத் திகைத்தான். பிரகாசமென்னும் பிறனொருவன் அவ்வுருவத்தைக் கண்டறிய ஒருவித உதவியும் புரியவில்லை.

தன்மீதுள்ள கோபத்தால் தனதண்ணன் தான் அவ்விதம் அதி விரைவாய் வருகிறாரோ, என அஞ்சினான், அவர் தன்னைக்கொன்று விட்டபோதிலும், தனதருமைந்த காதலியும், ஸர்வேஸ்வரனால் சகல வித நற்குண நல்லழகமைந்தவளும், தன்னை எவ்விதத்திலும் காதலனாக நினைக்கும் சுந்தரியின் பொருட்டு தன் உயிரை ஒரு பொருட்படுத்தாமல் வெறுத்து இழக்கவும் தீர்மானித்தான். இதென்ன விசித்திரம்! மதனனின் உயிர் பிரிந்து உதவியில்லாமல் போனால் நமது சுந்தரிக்கு மேலும் அனேகவித துன்பங்கள் புதிது புதிதாக உண்டாகுமே என்று நினைத்தானா? இல்லை, அவன் தன் உயிர் பிரிந்தால், தனது காதலி தன் அன்பார்ந்த காதலன் ஆன்மா எங்குச் சென்றதோ அவ்விடத்துக்கு தானும் தன் உயிரை மாய்த்துக் கொண்டு தன்னுடன் வந்து சேர்வாளென நினைந்தான்.

என்ன! சகல உயிர்களையும் எறும்பு முதல் யானைவரை யாதரித்துக்காக்கும் தயாபரனாகிய சர்வேஸ்வரன் தன்னை யெவ்விதத்

திலும் காப்பாற்றுவார் என்று நம்பிக்கைக்கொண்டு கைகுப்பிப் பணிந்தான். நினைந்தான் ஏங்கினன். இடரினன். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி தன தேழையான கோழைநெஞ்சத்தை புண்ணாக்கிக்கொண்டான், மரு நிமிடம் தனது மனதை திடத்துடன் திருப்தி செய்துக்கொண்டான். அப்பொழுதே சற்று தூரத்தில் வந்துக்கொண்டிருந்த வுருவமும் கிட்டி நெருங்கியது. இச்சமயம் நமதஞ்சா நெஞ்சம்படைத்த வீரனுகிய நமது மதனன் எவ்வளவோ தைரியத்துடனிருந்தும் சற்று அச்சத்தால் சிறிது அஞ்சி நடுங்கினன். அவ்வுருவமும் அருகில் வந்து விட்டது. அப்போது ஆந்தை, வௌவால், என்ற இன்னும் மற்ற பறவைகள் அலறும் சத்தத்தால் இவனும் அலறும்படியாயிற்று. மறுநிமிடம் அவனே சீ, சீ, என்ன நான் கோழையா ? ஒரு காலுமில்லை யென தைரியங்கொண்டு அவ்வுருவம் யாரென அறியும் பொருட்டு எதிர் நோக்கி அதிவிரைவாய்ச்செல்லுகிறான். அதற்குள் அவ்வுருவமும் கிட்டி வந்து வாய்திறந்து பேசுவதுபோல் தோன்றியது மருநிமிடம் அவ்வுருவம் " ஆ ! நாளையா "என்றது.

அப்போதுதான் மதனன் அவ்வுருவமானது தனதரும் நண்பனுகிய சாமளவர்ண முதலியாரென்று அறிந்தான் தனக்காகவும் தனது நிலமைக்காகவும், தனதாருயிர் நண்பன் அலறுவதைக் கண்ட மதனன் தன் மனதிலுள்ள துக்கத்தை அடக்கமாட்டாமல் கண்களினின்றும் மாலை மாலையாக கண்ணீரைப்பெருக்க விட்டான். பிறகு மதனன் சாமளனை நோக்கி,

மதனன்:—சாமளா நடந்ததை கவனித்தாயா ?

சாமளன்:—ஆம், நான் தற்செயலாய் இந்த இடத்திற்கு வர நேர்ந்தது. அப்பொழுதுதான் உனது தமயன் உன்னை இன்னத் துக்காக கடிந்து கொள்ளுகிறரென்பதை மறைவிடமிருந்து அறிந்தேன்.

மதனன்:—நண்பா கடவுளின் கடாட்சத்தை யாரறிவார். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும். என்னும் படியான ஆன்றோர் வாக்கியம் பொய்யாமோ ? ஆகாது. நான் என்ன செய்வேன் அவர் செப்பியதை நினைக்கையில் எனது நெஞ்சம் அஞ்சி திடுக்கிடுகிறது எனக் கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினன்.

சாமளன்:— நண்பா, அழாதே கலங்கிக்கண்ணீர் விடுவதில் என்னபயன். செய்வதென்ன எல்லாம் விதிப்பயன். விதியைவெல்ல எவராலாகும். அப்பேர்பட்ட பெரிய ஜெமீன் குடும்பத்தை பிரிப்பதற்கு பரமனிட்ட விதிப்போதும் அழுதென்ன பயன்.

மதனன்:—சாமளா ! நான் என் செய்வேன் என் மனதைதேற்றிக்கொள்ளலாமென்ருலா என் தமயன் செப்பிய மொழிகளெல்லாம்

கூறியரம்பத்தை போன்றும் நெஞ்சை கத்தியால் வெட்டுவதைப் போன்றும் அறுக்கிறது மனமும் துடிக்கிறது.

சாமளன்:—நண்பனே என்ன செய்வது எல்லாம் வல்ல ஈச னின்செயல்களும், கடாட்சமும் அப்படிக் கிருப்பின் நாம் என் செய்வது எல்லாம் கற்றுணர்ந்த நீயே இப்படி வருத்தப்பட்டால் வே றென்ன வேண்டியிருக்கிறது.

மதனன்:— மறந்தேன், அப்பா சாமளா நான் ஒரு கொடுஞ் சபதம் போன்றும், கூறியவாளையொடுக்கும் அச்சபதத்தை உன்னால் தான் முடிக்கவேண்டுமெனவும் விரதங்கொண்டிருக்கிறேன். அதை முடிக்க நீதான் தகுந்ததோர் யுக்திசொல்லிக்கொடுக்கவேண்டும்! என அருமையுள்ள நண்பனே நீயாது சொல்லுகிறாய் ?

சாமளன்:—உன்பொருட்டெனதுயிரையும்விட அஞ்சேன் என் பதை நன்றாயுணரவும்

மதனன்:—ஆம், நாம் எங்காவது ஒருதனியிடம் போகவேண் டும். அவ்விடத்தில் தான் யோசிக்கவேண்டும்.

சாமளன்:—ஏன் நமது ஜோதி விலாசத்திற்கு செல்லுவோம் அவ்விடத்தில் எனதறையில் யோசிப்போம் வா, போகலாம் என்றான்

பிறகு இருவரும் மௌனம் சாதித்துக்கொண்டு ஜோதிவிலா சத்தை நோக்கி செல்லலாயினர். (தொடரும்.)

R. G. ராஜன், திருச்சினாப்பள்ளி.

பாணாசுரன்.

ஸ்ரீமத கண்டாகார நித்த வியாபக சச்சிதானந்த ஸ்வரூப சாட்குண்ய பரிபூரண பரமபதியாகிய சிவபெருமானால் அனுக்ரகம் பெற்ற மாபெலிச்சக்கிரவர்த்தியின் மகனாகிய ஆயிரங்கைகளையுடைய வாணாசுரன். சுப்ரதீபிகை யென்பவளை மணந்து நருமதை நதிக் கரையில் நாளொன்றுக்கு ஆயிரம் சிவலிங்க குறிகளைப்பூசித்து வரு கையில் ஒரு நாள் சிவ பெருமான் பிரசன்னராகி, “ ஏ ? வாணா உமக்கு என்ன வரம் வேண்டும் ” என்று கூற, வாணன், மகிழ்ச்சி யுடையவனாய், “ எம் பெருமானே ? அடியேனுக்கு அக்கினி மதிலும் அவனிமுழுவதும் அரசு புரியும் ஆற்றலும், அழியாமையும், தேவரீ ரது அடித்தாமரையில் அன்பும என்னாளுமிருக்க அவாவினேன். என கைலைப்பெருமான் அவ்வாறேயளித்து அந்தர்த்தானமாயினர். பின்னர் வாணாசுரன் வையகமுழுதுங் கைபகப்படுத்தி, ” சோணித புரியில் ” அரசுபுரிந்து வருகையில், ஒரு நாள் “ கண்ணுதலைத் ” தரி சிக்கக் கயிலாயமடைந்தனன் அதி சமயம் அருள் வள்ளல் நடிக்குந்

தகுதியாயிருத்தலின், தனது ஆயிரங்கைகளாலும் குடமுழவு வாசிக்கக், மாதுபங்கன் மகிழ்ந்து, "யாதுவரம் வேண்டும் ஓதுக" என, அசுரன் அண்ணலே அடியேன் திருக்கயிலாயகிரியில் வந்து திருநந்திதேவரால் பிரம்படிபட்டுச் சலியாமல், கஜமுக ஷண்முகபார்வதி சமேதராய்த் தேவரீர் எப்பொழுதும் அடியேன் மாளிகையிற் காட்சி கொடுத்து வீற்றிருக்கவேண்டுமென்று விண்ணப்பிக்க, நம்பெருமான் "அவ்வாறேயாகுக" வென்று சோணிதபுரமுற்று வாணன் மாளிகையில் வாழ்ந்திருந்தனர்.

இங்ஙனம் நிற்க, ஓர் நாள் வாணன், இந்திரன் முதலிய எண்டிசைத்திறைவர், திசைமுகன், திருமால் முதலிய தேவர் கூட்டத்துடன் எதிர்த்து உயுத்தம் செய்ய, தேவர்கள் முடியாமல் ஓடிப்போனமையால் மமதை மிக்கவராய் மகாதேவனை நண்ணி, அண்ணலே? அடியேனுடன் அமர் செய்வோர் அகிலத்தில்லாமையால் தோள்கள் தினவுற்றன. சிறிது செருச்செய்ய திருவுள்ளங்கொள்ள வேண்டும் என சிவபிரான் புன்னகைகொண்டு, சிறிது மஞ்சாமல் இவ்வாறு கூறியதை யெண்ணி, "கண்ணன் துவாரகையிலிருந்து வந்து உன் தோள் தினவு தீர்த்து அவற்றை விரைவிற் சங்கரிப்பான் என, வாணன் "இருபது தரம் எதிர்த்தோடிய இக்கிருஷ்ணனு என்னைச் செயிக்க வல்லவன்?" என, உலகநாதன், "உனக்குத் தோற்றபின் உபமந்யு முனிவனிடம் தீட்சை பெற்று இடைவிடாது எம்மை யருச்சித்து உன்னைவிட மேலாகிய உரைத்தற்கரிய வலிபெற்றுள்ளான்." என "அச்சமர் எப்பொழுது வரும்" என "உன் மகள் மேல் பழிவரும்; உன்மயூரத்துவஜம் துணியும்; அதுவே போரெய்துங்காலம்" என்றறைய வாணன் அச்சமரை யெதிர் பார்த்தவனாய் தன்மாளிகை சேர்ந்து வசித்திருந்தான்.

நிற்க, ஒரு நாள் வாணன் மகள் உஷை யென்பவள் துயிலுகையில் கண்ணன் பௌத்திரனாகிய அநிருத்தன் கலந்ததாகக் கனவு கண்டு கண்விழித்து காணாமல் மோகாக்கிற சித்தமுடையவளாய், சித்திரரேகை யென்னும் தோழி எழுதிக்காட்டிய சித்திரபடங்களால் அம்மன்னவனை குறிப்பித்து அத்தோழியால் துவாரகையில் சயனித்திருந்த அநிருத்தனை மஞ்சத்துடன் வருவித்து நெஞ்சங்களித்து இன்பம் நுகர்ந்திருந்தாள். உஷை சிறிது நாளிற் கருப்பங்கொண்டனள். தோழியரால் அதையுணர்ந்த வாணன் அநிருத்தனைச்சிறையிட்டான். அதற்காக உஷை மனம் வருந்தினள். வாணன் மாளிகையிலுள்ள மயூரத்துவஜம் அன்று ஒடிந்தது. அவற்றை யெல்லாம் அறிந்த நாரதமுனிவர் துவாரகை சென்று கண்ணனுடன் கூறினர். மனவருத்த முற்ற கண்ணன் எண்ணில்லாத சேனையை இமைப்பொழுதிற்கூட்டிக்கொண்டு போர்க்கோலமாய்ச் சோணிதபுரத்தையடைந்தனன்.

பிறகு வாயிலில் முதற்பெருங் காவலாயுள்ள ஐங்கரக்கடவுள், முருகக்கடவுள் உமாதேவியார் முதலியோரைப் பூசித்து பணிந்து உட்செல்லுகையில் சிவபெருமான் முன்னொருகாலத்தில் மைநாகபருவதத்தில் தவஞ் செய்துக் கொண்டிருந்த திருமாலுக்கு "யானே எதிர்த்தாலும் நீ ஜெயிக்கக்கடவாய்" என்று அளித்த வரத்தைப் பாதுகாக்கும்படி தனது பிநாகமாகிய வில்லை ஏந்தி நிற்கக்கண்டு சிவ நாமங்களைப்பாடி "எளியேனைக் காத்தருளவேண்டும்" என்று வணங்க, நிமலர், ஏ? கண்ணா நீயெம்மை வென்றன்றோ வாணனை யெதிர்க்காலம் என்று விநோதமாகக்கூறினர். உடனே கண்ணன், அச்சமுற்று இறைவனைப் பலவகையாகத் தோத்திரஞ் செய்து பணிந்து நின்றனன். அதுகண்ட பரமன் பன்னகசயனனைப் பார்த்து ஏ? விண்டுவே? எம்மைக்கண்டு நீ அஞ்சவேண்டாம், உனது வருகையை வாணனுக்கு முன்னரே உரைத்துளோம் அவனைச்செயித்து வெற்றிமாலை அணியக்கடவாய். நீ எம்மோடெதிர்த்தால் முருகன் விளையாட்டுப்போல நினைப்போம். தேவர்கள் வேடிக்கை பார்க்கும் படியாயிருவருஞ் சிறிதுநேரம் செருச்செய்வோம். பகைமையாக யுத்தஞ்செய்யோம்: அஞ்சவேண்டாம்" என்று பலவகையாகத் தேற்றி கண்ணுதல் தன் கையிலேந்திய பிநாகம் என்னும் வில்லை வளைத்து நாணேற்ற, நாரணன் "நாதனே! அடியேனைக்காக்க" வென்று தனது சாரங்கம் என்னும் வில்லை நாணேற்றினன்.

இங்ஙனம் இருவருஞ்செய்த நாணொலி திரிலோகத்திலிருந்த தேவர் மானவர் நாகர்களைச் செவிடுபடுத்தியது. உலகம் நடுங்கியது பின்னர் இருவரும் அஸ்திரசஸ்திரங்களால் எண்ணில்லாகாலம் கடும்போர்செய்கையில் கண்ணன் கண்ணுதலைப்பணிந்து "அண்ணலே? நான் அமர்புரிய இனி ஆற்றகில்லேன்" என்றடிபணிய, அடியார்க்கனுகூலராகிய அம்பிகாபதி அச்சமரில் அச்சுதனுக்குச் செயமளித்து அஞ்சினர் போல அப்பாற்பட்டனர். நிற்க, அங்ஙனம் அண்ணல் கண்ணனுடன் அமரில் அஞ்சினர் போல அகன்றது அதிசயமன்று, "விஷவ்ருக்ஷோபி ஸம்வ்ருத்ய ஸ்வயம் தேசத்தும சாம்பிரதம்" என்னும் சாஸ்திரவிதிப்படியே நச்சுமரமாயிருப்பினும் தன்கையால் வளர்த்துத்தானே சங்கரித்தல் தகாதெனக்கருதி, "வாணனுக்கு தோள்தினவு தீரவேண்டும் என்றும், மைநாககிரியில் தவஞ்செய்த திருமாலுக்கும் அருளிய வரத்தை நிறைவேற்ற லீலாமாத்திரையாய் அடியவர் பக்திக்ககமகிழும் அருள்வள்ளலாதலின், அச்சுதன் ஜெயமுறநடித்துக்காட்டிய தன்றி உள்ளபடியே ஓடியதன்று. அவ்வாறு நடிக்காவிடில் விண்டு தன்னை நோக்கித் தவம் செய்தபொழுது மகுடாபிஷேகம் செய்துவித்தானைத் யெதிர்ப்பினுஞ் செயிக்கும்படி அளித்தவரம் அவலமாகும், அன்றியும் சிவப்பிரசாதமாகிய தனது வல்லமையைத் தற்செயலாகக் கருதி இருமாந்தவாணன் கண்ணனை

யெதிர்க்கநேராது: அதனால் அவன் தோள்கள் சங்கரிக்கப் படா தென்றே அப்பார் பட்டனர்.

பின்னர், திருமால் சிவபெருமானது கருணையை வியந்து நிற் கையில், வாணன் கடுங்கோபங்கொண்டு ஆரவாரித்து ஆயுதங்களைத் தாங்கிய அநேகமாகிய அவுணர்சேனையுடன் அமர் கோலங்கொண் டெதிர்க்க இருதிறத்தவருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இச்சம ரில் கிருஷ்ணமூர்த்திக்குச் சிவானுக்கிரகமேலிட்டு வலிமிகுந்திருந்த லின் வாணன் புயங்களை ஒவ்வொன்ருகக் கண்டிக்கையில், நம்பெரு மான், "நம்மையாசித்த இருகரங்களிருக்க" என, யாதவ சிரேஷ் டன், தானுவால் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் ஏனைய கரங்களை யிமைப்பிற் சங்கரித்தனன். பிறகு மாதுபாகன், வாணனை நோக்கி ஏ? வாணு? உன் தோளிலிருந்த தினவு நீங்கியதா ?" என்று வினவ, வாணன்" கைலைபெருமானே அடியேன் அறியாமையால் அறைந்ததைப் பொறுத்தருளவேண்டும்" என வேண்டினன். உடனே அந்திவண்ணன் ஏ? வாணு உன்னை மன்னித்து இரக்ஷித்தோம் இப் பொழுது கண்ணனுடன் சமாதானம்பெற்று உன் மகளை அநிருத்த னுக்கு விவாகம் செய்வித்து துவாரகைக்கு அனுப்புக" என்று கட் டளையிட அவ்வாறே தன் மகள் உஷையை அநிருத்தனுக்கு மணம் புணர்த்திக் கண்ணபிரானோடு துவாரகாபுரிக்கு அனுப்பிவிட்டு, சிவப் பிரசாதத்தாற் பழையபடி ஆயிரம் கைகளும் அமையப்பெற்றுத் திருக்கைலாயகிரியிற், பார்வதி கொழுநனுக்குக்குடமுழாவாத்தியம் வாசிக்கும் பாக்கியம் பெற்றிருந்தனன் என்று சிவபுராணங்கள், விதந்தோதியதனால் இங்ஙனம் விரிவஞ்சி விடுத்தலன். சுபம்!

தி. பட்டுசாமி ஓதுவார்,
சந்நதி வீதி, திருவண்ணாமலை.

சங்குபாலகன்.

(69ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம்-2.

பிறப்பு.

ஒங்கமே மந்திரிகள் ஓடி வந்து வாளைப்பிடித்துக் கொண்டு "அரசே! ஊழ்வினைப்பயனிருந்தால் போமோ? தாங்கள் இதற்கா கப் பெண்கொலை புரியப் போகின்றீர்களே! இது நன்றன்று." எனக் கெஞ்சி தடுத்து விட்டனர். இச்சமயத்தில அவனுடைய மூத்த மனைவியர்கள், "நாயகா! இவளை மொட்டையடிப்பித்துக் கந்தத்துணி களைக் கட்டக்கொடுத்து வாசல் கூட்டும் பணிப்பெண்ணாக வெளியில் வைத்துக்கஞ்சியை வார்த்து அதைப்பருகும்படி செய்யவேண்டும்

அதுவே அவளுக்குச்சரியான தண்டனை " என்று கூறினர். இவ்வரசன் எப்பொழுதும் மூடத்தன்மை யுடையவனுதலாலும், ஒரு காரியத்தை முற்ற ஆராயாது செய்பவனுதலாலும், மெத்தமுனிவுடனிருந்ததனுலும் இதை ஊன்றி உன்னிப்பாராமல் அச்சண்டாளிகள் கூறியவிதமே செய்யும்படி கட்டளையிட்டனன். மந்திரிகள் யாது கூறித்தடுத்தும் பயன்படாமற் போயிற்று கடைசியில் அவ்வாறே பணிப்பெண்ணுகி விட்டாள். வேடன் மகள். ஆயினும் அவள் எப்பொழுதும் இறைவனைத் தொழுதுங்கொண்டே நாளைப்போக்கி வந்தாள்.

இவள் இப்பரிதாபகரமான நிலையில் இருக்க இவள் பெற்ற இளங்குழந்தை எவ்வாராயிற்றென்று பார்ப்போம்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் 3.

மூத்த தாயார்களின் சூழ்ச்சியிலிருந்து தப்புதல்

எலிவளையிலகப்பட்ட குழந்தை பாலில்லாமல் கத்திக்கொண்டிருந்தது. அவ்வேளையில் அவ்வளையில் வாழ்ந்துவந்த பெருச்சாளி இக்குழந்தையைக் கண்டு அதனருகிற்சென்று கடவுள் செயலால் அதை ஒன்றும் செய்யாமலிருந்தது. இச்சமயத்தில் குழந்தை எலியின் முலைகளிற் பாலைப்பருகவாரம்பித்தது. அவனையன்றி அணுவும் அசையாதன்றோ? இறைவன் அருளால் குழந்தை எலியின் பாலையுண்டே அதனுல் வளர்ந்து வந்ததெனில் மிகையாகுமா?

இவ்விதம் குழந்தை வளர்ந்துவர, ஒரு நாள் அரசன் மனைவியர்கள் நீராடிவிட்டு அரண்மனை மேல் மாடியில் நின்றுக்கொண்டு மயிர் உலர்த்திக்கொண்டிருந்தனர். அப்பொழுது தாங்கள் வீசிவிட்டு வந்த குழந்தையின் நினைவுவந்து அதை எலிகொன்றிருக்கும் எனப் பேசிக்கொண்டிருக்க, பிள்ளையார் கோவிலுக்கருகில் பெருச்சாளியுடன் குழந்தை ஊர்ந்து வந்ததைக்கண்டனர்.

“ஆ! இதென்ன கொடுமை! நாம் எலிகொன்றிருக்கும் என்று நினைத்த குழந்தை இப்பொழுது ஊர்ந்து விளையாடிக்கொண்டிருக்கிறது! இதற்கென்னசெய்வோம்.'' என எண்ணிக்கொண்டுப் பிறகு குழந்தையைக்கொல்ல வேறு உபாயம் நினைத்தார்கள். அதாவது அவர்களெல்லாரும் தலை நோவுகிறதெனப் படுத்துக் கொள்வதாயும் அரசன் வந்து கேட்டால் இத்தலைநோய்க்குப் பிள்ளையார் கோவிலுள்ள பெருச்சாளியின் இரத்தத்தைப் பொட்டிட்டால் தீருமென்று சொல்வதாயும், அப்பொழுது எலியைக் கொன்றபிறகு பிள்ளைக்கு பாதுகாப்பில்லாமல் அதுவும் இறந்து விடுமென்றும் எண்ணங் கொண்டனர்.

பின்னர் அவ்விதமே " மாயைத்தலைவலி வாயை வாயைத்திறக்கிறது '' என்பதுபோல் தலைநோவுகிறதெனப் போய்ப் படுத்துக் கொண்டனர். அரசன் வந்து கேட்டதற்குப் பிள்ளையார் கோவில் பெருச்சாளியைக்கொன்று அதன் இரத்தத்தைப் பொட்டிட்டால் தீருமென்றனர். அரசன் தன் மூடத்தனம் விளங்கும்படி உடனே தன் மந்திரியிடம் சங்கதியைக் கூறிப் பெருச்சாளி இரத்தம் கொண்டு வருவிப்பாய் எனக்கட்டளையிட்டான். அவனும் ஆட்களை விட்டு அப்பெருச்சாளியைக் கொன்று இரத்தம் கொண்டுவரும்படி ஏவினன். அவர்கள் பிள்ளையார் கோவிலைநோக்கி அங்குச்செல்லலாயினர். இச்சங்கதியை எலி ஏதோ ஒருவிதமாக அறிந்துக் கொண்டு அக்குழந்தையைக் கோவிலுக்குள்ளிருக்கும் சுவாமிக்குப் பின்புறத்தில் ஒளித்து விட்டது. அப்பொழுது எலிபிடிக்க வந்தவர்கள் இப்பெருச்சாளியைக்கண்டு அதைக் கொன்று அதன் இரத்தத்தைக் கொண்டு கொடுத்தனர். அதைப்போட்டவுடன் அரசன் மனைவியர்கள் தலைநோய் நின்றுவிட்டதென மகிழ்ந்திருந்தனர்.

இக்கள்ளிகள் இவ்விதமிருக்கப் பிள்ளையார் கோவில் விடப்பட்ட நம் குழந்தை பசியால் வாடி அழுதான். அது கண்ட விநாயகக்கடவுள் அவ்வழியே விதைவிதைப்பதற்காகக் கழனிக்குச் சென்றுக்கொண்டிருந்த உழவன் ஒருவனுக்கு வயிற்று நோயுண்டாக்கினர். நெடுநாளாக மழையில்லாது அன்றுதான் ஒருமழைபெய்திருந்ததால் அன்றே விதையை எப்படியும் ஈரம் காய்வதற்குள் விதைக்க வேண்டுமென்று வந்ததனாலும், வயிற்றுநோயதிகரிப்பதால் பொறுக்கமுடியாததாலும் அவ்வுழவன் " விநாயகக்கடவுளே ! இப்பொழுது என் வயிற்று நோயைத்தீர்த்து விடுவீரானல் இன்று உமக்குப் பொங்கலிட்டுப் பலவித பழவர்க்கங்களுடன் படைக்கின்றேன் '' என வேண்டினன். உடனே வலி தணிந்தது. மிக்க மகிழ்ச்சியுண்டானது உழவனுக்கு உடனே விதையைக் கொண்டுபோய்ச் சுருக்கில் தெளித்துவிட்டு வீட்டுக்குவந்து சுவாமிக்குப் படையலுக்குரிய எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு விநாயகருக்குப் பொங்கல் முதலியதுடன் படைத்தான். அந்நாளையில் (இப்பொழுதுங்கூட சிலர் இவ்விதம் செய்கின்றனர்) சிலர் சுவாமிக்குப் படைத்தவுடன் சிறிது நேரம் கோவில் கதவை மூடிவிட்டு வெளியில்வந்து விடுவது வழக்கமாதலால் அவ்விதமே இவனும் செய்து விட்டு வெளியில் வந்து நின்றுன், அப்பொழுது நம் குழந்தை பசியுடனிருந்ததால் அங்கு படையலிலிருந்தவற்றை உண்டு பசியாறியது. பின்பு உழவன் உள்ளே சென்று பார்த்தபொழுது படையலிலிருந்தவற்றைக் காணுதிருப்பதைக்கண்டு வியப்புற்று; ஒரு நாளும் அக்கோவிலில் இவ்விதம் நடப்பதில்லையாதலால், உடனே அரசனிடம் தெறிவிப்பதற்காக ஓடினன். அப்பொழுது அரசன் மனைவியர்களாகிய மூத்தாளனைவரும் இவன் வருவதைக் கண்டு என்னசங்கதியென வினவினர்.

அவன் நடந்தவற்றை யெல்லாம் ஒன்றுவிடாமல் கூறி அங்கு ஒரு குழந்தையின் அழுகைக்குரலும் கேட்டதாகக் கூறினன். தொடரும்.

அ. ச. அருணாசலேச்வரர்.

சன்னிகிருப் சிங்காரவத்தை ரூவான்வெல்ல, இலங்கை.

ஸ்திரிகளுக்கானபகுதி

"இல்லறதர்மம்"

உலகத்தில் மானிடராகப்பிறந்தோர் செய்யவேண்டிய முக்கிய அறங்களுள் இல்லறம் துரவறம் இவ்விரண்டே முக்கியமானது. இல்லறமென்பது:—

விழுப்பஞ்சான்ற வியத்தகு மில்லறம்
ஒழுக்க வியலறிவுறுத்துஞ் சாலையாய்
நன்மை தழைத்து ஞூபக்கொடை கிழற்றி
மென்மையரும்பி மேன்மை மலர்ந்தென
அன்பு காய்த்து நல்லருள் கனிந்தலகிலா
இன்பநறைபிலிற்று மினியகற்பகமாய்
இலகிடுமுண்மை மலையிலக்கன்றே!
எத்துறுந் தகைய வில்லற மெனுமிம்
மாத்தடந்தேரினை வாழ்க்கையாம் போர்க்களஞ்
செலுத்து புதுன்பத்தீயரை யெறிந்து
தொலைத்திடலறியார் துறவு துறவென
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து
மயக்கினும் மாழ்கலீர்! மாந்தர்காள்!
உயக்கமின்றில்லற வொழுகலாறடைமினோ.

என்றவாறு மஹாமேன்மை தங்கிய இவ்வில்லற தர்மத்தைக் கைவிடாது ஒழுகி அந்திய காலத்தில் இரண்டாவதான துறவறத்தைக் கைகொளல் வேண்டும்.

இல்லாளோடு மனமொத்து நடத்தும் கிரஹஸ்தாசிரமதர்மமே இல்லறமெனப்படும். இவ்வில்லறதாமத்தில் முக்கியமானவள் இல்லாளே இவ்வில்லாள்:—

"கொண்ட தலைவனுக் கெண்டரும் போற்றி
நாடியொழுகியும் வாடிய போழ்தத்
துளங்குளிர் வசனங்களங்க மின்னுரைத்தும்
இன்னிசைபாடி மன்னியருகிருங்

N-B சூரிய நாராயண சாஸ்திரிகள் " தனிப்பாசுரத்தொகை.

தூக்கமுயர்த்தியுமுற சுவையுணவிடூஉ
ஆக்கமுறுத்து மவன் சொற்கேட்டுத்
தான்மகிழ்வுறா உந்தேன் மொழியாட்டியாய்
இல்லறக்கலனை யியக்குமீகானுய்
இல்லிற்பதித்த முல்லை யங்கொடியாய்த்
துன்பவிருள் போக்கி யின்பவொளிசெய்யும்
நந்தா விளக்காய் சிந்தாமணியாய்
இறைவனளித்த வின்னுயிர்த்தலைவியாய்
இலகுருமனைவியே யிம்மையிவ்
வுலகினைத் துறக்கமாவுறச்செயுந்துணை யென

என்றவாறு பத்தாவுக்கேற்ற பத்தினியாய் புருஷன் காலாலிடும் வேலையைத் தலையாலே செய்து அப்புருஷனுக்கு உண்டி முதலிய உபகாரங்களுள் ஒன்றுங் குறைவில்லாமல் நடத்தி அவருக்குக் கீழ்ப் படிந்து இருக்கவேண்டும். இதை யொட்டியே:—

"தாசிபோல் பணியில் புத்தி தன்னிலே யமைச்சுபோலும், தேனிற்றிருவிழுட்டுஞ் சினேகத்திலன்னைபோலும், மாசிலாப் பொறைக்கும்பூமாதென்னவு மருவு நாளில், வேசிபோல் குணமிலாது மிகுந்த கற்பினுக்கு நன்றே" என்று முதியோர் புகன்றனர்.

ஒவ்வொரு பெண்டிரும்' யானைகட்டிவாழும் அப்பன் வீட்டை பார்க்கிலும் பூனைகட்டிவாழும் புருஷன் வீடேமேல்' என்ற பழ மொழியை மனதில் பதித்தொழுகவேண்டும்.

மங்கைபரை பாலியத்தில் வளமொடு பிதாவே கார்ப்பான், பொங்கிய யௌவனத்திற் பொருந்துபர்த்தாவே காப்பான், தங்கிய மூப்பிலே தன்றனையனே காப்பானன்றிச்சங்கையாலெக்காலம் சுதந் தரமில்லைதானே" ஸ்திரீகள் விவாஹமாகும் வறையில் தன்தகப்ப னுக்கும் விவாஹமானபிறகு கணவனுக்கும் வயதானகாலத்தில் புத் திரனுக்கும் அடங்கினவர்கள். ஆதலால் அவர்களுக்கு ஒரு போ தும் சுதந்தரமென்பதே இல்லை.

'எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பதுபோல் சகல பாக்கியங்களினும் ஸ்திரீகளுக்கு கற்பே பிரதானம். கற்பே விசே ஷித்த ஆபரணம்.

'சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர் நிறை காக்குங் காப்பே தலை'

என்றவாறு, ஸ்திரீகள் கற்பில் தங்களை காத்துக்கொள்ளுதலே மேலானதாகும்' மனக்காவலோ மன்னவன் காவலோ' என்பதற் கிணங்க பரிசுத்தமான மனத்தால் தன்கற்பு நிலைதவறுமல் தன்னை காத்துக்கொள்ளும் வைராக்கியமுடையவர்களா யிருக்கவேண்டும்

கற்பென்பது யாது? என்றுல்:—

"கற்பென்பது கலேகல்லாமையன்று; மற்
றிற் படிகடவா திருத்தலு மன்று;
தீயவழியினிற் செல்வழிக்கணவனே
யேயேயிஃதென யென்னுதிருந்து
வாயிலாப் பூச்சியாய் மண்ணுதலன்று
மாடுபோலுழைத்துக் கூடிவாழ்ந்து
காலந் தன்னைக் கழித்தலு மன்று;
கனலிசான்ருயக் கலந்த தலைவன்
மனையற மாகூழியை மாண்புற வகுத்துக்
கற்பித்தலானது கற்பாம்; காதலன்
சொற்கடவா தவற்றாநெறிறிறீஇக்
கனவிலும்வேறு காளையர்தம்மை
நினையாதிருக்கும் நேர்மையே
யென்று கூறுமான்ற வான்றோரே'
"கற்பெனபடுவது சொற்றிறம் பாமை"

கற்பென்பது, கணவனே தெய்வமாகவும், அவர் சொல்லே வேதவாக்காகவும் கொண்டு அக்கணவன் சொல்தவருமல் நடத்தலே யாம்.

(தொடரும்.)

சங்கரப்ப-ஸ்ரீனிவாஸ், ஒடையனூர்.

N-B. சூரிய நாருயண சாஸ்திரிகள்' தனிப்பாசுரத்தொகை.

சிறுவர்க்கான
பக்கங்கள்.

ஓர் தினம், ஔவையார் என்னும் பாட்டி, தன் வீட்டிற்குப் பின்புறமிருந்த ஒரு தென்னந் தோப்புக்குச் சென்றூர். அப்போது அவருடைய அண்டை வீட்டுக்காரன் மகன் குழந்தை வேலுவும் கூடவே போனுன்,

தோப்பில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது அப்போது குழந்தை வேலு பாட்டியைப் பார்த்து, "பாட்டி! எனக்கு ஒரு நல்ல கதை சொல்லுங்கள், '' என்று கேட்டான். பாட்டியும் குழந்தைக்குத் திருப்தியாக ஒரு இனிமையான கதை கூறினர்

அவர் கதை சொல்லிக்கொண்டிருக்கும்போது, தோப்புக்குடையோனும் ஆண்டு வந்தனன். அவனும், அவர் கூறிய கதையைக் கேட்டுக் களிகொண்டான். கதை கேட்டு முடிந்ததோ இல்லையோ உடனே அவன் அருகில் இருந்த ஒரு மரத்தின் மேல் ஏறி, நல்லவை ஆக, இரண்டு மூன்று இளநீர்கள் தள்ளினன். பிறகு கீழிழிந்ததும் அவைகளைச்சீவி, ஒன்று ஔவைபாருக்கும், ஒன்று குழந்தை வேலுவுக்கும் கொடுத்தான்.

இவைகளைப்பார்த்துக் கொண்டிருந்த பையன், உடனே ஆச்சர்யம் உற்று, "பாட்டி! இந்தகாய்க்குள் எப்படித் தண்ணீர் எய்திற்று? யார், இதை, இதில் வார்த்து வைத்தார்? எதன் வழியாய் ஊற்றினர்?" என வினவினன். அக்காலை ஔவையார், குழந்தாய்! வெயில் வேகம் அதிகம் ஆய் இருக்கிறது! உனக்குத் தாகம் அதிகமாயிருக்கும். இவ் விளநீரை முதலில் பருகு. பின்னர் நீ கேட்ட கேள்விகட்கும் பதில் பகர்கின்றேன்," என்று உரைத்தனர்

பையனும் பருகி, "பாட்டீ! இவ்விளநீர் தித்திப்பாய் இருக்கிறது, இவ்வளவு உருசியான நீரை எவர், எதற்காக வார்த்தார்? தயவு செய்து, சீக்கிரம் சொல்லுங்கள!" என்றனன்.

அச்சமயம் ஔவையார், மட்டையோடும் இருந்த மற்றுமொரு காயைச்சேயின் கையில் ஈந்து, "இதில் கூட நீர் உளது. ஆட்டிப் பார்த்தால் தெரியும். இந்த நீர் எவ்வாறு ஊற்றப் பட்டிருக்கும்? கண்டு பிடி!" என்றனர். குழந்தை வேலுவினால் கூடாது இருந்ததைக் கண்ட கிழவியார் "பையனே! இதில் உள்ள நீர் ஒருவராலும் ஊற்றப்படவில்லை. இம்மரம் இந்நீரைத் தானுகவே வரவழைத்துக் கொண்டது. 'எப்படி? என்றால், கூறுகிறேன் கேள். இம்மரம் வளர்வதற்காகத் தண்ணீர் வார்த்திருப்பார்கள் அல்லவா? அப்படி ஊற்றப்பட்ட தண்ணீர் சுத்தமானதாகவாவது, அல்லது, சுத்தம் இல்லாததாகவாவது இருந்திருக்கும். இது எல்லாமரங்களைக் காட்டிலும் மேலானது. ஆகையினால், இது கங்காஜலத்திற்கும், கழிவுபட்ட நீருக்கும் வித்யாசம் கவனிப்பது இல்லை இது கங்காஜலம் ஊற்றினாலும் களிப்புறும். கழிவுபட்ட நீரை வார்ப்பினும் களிப்புறும்.

இவ்வளவு நற்குணங்களுக்கு இருப்பிடமான இம்மரம் தன் பாதத்தில் தண்ணீர் வார்க்கப்பட்ட விஷயத்தை மறந்து விடுவது இல்லை. மறக்காமல், காலில் ஊற்றப்பட்ட தண்ணீரைத்தலைக்குக் கொணர்ந்து, அதை இனிப்பானதாக மாற்றி, நமக்கு நல்கின்றது," என்று சொன்னர்.

இதனைக்கேட்ட குழவி, ஆமாம்! பாட்டி! தளராது வளர்ந்துவிரும் இத்தெங்கு, நல்ல தெங்கு, இது ஒருவர் தனக்குச் செய்த

உபகாரத்தை மறப்பதே இல்லை. கூடிய சீக்கிரத்தில், வட்டியும் முதலுமாய்த் திருப்பிக் கொடுத்து விடுகிறது, என்று நவின்றது.

தெய்வம்போல் விளங்கிய குழந்தை குழந்தைவேலு, கூறியதைக். கேட்டதும், சூரிய உதயம் மான, ஔவையார் உள்ளத்தில், ஒரு விஷயம் விளங்கிற்று. உடனே அவர் குழந்தைவேலுவைக் குறித்து. "குழந்தாய்! நீ சொல்லியபடி இத் தளரா வளர் தெங்கு நல்ல தெங்கே: ஏனெனில், இது தான் தாள் ஆல் உண்ட நீரை, இனியதாக மாற்றித் தலையாலே தருகின்றது. இத்தென்னைக்கு நன்றி (நல்லது-உபகாரம்) செய்வது போல், நல்லார் ஒருவருக்கு நன்றி செய்தக் கால், அந் நன்றியை, அவர்கள் என்று திரும்பவும் தருவார்கள்? என, சதா எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டாம். ஏனெனில், இத்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தருவது போல, அவர்களும், நாம் செய்ததைக் காட்டிலும் அதிகமான உதவியைச் செய்வார்கள், என்று தெரிந்துக்கொள்," என்றனர்.

இதனைச் செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்த, தோட்டக்காரனும், குழந்தைவேலுவும் களிப்பெய்தினர்கள். இனி, தக்கவர்கட்கு உதவி செய்வதாகத் தீர்மானித்து, அன்று தொட்டு, அம்மாதிரியே செய்து வந்தனர்.

ஔவையாரும், அப்போதே இவ்விஷயங்களை ஒரு செய்யுளாகக் கோர்த்து, அச்செய்யுளை அவ்விருவர் உட்பட எல்லாருக்கும் கற்றுக்கொடுத்தனர்.

இன்றும், அச்செய்யுளை நம்மவர் சொல்லிச் சந்தோஷமுறுவதை நாம் பார்த்து வருகின்றோம்.

இதுவே அச்செய்யுள்:—

நன்றி ஒருவருக்குச் செய்தக்காலந்நன்றி
'என்று தருங்கொ' லெனவேண்டா! —நின்று
தளரா-வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

லால்குடி, சே. கந்தசாமி, [தமிழ் ஆசிரியன்.]
முனிசிபல் ஹைஸ்கூல் குடியாத்தம்.

மணவாழ்க்கையின் மர்மம்.

இதுவரையில் இம்மாதிரியான நூல் வெளிவந்ததில்லை. விலை அணா 8

இரஞ்சித போதினி ஆபீஸ், சவுகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

திருச்செந்தில்வளர் சிவன் போற்றி பதிகம்.

(71 ம்பக்கத்தொடர்ச்சி.)

20. ஏனையா வென்மீது மோடி வேண்டாம்
    ஏழையல்லோ? பாலனல்லோ? ஏழை பங்கா!
நானையா வுன்றனிரு பதமே போற்றி
    நாயனும் வாவென்றழைத்தால் நாயேன் முன்னே
தானையா முன்தோன்றி யருள்புரிந்து
    தற்காத்து ரெட்சி வள்ளித்தாயாள் தந்த
தேனையாவுண்ட கனிவாயா! வா! வா!
    சிவ சிவா! செந்தில் வளர் சிவனே போற்றி!!

21. நலங்கள் பெற ஆறெழுத்துப் பொருளுங்காட்டி,
    நடுவினின்ற முதலெழுத்துப் பொருளுங்காட்டி,
துலங்கு ரெண்டு வீதி வாசல் நாலுங்காட்டி,
    சூழ்ந்த நவவீரர்கள் சொரூபங்காட்டி,
இலங்கு வள்ளித் தெய்வானை மயில் வேல் சேவல்
    எந்திய பொற் கரங்களும், ஷண்முகமும் காட்டி
சிலம்பு பதம் தனைக்காட்டு ஐயா! வா! வா!
    சிவ சிவா! செந்தில் வளர் சிவனே போற்றி!!

22. அன்பருள மேவு நாயகனே வா! வா!
    அரஹர-ஆறுமுக மூர்த்தி வா! வா!
உம்பர்குடி வாழவந்த ஐயா வா! வா!
    ஓம் நமசிவாய குரு நாதா வா! வா!
எம்பெருமானென் சாமி நாதா வா! வா!
    எங்கோவே! எனையாளு நாதா வா! வா!
தென் பொதிகை நகர் வாழுமையா வா! வா!
    சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி!!

23. அறியாத புலனோடை நானென்றாலும்
    அப்பனே! யுன்பதத்தை மறப்பதில்லை,
வெறியான பேர்பணத்தைத்திருத்தி நன்றாய்
    மென்மேலும் கருணை யுன்கிருபை கூர்ந்து
பிரியாமலிருக்க வென்று அருள் புரிந்து,
    பெருமையுனுருமை நல்கிப் பெருமை நல்கி,
சிறியேனைக் காத்தருளு ஐயா வா! வா!
    சிவ சிவா! செந்தில் வளர் சிவனே போற்றி!!

24. காரிலங்கு கூந்தல் மின்னார் மோகம் ஒட்டி,
    காண் கயிலை சுகப்காட்டிக் கருணைகூர்ந்து,
நேரிலங்குந் தமிழ் காட்டி, ஞானம் காட்டி,
    நினைவிலுனைப் பிரியாமலருளுங் காட்டி,

தாரிலங்கு திருமார்பும், தோளுங்காட்டி,
ஷண்முகமும், பன்னிருகை தோலுங்காட்டி
சீரிலங்கு பதங்காட்டு மையா வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

25\. கயல் காட்டு விழிமாதர் மோகம் தேட்டி,
கல்வியின்ப சுகங்காட்டிக் கருணை கூர்ந்து,
மயல் ஓட்டி யுன்றனிருபதமும் காட்டி,
மனதிலொன்றும் பிரியாமலருளுங்கூட்டி,
அயல் காட்டு செஞ்சேவல் கொடியுங்காட்டி
ஆறு முகந்தனைக் காட்டி யஞ்சேலென்று
செயல் காட்டி, யெனையாளுமையா வா ! வா !
சிவசிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

26\. ஆசை யெனும் பேரின்பப் பொருளுங்காட்டி,
அஞ்செழுத்தின் ஆறெழுத்தின் கருணைகாட்டி,
பூசை செய்யும் விதிப்படி கைமுறையுங்காட்டி,
பூரணமா மெஞ்ஞானம் புகழுங்காட்டி,
மாசில்லாப் பரஞ்சோதி மணிபோலென்றன்
மனதிலொன்றும் பிரியாமலருளுங்காட்டி,
தேசிகனே யெனையாளுமையா வா ! வா !
சிவ சிவா ! செந்தில் வளர் சிவனே போற்றி !!

27\. உருத்தி யெனை யாளாக்கித் தமிழை நித்தம்
ஓதுதற்கு மிசைகாட்டி, யொள் ளொளிக்குள்
பொருத்தி, ஐந்து புலன்களையும் ஒன்றுய்க்கூட்டி,
பூரணமா மெஞ்ஞானப் புகழுங்காட்டி,
கருத்தினின்று பிரியாமலருளுங்காட்டி,
கல்வியின்பசுகங்காட்டிக் கருணை கூர்ந்து,
திருத்தியெனை யாட்கொண்ட ஐயா வா ! வா !
சிவ சிவா ! செந்தில்வளர் சிவனே போற்றி !!

சுபம் ! சுபம் !! சுபம் !!!

லால்குடி, சே. கந்தசாமி.

முயற்சி.

நாம் ஒரு காரியத்தைச் சித்திபெறச் செய்யவேண்டுமானல் அது முடியுங்காறும் விடாது முயலவேண்டும், அதற்குயிடையில் எதிர் பாராத கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவு நேர்ந்தாலும்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணுயினர்.

என்றபடி எதற்கும் சிறிதும் மனஞ்சலியாமல் பொறுமையுடன் அதனை செய்து முடித்தல் வேண்டும். நல்லொழுக்கத்தில் நின்று முயற்சிசெய்வதே தகுதியானது. நன் முயற்சி சகல சம்பத்திற்கும் காரணமாதலின் அதை உறுதியாகக் கைக்கொள்ள வேண்டும். பண்டைய காலத்து நூலாசிரியர் முயர்ச்சியினலன்றோ பல்லோர்க்கும் பயன்படத்தக்க பல அரிய பெரிய நூல்களையியற்றியுள்ளார்.

சிலர் இரண்டொரு தடவை ஒரு காறியத்தைப்பற்றி முயற்சி செய்து அக்காரியங்கைகூடாவிடின் மனஞ்சலித்துவிட்டு விடுகின்றனர் அது தவறு. இரண்டொருதடவை முயன்று கைகூடாவிடினும் மீண்டும் அக்காரியம் சித்தி பெறும்வரையில் விடாமுயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்யின் அக்காரியம் கைகூடுவது நிச்சயம் முயற்சியினுல் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. இது பற்றியே நம் மூதாட்டியராகிய ஔவைபிராட்டியார், முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் எனவும் ஊக்கமது கைவிடேல் எனவும் கூறினுர். இடையில் நேரும் இடையூறுகளுக்கு அஞ்சி மனதை தளர விட்டவர்கள் தாம் தொடுத்த கருமத்தை ஒருபோதும் செய்து முடிக்கமாட்டார்கள்.

ஒவ்வொருவருக்கும் காரியத்தைக் கைகுடுத்தலில் சோம்பலைப் போன்ற பகை வேறேதுவுமில்லை ஆதலின் அச்சோம்பலை ஊக்கமென்னும் தடிகொண்டடித்து ஒட்டி நாம் மேற்கொண்ட கருமத்தை முற்றுப்பெறல் செய்தல்வேண்டும் இதற்கு மாறுகச்சிலர் மனத்திடமின்றி கருமங்களை சரிவர நிறவேற்றுமல் தங்களுக்கும் பிறர்க்கும் யாதொரும் பயனுமில்லையாக அக்காரியத்தை அறைகுறையாகவிட்டதினுல் அவமானமுமடைந்து வாளாக்கிடந்து மயங்குகின்றனர். மற்றும் சிலர் எல்லாம் விதிப்பயன் யென்றும் அதிர்ஷ்ட மிருப்பின் எல்லாம் தானே வருமென்றும் வீணன பின்னடையும் யோசனைகளை செய்து தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்த கூலி தரும் என்னும் உண்மையையறியாமல் முயற்சியைக்கைவிட்டு சோம்பலுற்று, வருமைபடைந்து வருந்துகின்றனர். அந்தோ! இவர்கள் அறியாமை இருந்த வாறென்னே, இவர்கள் விதியை மதியால் வெல்லலாமென்பதைசிறிதும் அறியார்கள் போலும் விதியை மதியால் வென்ற மார்க்கண்டேயரைப்பற்றி குமர குரு பர சுவாமிகளும் தாம் திருவாய்மலர்ந் தருளிய நீதி நெறி விளக்கத்தில்

உலையா முயற்சி களைகணுவூழின்
வலிசிந்தும் வண்மையுமுண்டோ-உலகரியப்
பான்முளைதின் றுமறலியுயிர்குடித்த
கான்முளையே போலுங்கரி

என்று செய்யுள்ளாரே மார்க்கண்டேயமுனிவர் யமனைவென்று என்ஞான்றும் பதினுறுவயதினராயிருந்தும் பாகியத்தைப்பெற்றதற்கு

காரணம் அவரது விடாமுயற்சியன்றோ, அமரர்களாலும் அடைய முடியாத பெறும்பேற்றைத் துருவன் என்னும் சிறுவன் அடைந்தது எதனாலெனில் அவனது விடாமுயற்சியினாலன்றோ? இடையில் இவர்கட்கு நேர்ந்த துன்பங்கள் எவ்வளவு. அவற்றிற்கெல்லாம் இவர்கள் சிறிதும் அஞ்சினார்களோ? அஞ்சித் தங்கள் முயற்சியைக் கைவிடின் அவர்கள் அப்பயனை அடைந்திருப்பார்களோ? ஒருபோதும் அடைந்திருக்கமாட்டார்கள். ஆதலின் மக்களாக பிறந்த நாம் ஒவ்வொருவரும் நல்வழியில் நின்று இடையூறுகளெவற்றிற்கும் அஞ்சாமல் விடாது முயன்று எடுத்தகருமத்தை இனிது முடித்துப் பயன்பெறுவார்களாக.

மேலும், நமது ரஞ்சிதபோதினிப்பத்திராதிபர் அவர்கள் ரஞ்சித போதினிக்கு சந்தாநேயர்களின் தொகை மிகக்குறைவாயிருந்தும் எப்படிக்கேனும் அதனை அபிவிர்த்தியடையச் செய்யவேண்டுமென்று ஊக்கங்கொண்டு உழைத்துவருவார்களென்று நம்புகிறேன். தமிழபிமாணிகளாயுள்ள ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாநேயர்களாய் இருப்பதுமன்றி தங்கள் நன்பர்களையும் சந்தாதாரர்களாய் சேர்த்துத்தந்து நமது ரஞ்சிதபோதினியை இனிதுவாழ முயற்சி செய்யும்படி வேண்டுகின்றேன். சுபம். ப. மு. ச. கருப்பஞ்செட்டியார்.

கீழச்சிவல்பட்டி.

இரத்தினம்பாள்

அல்லது

தற்கொலை புரியத்துணிந்த தையல்.

அத்தியாயம் 1.

சதி பதிகளின் சந்திப்பு.

கடைசியாகத் தங்களுடைய விருப்பந்தானென்ன? நமது மகள் இரத்தினம்பாளை யாருக்குமணம்செய்ய நினைத்திருக்கிறீர்கள் என்று தன்கனவனாகிய இரத்தினசாமி நாயுடுவை நோக்கி பார்வதியம்மாள் கேட்டாள்.

இ.நாயுடு:- பெண்ணே! என்னுடைய இஷ்டத்தைக்கேட்க ஆவலுற்றபடியால் இதோ சொல்லுகிறேன் சற்றுகவனமாய்க்கேள். என்து தங்கையின் குமாரன் இராமனாத நாயுடு இருக்கிறாரல்லவா? அவர் மிகவும் உத்தமகுண நன்னடக்கை யுடையவராகையால் அவருக்கே நமது மகளை திருமங்கிலியம் சூட்டி என்கண்குளிரப் பார்க்கவேண்டுமென்பதே என்கருத்து.

பார்வதி:- என்ன சொன்னீர்கள் யாதாமொரு காரியத்தைப்பற்றி கேட்டால் தங்களுடைய வளக்கமே இப்படிதான் சொல்லுகிறது-சபாஷ் நல்ல யோசனை இருமநாதன் ஓர் பரம ஏழைகுந்தி இருக்கவும் ஓர் உயர்ந்த குச்சு இல்லாதவன், அவனுக்கா?பெண் கொடுப்பது சற்றுயோசித்துச்சொல்லுங்கள் என்னுடைய தம்பியின் குமாரன்இருஜுவைபற்றிதங்களுடைய தாத்பரிய மென்ன அவனென்ன ? தங்களுடைய மருமகனைப்போல் ஏழையா ? நஞ்சை பிஞ்சையில்குறைவா? அவனுக்கு நிகர் இந்த சமஸ்தானதிலும் ஓர் பிறபுகிடையாதென்றே நான் உருதியாக சொல்லுவேன், அப்படி யிருக்க அவனை விலக்கிவிட்டு இந்த ஏழைக்கு தான் கொடுப்பேனென்று கூறியதும் வியக்கத்தக்கதே ?

இ-நா. பெண்ணே உன்னுடைய பேதமைக்குணத்தால் இருமநாதனை இழிவாகவும் ருஜுவை மேலாகவும் பேசிவிட்டாய். இருமநாதன் ஏழையென்பது மெய்தான் அவன் குடும்பங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவனுக்கு தற்சமயம் இருக்கிற ஆஸ்தியே போதுமானது. அதுவும் தவிற கல்வியிலும் இங்லீஷ் தமிழ் தெலுங்கு முதலிய மூன்று பாஷைகளிலும் பூரண பாண்டியத்யம் பெற்றிருக்கிறான் பேச்சை நெடுகவளர்ப்பானேன் என்னுடைய தங்கையின் குமாரன் ருமநாதனுக்குதான் திருமணஞ் சூட்டவேண்டும் முதலாவது நமது குழந்தையின் விருப்பத்தை அறிந்துதான் செய்யவேண்டும் விருப்பமில்லாவிவாகம் விபத்துக்கு வழியாகும் பெண்ணே இதைப்பற்றி நமது குமாரத்தியின் விருப்பமுணர்ந்து, மறுபடியும் பேசுவோம்.

அத்தியாயம் 2.

மணவாளன் வருதலும் வீட்டில் கலக்கமும்.

நேயர்களே ! நாம் கதையைத்துவங்குமுன் மேற்கூறியவர்களின் வறலாற்றை சற்று விவரித்து கதையை துவக்குவோம்-இலங்கையில் மத்தியபாகமாகிய கண்டி பெரியகுளத்துக் கருகாமையிலுள்ள ஓர் வீட்டில் இவர்கள் வசித்திருக்கிறார்கள் அந்த வீட்டு முகப்பில் இரத்தினவிலாசமென்று பெரிய எழுத்தில் எழுதியிருக்கின்றன, அவருக்கு இரத்தினம்பாளென்ற ஓர் பெண்குழந்தையும் ரகுபதி என்ற ஓர் ஆண்குழந்தையும் ஆக இரண்டு குழந்தைகளுண்டா யிருந்தனர் அவர்களில் மூத்தபிள்ளையாகிய ரகுபதிக்கு சுமார் 18 வயதிருக்கலாம் இளைய பிள்ளையாகிய இரத்தினம்பாளுக்கு சுமார் 14 வயதிருக்கலாம்.

(தொடரும்),

R. S. Joseph,

இனியவைகூறல்

மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வெளிப்படுத்து வனவான இனிய சொற்களைச் சொல்லுதல் இனியவை கூறல் என்பது. இதுவும் விருந்தினரை யுபசரித்தற்கு முக்கியமான கொள்கையாகும்; இதுபற்றியே விநாயக புராணத்தில்,

“ வந்து விருந்து மலராத வதன நோக்குமுன் குழையும்
அந்தவடைவாலகத்தன்பையலர்ந்தமுகத்தால் வெளிப்படுத்திச்,
சந்தமணி வாயினுந்தோன்றச்சற்றும் வஞ்சம் கலவாமே
உந்துஞ் சுவையின் மொழியென்று முரைத்தல் வேண்டும் பயன்
வேண்டின்” கச்சியப்ப முனிவர்.)

வந்த விருந்தாளிகள் மலர்ச்சியில்லாத முகத்தைப் பார்க்கு முன்னே வாடுவர். அக்காரணத்தால் இம்மைப் பயன்களையடைய விரும்பினுல் மனதிலுள்ள அன்பை மலர்ந்த முகத்தினல் வெளியிட்டு அழகிய ஆபரணம் வாயிலும் விளங்கும்படி சிறிதும் வஞ்சனை கலவாமலே மிக்க உருசியுடைய இனிய சொற்களை எப்பொழுதும் சொல்லுதல் வேண்டும். நன்னெறி.

“ இன்சொலாலன்றியிருநீர் வியனுலகம்
வன்சொலாலன்று மகிழாதே-பொன்செய்
அதிர்வளையாய் பொங்காதளர் கதிராற்றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங்கடல்” (சிவப்பிரகாச சுவாமிகள்)

பொன்னினுர் செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களை யணிந்தவளே, பெரிய கடல் நீரிற் சூழப்பட்ட பெரிய உலகத்திலுள்ளவர் எப்பொழுதும் இன் சொல்லினுல் (மகிழ்வாரே) அல்லாமல் கடுஞ் சொல்லினுல் மகிழமாட்டாரன்றோ? (எது போலெனின்) கடலானது உஷ்ணமூன கிரணங்களையுடைய சூரியனது வருகைபால் பொங்காது குளிர்ந்த சந்திரனது வருகையால் பொங்கும்.

நீதிநெறி விளக்கம்.

“ இனியவரென் சொலினுமின் சொல்லே யின்னுர்
கனியுமொழியுங்கடுவே—அனல் கொழுந்தும்,
வெங்காரம்வெப்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கிக்குளிர்ந்துங் கொளும்” (குமரகுருபர சுவாமிகள்).

அன்புடையவர் யாது சொன்னுலும் அது இனிய சொல்லேயாம் அன்பில்லாதவர் சொல்லுகின்ற செவிக்கு இனிய சொல்லும் கடுமையுடையதேயாம். (இவை எவை போலவெனின்) நெருப்புப் பால் எரிகின்ற வெங்காரம் கடுமை செய்வதா யிருந்தாலும் வியாதியைப் போக்கும்! விஷம் உடம்பு சிலிர்க்கும்படி குளிர்ச்சியையுடையதாயிருந்தாலும் விரைவில் கொன்றுவிடும்,

“ துன்புறூஉ உந்துவ்வாமையில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉமின் சொல்வர்க்கு” (திருக்குறள்)1

எல்லாரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இனிய சொற்களையுடையவர்களுக்கு, துன்பததை மிகுவிக்கும் வறுமையானது இல்லையாம்.

" அல்லவை தேயவறம் பெருகு நல்லவை
நாடி இனிய சொலின் " குறள (2).

பொருளாற் பிறர்க்கு நன்மை தரும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து; கேட்பதற்கு இனியனவாக ஒருவன் சொல்வனுபின் அவனுக்கு பாவங்கள் குறைய தருமம் செழிக்கும்.

" சிறுமையுணீங்கிய வின் சொல் மறுமையும்
இம்மையு இன்பத்தரும்'' குறள் (3)

பொருளார் பிறர்க்கு வருக்தம்தருதலில்லாத இனிய சொல் ஒருவனுக்கு மறுமையிலும் இம்மையிலும் இன்பத்தைக் கொடுக்கும்

நாம் இனிதாகபேசுவதினல் பிறரிடத்தினின்றும் பொருள் சம்பாதித்துக் கொள்ளலாம் தர்மமானது இன்சொலினிடத்துள்ளது, நாம் இன் சொலின் மூலமாய் தர்மத்தை கைப்பற்றுகிறோம். நாம் இனிய மொழிகளை எப்பொழுதும் பேசுவதினல் பெரியவர்களுடைய சிநேகம் பெற்றக்கொள்ளலாம் இனிதாகப்பேசுவதில் கெர்வம் என்பது சிறிதும் கவரக்கூடாது அப்படிக்கலந்திருந்தால் அவன் துன்பத்திற்காளாவான், இதைப்பற்றிய ஒரு சிறகதை;

முன்னொருகாலத்தில் இராவணன் பரமசிவன்மேல் கோபம் கொண்டு கைலேயங்கிரியைத் தன்னுடைய வாச ஸ்தானத்திற்கு கொண்டுபோக நினைத்து மறுநாள்தான்வந்து மலையை தனது தலையால் தூக்கினன்-தன்னல் கூடிய மட்டும் தூக்கிப்பார்த்தும் அசைக்கமுடியவில்லை அப்பொழுது சிவன் தனது கடைக்கண்ணுல் ராவணன் மலையை தூக்குவதைப்பார்த்து, தன்னுடைய கட்டை விரலால் ராவணன் தூக்கிக்கொண்டிருக்கும் இடத்தில் அழுத்தினர் அப்பொழுது ராவணன் வேதனை பொருக்க மாட்டாமல் கதரிக்கொண்டு தான் செய்த குற்றத்தை மன்னிக்கும் பொருட்டு சிவன்மேல் இனியமொழிகள் அடங்கிய சிலபாடல்களைப் பாடினன். அந்த இனியபாடல்களை சிவன் அருகாமையிலுள்ள பார்வதி தேவிகேட்டு தான் இராவணன்பாடிய பாடல்களுக்கிரங்கி அவனை தீங்கினின்று விடுவித்தாள். இதனல் நாம் கடவுளை நம்மிடத்திலுள்ள இனியவார்த்தைகளால் நம் வசப்படுத்திக் கொள்ளலாம்

ஆதலால் நாம் இனிமேலாகிலும் ஒவ்வொருவரிடமும் இனிய மொழியை பேசிவர முயல்வோமாக.

தமிழபிமானி.

K. சாமினதன், எட்டையாபுரம்.

மிருகாவதி.

78 ம் பக்கத் தொடர்ச்சி.

இங்குறும் ஆண் பெண் பாலராய் விட்டார்கள் தங்கள் சிருங்கார ரஸத்தை யனுபவிக்கும் பொருட்டாய் லதாகிரகங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும் நினைத்தல் தகும். இதோபாருங்கள், இந்த கொடிவீட்டில் விதம் விதமான ஆஸனங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதோ பாருங்கள், மற்றொரு இந்தக்கொடிவீட்டில் விதம் விதமான கட்டில் மெத்தை தழுவணைகளும் போடப்பட்டிருக்கின்றனவே!

ரூபாவதி! அடியே கமலா! யாரார் மனோதருமம் எப்படி யெப்படியோ அப்படியப்படியெல்லாம் மனோராஜ்யஞ் செய்யலாம்; இந்த உபவனமோ இன்னாருடைய தெனத் தெரிந்தபாடில்லை. பன்னீர் மரங்களும் தென்னை, கமுகு பிலா செவ்வாழை முதலான சமஸ்தான விருக்ஷஜாதிகளும் பயிரிடப் பட்டிருக்கும் விந்தையைப் பார்த்துக் களிப்பெய்துவோம்! இவைகள் ருது பேதமில்லாமல் பலன்களைக் கொடுக்கக் கூடியனவாய்க் காணப்படுகின்றனவே! இதற்குடையவர் நம்மை ஆக்கினை பண்ணுவார்களேல் நாம் அவலைப்பெண்கள் என்ன செய்யலாகும்!

மிருகாவதி: என் இன்னுயிர்க்கண்மணிகாள்! கவலை சிறிதும் வேண்டாம். நாம் தெய்வகதியாயிவண் உற்றனம். ஒரு ஆக்கினையும் நம்மிடமணுகாது, இங்குள்ள திவ்வியமான புஷ்பங்களை கொய்து இந்தசெந்தாமரைப் பொய்கையில் நீராடுவோம். இங்கேயே அம்பாளைஸ்துதித்துப் போற்றுதல் செய்வோம். பிறகு வருவது வரட்டும்; வரவேண்டியதைத் தடுக்க நம்மாலுமாகாது பின்னே வராமலுமாகாது. எவற்றிற்கும் அஞ்சாதீர்கள், தோழியர்காள்! நம்முடைய நந்தனவனத்திலமைக்கப்பட்டிருக்கிற நேர்த்தியான நடபாவிகளைக் காட்டிலும் அழகுள்ள இந்ததாமரைத் தடாகத்தைப் பாருங்கள் அடிகண்மணிகாள்! 'பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை' என்பார்கள். இலட்சுமி தேவியார் வசிப்பதும், வாணி குடியிருப்பதும், நான்முகன் குடிகொண்டிருப்பதும் இந்தத்தாமரைமலரிலேதான். மதனன் கணைகளுளொன்றுவது இஃதேயாம். அல்லாமலும் விஷ்ணுவின் உந்தி கண்கள், கையினிற் படை யாவும் இந்த செந்தாமரையே ஜீவராசிகட்கெல்லாம் உயிர் நிலையாயிருப்பதுவுமிந்த கமலமேதான். உபமான உபமேயங்கட்கு கவிகள் இந்த மலரையே சிறப்பித்தெடுத்துக் கொள்ளுகின்றனர். பொய்கைகள் பொலிவுறுதலும் தாமரை மலரால் தான் மாதர் மணிகளின் கண்கள், கரங்கள், தாள்கள் எல்லாம் இம்மலருக்குவமையானவை. சூரியனைத் தாமரை நண்பனென புகல்வதுண்டு. ஏனெனில் தாமரை காலையில் அலர்ந்து மாலையில் கூம்புதலால்—பிரமரங்கட்கு இம்மலர் மதக்குடமாம், அன்னங்கட்கோ தங்குமிடமாம். இம்மலரில் சிறந்த * முத்துக்கள் பிறக்கும் இதற்கடுத்தபடியாக முல்லைமலரையே கூறுதல் தகும்.

கபலாட்சி: எல்லாவிதத்திலும் இந்த உபவனஞ் சிறந்ததே. கண்காட்சிக்குகந்ததே! மந்த மாருதமுஞ் சில்லென வீசுகின்றது. பூவுங்கொய்தாயிற்று நீராடுவோம் வாரீர்.

மிருகாவதி: தோழிகாள்! இதோ பாருங்கள் குமுதம், குவளை, காந்தள், கோங்கு, சண்பகம், செவ்வந்தி, கடம்பு, புன்னை, கொன்ற மலர்களுமிருக்கின்றனவே! இவைகளையுங் கொய்துவிட்டுப் பிறகு நீராடி பரமேசுவரியைப் பூஜிப்போமாக " என்றாள்.

இவ்வாறு இந்த நான்கு நாரீமணிகளுஞ்சேர்ந்து அங்கு மிங்கு முலாவிக்கொண்டிருந்தபடியே மனவுறுதி கொண்டவர்களாய்: எந்த விஷயத்திலும் கவலைகிலேசமுமில்லாதவர்களாய் வருவென வெல்லாம் வந்தே யாகுமென்ற மன திருட்டங் கொண்டவர்களாய் பூக்கொய்து கொண்டிருக்குங்கால், ஆங்கு சற்றுதூரத்தில் இரண்டு பூமான்களின் தோற்றமும், அன்னவர்களின் இனிய மொழியுங் கண்டு வியப்புறலாயினர். மங்கையர்கள் அந்த பூமான்களைக்கண்டு, அவர்களை சிறந்த பெருந்தன்மை வாய்ந்தவர்களாய மதிக்க மிருகாவதி தன் மூன்று சகிமார்களையும் நோக்கி, சற்றே இந்தப் பூமான்களை நெருங்கி, அவர்கட்குத்தெரியாமல் அவர்கள் வார்த்தைகளைக் கேட்க விருப்பங் கொண்டு, ஒரு அசோக மரத்தைக் கூடாரமாய்க்கொண்டதோர் லதா கிரகத்தில் புக்கி, மறைந்து இருந்து கேட்கவேண்டுமென பணிந்தவாறு எல்லாரும், அவள் விரும்பியபடி செய்யலாயினர்.

---

* " தந்திவராகமருப் பிப்பி பூகம் தழைகதலி
நந்து சஞ்சலம் மீன்றலை கொக்கு நளினம் மின்னார்
கந்தரம் சாலி கழை கன்னல் ஆவின் பல் கட்செவிகார்
இந்து உடுப்புகரா, மூத்தம் ஈறம் இருபதுமே " (தொடரும்).

திறையூர், மா. சுப்பராமய்யா.

சுலோசனை

[79 ம் பக்கத் தொடர்ச்சி.]

இரண்டாவது காட்சி.

இடம்: நவமணிமண்டபம்.

[ராவணேஸ்வரனும் மண்டோதரியும் பிரவேசம்].

காலம் விடியற் காலம்.

மண்: பிராண நாத! லங்கேஸ்வர! கர்ம பூமியாமிப்பூவுலகின் கண் எத்தகைய சிறப்பினரும் ஈசவரன்' என்ற மிகவும் அரியதான பட்டப்பெயரைப்பெற்றவர்களைக் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை, இத்தகைய சிறப்புவாய்ந்த பதவி தங்கட்கு கிடைத்திருந்தும்

கேவலமிழிவைத்தரும் பெண்ணுசையை விடுக்காமல், விண்ணவருந் தகைக்கொணுத இந்த லங்கா ராஜ்யம் வேரற்றமரம்போல் பூண்டற் றழியும் காலம் வந்ததே! நேற்றுகாலையில் குழந்தை மேகநாதனை போர்புரிய போக விடுத்தீர்கள்; நான் மறுத்துச் சொல்லுவதற்கில் லாமற்றிகைத்தேன்; எல்லாரும் எமனுலகு சென்று எஞ்சிய மேக நாதனையும் எனக்காகாதென் றெண்ணிப் போகப்பணிந்தீர்கள் போ லும் உயிர் பிழைத்தாகிலும் வருவானே! அவன் மகா சூரனே, விண்ணவரையே வென்ற தீரனே; ஆயினும், இச்சமரினில் மீண்டு வந்தவர்களே யில்லையாதலால், சங்கை மேற்கொண்டு இவ்விதம் வருந்தலாயினேன். இவ்விலங்கையில் சீதையைக் கண்டது முதல் அனர்த்தங்களே வளர்ந்து தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. இவ்வளவிற்கும் அவள் மேலுற்ற தூராசை [கடிந்து] நிராசையான பாடில்லை. இது தகுமா, தருமமாகுமா? அடையத்தகாதவளும், மனதினல் ஸ்மரிக்கவுங் கூடாத வருமான தேவமங்கை யொருத்திக் காக சர்வ ஸ்வத்தையுமிழந்து, பிரதாபலங்கேஸ்வரன் என்ற பேருங் கீர்த்தியுமற்று, தங்களுக்குப் பணிவிடைகள் சமயமறிந்து விருப்பத் தின்படி நினைத்த மாத்திரத்தில் செய்துக்கொண்டிருந்த விண்ண வரே ககனமார்க்கத்திலிருந்தபடி கைகொட்டி நகைக்கலாயிற்றே! ஐயோ! [பரிதாபம்]

ராவ: ஏனிவ்வாறு தாறுமாருய்ப் பிதற்றுகின்றனை? பிராணசகி! நின் சுதன் பராக்கிரமத்தை நன்காராய்ச்சி செய்திருந்தால், நீ இங் ஙனம் மனங்கசிந்து மொழிய வரமாட்டுவாயில்லை. இதோ பார், இன்னும் ஒரு நொடிப்பொழுதில் ஜயப்பிரதாபசாலியாய் நம்மரும் புதல்வன் வரப்போகின்றனன்!

மண்: இந்தப்பெருமை இனி வேண்டாமே! சீதை வந்தநாளே தங்களுடைய அருமை பெருமையெல்லா மொழிந்தனவே!

ராவ: நாரீமணி! வருந்தற்க, மாண்டவர்கள் போக மீள்பவர் கட்கு இனி குறையில்லை. மாயாவித்தைகளிற் சிறந்தவனும், பல பராக்கிரமசாலியும், அளகாபுரி மன்னனை வென்றவனுமான, இந்திர ஜித்தேயன்றோ இப்பொழுது போர் செய்து கொண்டிருக்கின்றான்! கவலையேன்!

மண்: நான் அறிந்தமட்டில், பிராணநாயகா! இந்த யுத்தத்தில் வீராதி வீரன் பிரகஸ்தன் மாய்ந்தனன்; சூராதி சூரனை நிகும்பன் நிரியாணமாயினன்; தங்கள் தம்பி கும்பகர்னன் மகாபலவான் இருந்த விடமே தெரியாமல் புல் முளைத்தும் போய்விட்டது. அக்நி கேது ரச்மி கேது, வஜ்ர தம்ஷ்டிரன், அகம்பனன், தேவாந்தகன், நராந்த கன் முதலாயினேரும் தென்றிசை சென்றனர்: மாயாவி வித்யுஜிஹ் வன் வீழ்ந்தனன் (பெருமூச்செரிந்து—கண்ணீர் சொரிந்து) ஐயோ! இந்த குப்தமான இடத்தை கடல்தாண்டி வந்திருக்கும் எதிரிகளின்

வீரச்செய்கைகளை யோசித்து பார்க்குமிடத்து அவர்கள் நம்மை வெல்லுவார்கள் என்றே மதிக்கத்தக்கதாகும். [தொடரும்.]

துரையூர், மா. சுப்பராமய்யர்.

கலிகால விநோதங்கள்.

புருஷகர்ப்பம்

இரண்டு சிசுக்கள் ஒரு புருஷன் வயற்றிலிருந்தது.

சில வாரங்களுக்கு முன் ஸர்வியாதேசத்தின் தலைநகரான பெல்கிரேட் பெரிய வைத்தியசாலைக்கு 22 வயதுள்ள திடசரீரியான ஸைவொட்டாஸ போவிக் என்பவன் வயிற்றில் தாங்கமுடியாத நோக்காடு ஏற்பட்டிருப்பதைச் சிகிச்சை செய்துக்கொள்ள ஆஸ்பத்திரிக்கு வந்தான் டாக்டர்கள் பரிசோதனைசெய்து பார்த்ததில் பெரியவீக்கம் வயற்றின் வெளிப்பக்கம் காணப்பட்டது. டாக்டர்கள் யாவும் குல்மகட்டியென்றே தீர்மானித்து விட்டனர். உலகத்தில் ரணவைத்தியத்தில் மகத்தான பேறு படைத்த டாக்டர் ஹாரிக் வயிற்றைதிறந்து சோதித்ததில் குழந்தை உருவங்களோடு குழந்தைப்பையில் இரு சிசுகள் இருக்கக்கண்டார், இரண்டும் ஆண்சிசுக்களே ஒன்று 10 அங்குலம் நீட்டு, மற்றொன்று 6 அங்குலம் நீட்டு இருந்தன. இச்சிசுக்களுக்கு தலை, வாய், கழுத்து, சுவாசக்குழாய் விரலில் நகங்களுடன் முதலிய அங்கங்கள் யாவும் சரிவரக்காணப்பட்டன, டாக்டர் அவர்களே இதைப்பார்த்து ஆச்சரியப்பட்டார் என்றால் அந்த பெல்கிரேட் நகரமுழுதும் காட்டுத்தீயைப்போல் பரவிற்று கர்ப்பமாயிருந்த புருஷகர்பிணியின் முகத்தைக்காண பிரதிதினமும் லட்சக்கணக்கான ஜனங்கள் ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தனர். டாக்டர்கள் மனம் போனவாறு அபிப்பிராயங்கள் கூறினர்கள், அதாவது தாய்வயிற்றில் இப்புருஷன் ஜனிக்கும்போதே இவன் வயிற்றிலே இரண்டு சிசுக்கள் உற்பத்தியாய் இருக்கலாம் என்றார்கள். ஆனல் இது சாஸ்திரத்திற்கு ஒத்திருக்க வில்லை. புருஷகற்பிணிக்காரன் திடசாரியாகவே ஆஸ்பத்திரியில் இன்னும் இருந்து வருகிறான். இது உண்மையான செய்தி அமெரிக்கா "வைத்திய விசாரம்" என்ன பத்திரிகையிலிருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டது.

நேயர்களே! இது கலிகாலமல்லவா? இனிப் பெண்மக்கள் ஓய்வெடுத்துக்கொண்டு விடலாமல்லவா! கற்பமாகும் வேலையை ஆடவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, ஆடவர்களின்வேலைகளை இனி பெண்மக்கள் ஒப்புக்கொண்டுவிட்டாலும் விடலாம் இக்கலிகாலத்தில் நாமும் நம்மூதாதையாரும் கேட்டிராததும் பார்த்திராததுமான பல ஆச்சரியமான விஷயங்களை யெல்லாம் பார்த்தும் கேட்டும் வருகிறோம்.

பத்திராதிபர்

செத்துப்பிழைத்தவன் கதை.

கல்கத்தா ஷியாம் பசாரில்; ஆசு தோஷ் சவுத்திரி என்பவரின் குமாரன் பரிதோஷ் சவுத்திரி என்பவனுக்கு வயது 22 பள்ளிக்கூடத்துக்கு மாணவன் இவன் ஜனவரிமீ 11உ வியாதியினால் மிகவும் கேவலமான ஸ்திதியை அடைந்தான். கணக்கில்லாத டாக்டர்கள் பார்த்து கைவிட்டுவிட்டனர். கடைசியில் பார்த்த டாக்டர் கென்குப்தாவும் இவனுக்கு மரணம் நெருங்கிவிட்டதென்று கூறிவிட்டனர். பின் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் பிராணன் போய்விட்டது. மறுநாள் காலை உயிர்வந்து நாடிகள் சரிவரநடக்க ஆரம்பித்தன, அ ்ன் இரவு நடந்த விந்தையை பின் வருமாறு சொல்லத் தொடங்கினான்.

என்னை இரண்டு பேர்கள் தூக்கிக்கொண்டு போனார்கள். அவர்களை நான் பார்க்க முடியவில்லை. நான் மறு உலகத்திற்கு செல்வதாக தோன்றியது. வழியில் மூன்றாவது ஒருவன் வந்து இது என்ன ? நீங்கள் என்ன செய்தீர்கள் ? இந்தமனிதனை ஏன் தூக்கிவந்தீர்கள் " என்று கூறினான். அந்தவார்த்தையைக் கேட்டதும், அவர்கள் என்னைத்திடீரென்று போட்டுவிட்டார்கள் பொத்தென்று விழுந்தேன் தன்னைத்தூக்கிச்சென்ற இருவரிடமும், மூன்றாவது மனிதனிடமும் மிகவும் பயந்து விட்டேன். அவர்கள் உடனே வேகமாக ஓடி விட்டார்கள். என்னை பொத்தென்று போட்டவுடன் அவர்களுள் ஒருவன் உரக்கத்தும்பினான். அவன் இருமுறை தும்பிவிட்டு ஓட்டம்பிடித்தான். அதன் பின் நான் விழித்துக் கொண்டேன் என்றான். அவனுடைய தாய், தகப்பனாரும், மற்றும் வந்திருந்த ஜனங்களும், தும்மல் சப்தமும், பொத்தென்று ஏதோ விழுந்த சப்தம் கேட்டதே ஒழிய, இவ்விடம் நடந்ததென்று தெரியவில்லை என்றார், அண்டை அயலார்கேட்டு இவனை ஏராளமான ஜனங்கள் வந்து பிரதிதினம் விசாரிக்கின்றனர். பத்திராதிபர்.

விநோத விஷயங்கள்.

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

புத்தியில்லாதவன் என்றது.

" அடேப் ஏன்டா, சுத்த புத்தியில்லாதவன் போல இருக்கிறாய்? என்று சுப்பனைப் பார்த்துக் குப்பன் கேட்டான்.

டேய் டேய் ! என்னை புத்தியில்லாதவன் அதாவது மடையன் என்காதே" என்றான் சுப்பன்.

" அடடா நான் வேறு அருத்தம் வைத்துக்கொண்டு சொன்னால் நீ மடையன் என்ற அருத்தங் கொள்கிறாயே "

" அது தான் என்ன அருத்தம் ? சொல் ."

" புத்தியில்லாதன் : புத்தியில்—ஆதவன்.

புத்தியில் - அறிவில்

ஆதவன் - சூரியனுக்கு ஒப்பானவன் என்ற அருத்தத்துடனன்றோசொன்னேன் இதைக்கேட்டதும் சுப்பன் ஆ, ஹா, ஹாவென்று நன்றாய் நகைக்கலாயினன். தொடரும், S. கிருஷ்ணசாமி.

ரக்தாக்ஷிவருஷத்திய ரஞ்சிதபோதினியின்
திருக்கணித சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342,
கொல்லமாண்டு 1099—1100, இங்கிலீஷ் **1924**ளு

இங்கிலீஷ்	ஏப்ரல் மே	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	ஞா	நவ60	பூசம்48-53	சித்60	ஸ்ரீராமநவமி
2	14	திங்	தச0-43	ஆயில்ய51-8	சி51-8மர	கர்மராஜ தசமி
3	15	செ	ஏகா58-55	மகம்51-20	சித்60	கடன் நிவர்த்திக்க
4	16	புத	து55-8	பூரம்49-38	அமி60	வைஷ்ணவ ஏகாதசி
5	17	விய	திர49-25	உத்தி45-58	ம45-58சி	பிரதோஷம்
6	18	வெ	சது59-20	அஸ்த40-50	அ40-50சி	கரிநாள்
7	19	சனி	○ 34-18	சித்தி34-38	ம34-38அ	சித்திராபௌர்ணமி
8	20	ஞா	பிர25-8	சுவாதி27-45	சி27-45ம	சைத்ராபகுளம்
9	21	திங்	துதி16-18	விசாக20-38	ம20-38சி	துதிகைஸ்ரார்த்தம்
10	22	செ	திரி7-33	அனு13-50	சி13-50ம	அவமாகம்
			சது59-20			சவுத்தி திதி
11	23	புத	பஞ்51-43	கேட்7-43	சித்7-43ம	பொன்-சந்திப்பு
12	24	விய	சஷ்46-18	மூலம்2-40	சித்60	7-8½முகூர்த்தம்
13	25	வெ	சப்41-53	பூராட59-0	சி56-55ம	விதைவிதைக்க
14	26	சனி	அஷ்39-5	உத்ரா56-55	சித்60	ஸ்ரீரங்கம்கருடசேர்
15	27	ஞா	நவமி38-3	திரு56-28	ம57-30சி	கரிநாள் [வை
16	28	திங்	தச38-25	அவிட்57-30	சித்60	வியாபாரம் செய்ய
17	29	செ	ஏகா40-15	சதை60	மர60	மரணயோகம்
18	30	புத	துவா43-3	பூரட்3-5	அ3-50சி	ருதுசாந்திஇரவு6½
19	1	விய	திர46-50	உத்தி8-38	சித்60	பிரதோஷம்
20	2	வெ	சது51-58	ரேவதி14-13	அமி60	கிருஷ்ணசதுர்த்தசி
21	3	சனி	● அ56-38	அசுவ20-30	சித்60	அமாவாசைகத்திரி
22	4	ஞா	பிர60	பரணி27-20	சித்60	வைசாகசுத்தம்
23	5	திங்	பிர1-38	*கிருத்34-33	ம34-33அ	கிருத்திகை
24	6	செ	துதி8-20	ரோக41-58	அ41-58சி	பரசுராமஜயந்தி
25	7	புத	திரி14-30	மிருக49-30	சித்60	சர்த்துமுறை
26	8	விய	சது20-30	திருவா56-43	ம56-43	பிரயாணம் விலக்க
27	9	வெ	பஞ்26	புனர்60	சித்60	சஷ்டி, வித்யாரம்ப
28	10	சனி	சஷ்30-35	புனர்3-8	சித்60	ஜபம் பூர்த்திசெய்ய
29	11	ஞா	சப்33-48	பூசம்8-28	சித்60	கங்கோற்பத்தி
30	12	திங்	அஷ்35-13	ஆயில்12-13	சி12-13ம	நவக்ரகசாந்திசெய்
31	13	செ	நவமி34-40	மகம்14-5	சித்60	விஷ-புண்யகாலம்